Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET COLOMBO—12.

திறம் சலவைக்கு
மில்க் வைற் சோப்

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

சுதந்திரன் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 ஆவணி திங்கள் 21-ம் நாள் (6—9 1959) ஞாயிற்றுக்கிழமை ற.அவ்வல் பிறை 2 இதழ் 14

# தமிழர்களுக்கு வெளியேற்ற 'நோட்டீஸ்'

## ஆண்டுகணக்கில் உழைத்ததும் ஆயிரமாயிரமாக செலவழித்ததும் பாழ்

## பாடுபட்டவர்கள் பலன் அனுபவிக்க வழியில்லை

### முந்திய அரசாங்கத்திடமிருந்து வவனியாவில் நிலம் பெற்றவர்களுக்கு இப்போது நேர்ந்துள்ள கதி

(சுதந்திரன் நிருபர்)

அரசாங்கத்திடமிருந்து வவனியாப் பகுதியில் காட்டு நிலம் வாங்கி அதைப் பண்படுத்திப் பயிர் செய்து வந்த மத்தியதர வகுப்பாருக்கெல்லாம் இப்போது திடீரென்று வெளியேற்ற நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வாங்கிய நிலத்துக்கு ஆயிரமாயிரமாகச் செலவழித்தும் அதில் வருஷக்கணக்கில் உழைத்தும் வந்தவர்கள், பாடுபட்டதற்குப் பலன் அனுபவிக்காமல் நடையைக் கட்ட வேண்டிய நிர்ப்பந்தத்தை வவனியாவில் காணி பெற்ற தமிழர்களுக்கு அரசாங்கம் உண்டாக்கியிருக்கிறது.

இப்படியான நோட்டீஸ்கள் அனுராதபுரம், பொலநறுவைபோன்ற இதர பிரதேசங்களில் காணி பெற்ற மத்தியதர வகுப்பாருக்கு (சிங்களவர்களுக்கு) கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது.

மத்திய வகுப்பாருக்கு நிலம வழங்கும் திட்டத்தின் பேரில் முந்திய அரசாங்கத்தால் பல தமிழர்களுக்கு (பல பேரைக்கொண்ட 103 குழுக்கள்) வவனியாவில காட்டுப் பூமி பத்து பதினைந்து ஏக்கர் வீதம் வழங்கப்பட்டது. வருடாந்தகுத்தகை முறையிலேயே வழங்கப்பட்டது. என்றாலும் காடு வெட்டி நிலத்தைத் திருத்திய பின்னர் பாடுபட்டவருக்கு அது சொந்தமாக்கப்படும் என்ற விளக்கத்தின் பேரில்தான் விஷயம் நடந்தது.

#### நஷ்டம், நஷ்டம் ஒரே நஷ்டம்

நிலம் பெற்றவர்கள் காடு வெட்டவும் பூமியைப் பண்படுத்தவும் பெருந்தொகை பணம் செலவு செய்தார்கள். அங்கே வீடுகள், கூட்டுறவு அலுவலகங்கள் முதலானவையெல்லாம் அமைத்தார்கள். முதலில் சேனைப் பயிர் செய்துவிட்டு பின்னர் நெல் சாகுபடி செய்யத் தொடங்கினார்கள். அநேகமாக 1956ல்தான் தொடங்கினார்கள். அப்போது கடும் வரட்சியால் பெரும் நஷ்டம். பின்னர் 1957 பெரு வெள்ளத்தால் பெரு நஷ்டம் அப்புறம் கடந்த 58வது வருடத்தில் இனக் கலவரத்தால் வேலை பாதிக்கப்பட்டது. அதனால் அதிக நஷ்டம். இப்படியே தொடங்கிய நாளிலிருந்து நஷ்டப்பட்டு வருபவர்கள் இனிமேல்தான் ஏதாவது இலாபம் பெற வேண்டியதிருக்கிறது.

#### பின்னால் வரும் திட்டத்துக்கு இபபோது பழி வாங்கல்

அந்தத் தருணம் பார்த்து அரசாங்கம் அவர்களுக்கு வெளியேற்ற உத்தரவு பிறப்பித்திருக்கிறது. நீர்ப்பாய்ச்சு வசதியோடு உள்ள நிலங்கள் மத்தியதர வகுப்பாருக்கு கொடுப்பதில்லை என்ற ஒரு திட்டத்தின்பேரில்தான் அரசாங்கம் இப்படிச் செய்திருக்கிறது. ஆனால் அந்தத் திட்டம் இப்போது இல்லை. அது நடைமுறைக்கு வர இன்னும் பல ஆண்டுகள் செல்லலாம். பின்னால் எப்பொழுதோ வரவிருக்கும் ஒரு திட்டத்துக்காக முந்திய அரசாங்கத்திடமிருந்து நிலம் வாங்கிய தமிழரை மாத்திரம் தேடிப் பிடித்து பண்டாரநாயகா அரசாங்கம் இப்படி பழிவாங்குகிறது.

#### அரசாங்கத்தின் உறுதி காற்றில் பறந்தது

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததும் வவனியாவில் காணி பெற்றவர்களை அழைத்து ஒரு விசாரணை நடத்தியது. அதைத் தொடர்து செனட்டர் நடேசனுக்கும், திரு சுந்தரலிங்கத்துக்கும் இன்னும் சில பிரமுகர்களுக்கும் ஒரு உறுதி அளித்தது வவனியாவில் காணி பெற்ற தமிழர்களுக்கு குடியிருப்பு நிலச் சட்டப்படி அந்தக் காணிகளைச் சொந்தமாக்கிவிடுவதாக உறுதி அளித்தது. அந்த உறுதியை மற்றவைகளைப்போலக் காற்றில் பறக்க விட்டுவிட்டு இப்போது வெளியேற்ற உத்தரவு பிறப்பித்திருக்கிறது,

இலங்கை:

## வானொலி செய்திகளில் வெளி உலகம் பற்றி உளறல்

## இனிமேல் அது குறையும்

### உள்ளூர் செய்திகளுக்கு முக்கியத்துவம்

#### சீர்திருத்தத்துக்கான ஏற்பாடுகள் தயார்

[சுதந்திரன் நிருபர்]

இலங்கை வானொலியில் தரப்படும் செய்திகள்பற்றி ஏகப்பட்ட புகார்! சதா வெளி உலக சம்பவங்கள்பற்றிய உளறல்தான் வருகிறதேயொழிய உள்ளூர் சம்பவங்கள்பற்றிப் போதியளவு சொல்லக் காணோமேயென்று குறைப்படாதார் இல்லை என்றே கூறலாம்.

இவர்களுக்கு எல்லாம் ஆறுதல் அளிக்கும் செய்தி ஒன்று சுதந்திரன் நிருபருக்கு கிடைத்திருக்கிறது. இனிமேல் உள்ளூர் செய்திகளுக்கே செய்தி அறிக்கையில் அதிகப்படியான இடம் ஒதுக்குவது என்று தீர்மானித்திருக்கிறார்கள். இதையடுத்து இலங்கையெங்கிலுமிருந்து செய்திகள் சேகரிப்பதற்கான விரிவான ஏற்பாடுகளையும் செய்ய இருக்கிறார்கள்.

#### அமைச்சின் சுற்று நிருபம்

ஒலிபரப்பு அமைச்சு இலங்கை வானொலியின் பெரிய அதிகாரிக்கு அனுப்பியுள்ள சுற்று நிருபம் ஒன்றில் ஏற்பாடுகளைத் தொடங்குவதற்கான உத்தரவு பிறப்பித்திருக்கிறது என்று தெரிய வருகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

## பால் சபை தருவது பசும் பாலா? எருமைப் பாலா?

### மன்னம்பிட்டி பால் வியாபாரி கூறிய தகவல்

(சுதந்திரன் நிருபர்)

''கொழும்பு போன்ற இடங்களில் தேசிய பால் சபையினால் வழங்கப்படும் பால் பசுப் பாலா? அல்லது எருமைப் பாலா? பசுப்பால் என்ற பெயரில் விற்கப்படும் அவ்வளவும் தண்ணீர் கலந்த எருமைப் பாலாகத்தான் இருக்க வேண்டும்''- இவ்வாறு மன்னம்பிட்டி என்னும் இடத்தைச் சேர்ந்த பால் வியாபாரி ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

கொழும்பு போன்ற இடங்களில் தேசிய பால் சபை விநியோகம் செய்து வரும்

(9-ம் பக்கம் பார்க்க)

இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது!



ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(Richelet's Pectoral)

ஒரு பிரசித்திபெற்ற தயாரிப்பு. குறிப்பாக சுவாச சுய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, நோய்வுக்கு இது ஒரு வரம் பிரசாதம்!

மூச்சுவிடுதல் தடைப்படுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தையும் ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அசட்சியமாயிருத்தல் கூடாது.

ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்குவரத்தைச் சமநிலைப்படுத்துகிறது. பிசின்-நுரை-போன்ற சளியை இளகச் செய்து காறி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சு வலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு, தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல் காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரிச்லெட்ஸ் பெக்டோரல்

நோய்வினால் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பூரண குணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

170 ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் சங்க இயக்கம்

## அங்கீகாரத்திற்குப் போராட்டம்-2

(முன் தொடர்ச்சி)

தொழிற் சங்கங்களின் பல அம்சங்களைப்பற்றியும் திர்க்கமான விசாரணை செய்து அரசாங்கம் நியமித்த விசாரணைக் குழுவில் அதிர்ஷ்ட வசமாக புத்திக் கூர்மையும் தயாள சிந்தையும் உள்ள ஒரு சிலர் இடம் பெற்றனர். தொழிற் சங்கங்களின் கட்சியை மிகவும் சாணக்கியத்துடன் மிதவாதப் போக்கிலும் நியாயமானவகையிலும்தலைவர்கள் எடுத்துரைத்தனர். தொழிற் சங்கங்களின் குறிக்கோள் தொழிலாளரின் சுபீட்சத்தையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்துவதேயன்றி சமூக நன்மைக்கு எது வகையிலும் முரண்பாடான கருமங்களில் ஈடுபடுவதல்ல என்று வாதாடினர்.

### தலைவர்களின் வாதம்

தொழில் வாழ்க்கையைப் பொறுத்தளவில், நியாயமாக நடக்கும் முதலாளிமார் கொடுக்கும் அளவு வேதனத்தையும் அவர்கள் அநுமதிக்கும் நேரப் பிரமாணத்தையும் சகல முதலாளிமாரும் ஏற்க வேண்டும் என்பது தான் தொழிற் சங்கங்கள் கொண்டுள்ள நோக்கம் என்றும் தலைவர்கள் தக்கவாறு எடுத்துரைத்தனர்.

தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தம் என்னும் ஆயுதத்தைப் பிரயோகிப்பது நீதி கெட்டுப் பேராசைகொண்டு கருமம் ஆற்றும் முதலாளிமாரை நியாயமான வழியில் நடக்கும்படி நிர்ப்பந்திப்பதற்குத்தான் என்றும் விரித்துரைத்தனர்.

குறித்த அநியாயமான முதலாளிகளின் கீழ் வேலை செய்யும் தொழிலாளிகள் தங்கள் சேவைக்கு ஒரு ஒதுக்கல் விலையை (Reserve Price) நிலைநாட்டும் நோக்கமாகவே தான் தொழிற் சங்கங்கள் பெருந் தொகைப்பணம் திரட்டுகின்றன என்றும் தலைவர்கள் வாதித்தனர். சுருங்கக் கூறின் ஒரு தரப்பட்ட வேதன வரிசையையும், ஒரு தரப்பட்டநேரப்பிரமாணத்தையும் நிலைநாட்டுவதும், தொழிலாளர்கட்குநட்புறவு உதவிப் பணம் வழங்குவதும் தான் தொழிற் சங்கங்களின் குறிக்கோள் என்று விசாரணைக் குழுவினர் மதிக்கும் வகையில் தொழிலாளர் கட்சி சமர்ப்பிக்கப்பட்டது.

### முதலாளிமாரின் முதலைக் கண்ணீர்

முதலாளிமார் கட்சி இவ்வளவு நுட்பமாகவோ, மிதவாத முறையிலோ எடுத்துரைக்கப்படவில்லை. பலாத்காரப் பாதையில் போகும் சில்லறைத் தொழிலாளர் குழுக்களைக் கண்டிக்காது பொறுப்பு வாய்ந்தனவும் மிதவாதப்போக்கில் நடாத்தப்படுவனவும் ஆற்றல் வாய்ந்த தலைவர்களால் வழி காட்டப்படுவனவுமான தேசிய தொழிலாளர் ஸ்தாபனங்கள்மேலேயே தம் துவேஷத்தை எடுத்து வீசினர். நட்புறவு நயங்கட்கு உபயோகிக்கப்படும் பெருந் தொகை நிதித் திரளைச் சுட்டிக்காட்டி தொழிற் சங்கங்களைத் திட்டுவதிலும் ஈடுபட்டனர். முடிவாகத் தனித் தொழிலாளிக்கு முதலாளியுடன் பேரம் பேசச் சுதந்திரம் வேண்டும் என்று முதலைக் கண்ணீர் வடித்தனர்.

### தொழிற் சங்கப் பதிவுக்கு சிபார்சு

விசாரணைக் குழு தொழிலாளர் கட்சியை நியாயமானது என்றே பெரும்பாலும் அங்கிகரித்து தொழிற் சங்கங்களை சட்ட ரீதியான ஸ்தாபனங்களாகப் பதிவு செய்தல் வேண்டும் என்று சிபார்சு செய்தது. ஆனால் வேறு விடயங்களில் விசாரணைக் குழுவில் ஒற்றுமை ஏற்படவில்லை. "மைனாரிட்டி" அறிக்கை "மஜோரிட்டி" அறிக்கை என்று முரண்பாடான சிபார்சுகள் வெளியிடப் பட்டன.

### மைனாரிட்டி அறிக்கை

"மைனாரிட்டி" அறிக்கை தொழிற் சங்கங்கட்கு சாதகமாக இருந்தது. தொழிற் சங்கங்களின் ஆர்ப்பாட்டம் தீவிரமாக நடாத்தப்பட்டபடியாலும் "மைனாரிட்டி" அறிக்கை தயாரித்தவர்கள் தம் சிபார்சுகளை மிக்க சாதுரியமாக எடுத்துரைத்து அதற்கியைந்த சட்ட நகல்களையும் சமர்ப்பித்தமையாலும் அரசாங்கம் "மைனரிட்டி" அறிக்கையைத் தழுவியே 1871-ல் சட்டம் இயற்றினது.

"மைனாரிட்டி" அறிக்கையின் அடிப்படைச் சித்தாந்தத்தைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

1. இதர நபர்களால் செய்யப்பட்ட காலை தண்டனைக்குரிய குற்றமாக கணிக்கப்படாத செயல் எதுவும் தொழிலாளியால் செய்யப்பட்ட பொழுது மாத்திரம் தண்டனைக்குரிய குற்றமாகக் கருத முடியாது.
2. தனி நபர் ஒருவன் செய்யும் காலை குற்றமாகக் கருதப்படாத செயல் எதுவும் பல பேர் திரண்டு செய்யும் பொழுது குற்றமாகக் கருத முடியாது.

### 1871ல் வந்த சட்டம்

இதன் பிரகாரம் 1871-ல் இயற்றப்பட்ட சட்டத்தின் விசேட அம்சங்கள் பின் வருமாறு.

சோ. வன்னியசிங்கம் B. Com., M. Sc. (Econ) (Lond).
பொருளியல் விரிவுரையாளர்:
இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி,
அக்குவைனஸ் பல்கலைக் கழக கல்லூரி.

1. வேலை நிறுத்தம் முதலாய அம்சங்களைத் தம் தந்திரங்களாகக் கொண்ட காரணத்தால் தொழிற் சங்கங்கள் சட்டத்திற்கும் புறம்பான ஸ்தாபனங்கள் ஆகமாட்டா. அத்தகைய சங்கங்கள் பதியப்பட்டு சட்டரீதியான ஏகத்துவம் (Legal Personality) வாய்ந்த ஸ்தாபனங்களாக இயங்கலாம். பணங்கள் இதர சொத்துக்களைக் கையாளவும் அவற்றின் தொடர்பால் சகல சட்டப்படியான நடவடிக்கை எடுக்கவும் அவை லாயக்குள்ளவை.
2. அச் சங்கங்களின் உள் நடவடிக்கைகள் (Internal Affairs) அதாவது அங்கத்தவர்கட்கும் சங்கங்கட்கும் இடையேயுள்ள தொடர்புகளை சங்கங்களே தீர்க்கும் விசேட உரிமையுடையன. அத்தகைய தகராறுகளை நீதித்தலங்கள் முன் கொண்டுவர எவருக்கும் உரிமையில்லை.
3. தொழிற் சங்கங்கட்கும் முதலாளிமாருக்கும் இடையே ஏற்படும் வேதன வகையைப் பற்றிய கூட்டு ஒப்பந்தங்களை அனுசரிக்குமாறு தொழிற் சங்கங்களைக் கட்டாயப் படுத்தவோ நிர்ப்பந்திக்கவோ அல்லது அநுசரிக்காத காலை தொழிற் சங்கங்களிடம் நஷ்ட ஈடு கோரி வழக்குத் தொடரவோ எவருக்கும் உரிமையில்லை.

### கிறிமினல் விதித் திருத்தச் சட்டம்

மேற் கூறிய அம்சங்கள் மிக மகத்தான உரிமைகளை உள்ளடக்கியவையாகும். ஆயினும் இத் தொழிற் சங்கச் சட்டத்துடன் தொடர்புடையதான கிறிமினல் விதித் திருத்தச் சட்டத்தையும் அதே சமயத்தில் இயற்றிவிட்டனர். அந்தச் சட்டம் தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தத்தைக் கையாளுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க இடையூறாக இருந்தது. அதாவது சக தொழிலாளர் வேலைக்குப் போகாது வசீகரிக்கவோ, ஏவவோ முடியாமல் அச் செயல்களைத் தண்டனைக்குரிய குற்றமாக விதித்தது.

**ஆங்கிலம்**

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.

**சுதந்திரன் சந்தா விபரம்**

வாரந் தோறும் சுதந்திரனைத் தவருமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00
(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

தபால் பெட்டி 1183, கொழும்பு.
சர்குலேஷன் மனேஜர் சுதந்திரன்.

உங்கள் நீடித்த எழிலுக்கு
**'எலைட்'**
'சுப்பர்லோன் ஜோர்ஜட்
என்னும் அழகின் அணிகலனை அணியுங்கள்.

பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.

இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது

**'எலைட்'**
சுப்பர்லோன் ஜோர்ஜட்

அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.

**குண்டன்மால்ஸ்,**
லிமிட்டெட்,
கொழும்பு.

# இலஞ்ச லாவண்யம்

— நவீனன் —

இலஞ்சம் ஒரு மர்மம் பொருந்திய கலை என்றே கூறிவிடலாம். இக்கலைக்கும் இறைவனுக்கும் நெருங்கிய உறவு உண்டு. கடவுள் சம்பந்தப்படாத கலை எதுதான் உலகில் இருக்கிறது? 'நேர்த்திக்கடன்' என்பதன் அர்த்தம் பலருக்கும் தெரியும் என நினைக்கிறேன். தான் நினைக்கும் கருமம் பூர்த்தியடைய வேண்டும் என விரும்பும் ஒருவர் 'கடவுளே! உனக்கு இன்னது தருவேன், அனுக்கிரகம் செய்'. என்று நேர்ந்துவிடுகிறார். அவர் விருப்பம் நிறைவேறிவிட்டால் இறைவனே திருவருள் பாலித்து காரியசித்திக்கு வழி காட்டியுள்ளார் என்ற அனுபவ சித்தாந்தத்தினால் கடவுளுக்கு தாம் அளிப்பதாகக் கூறிய கடனைக் கொடுத்துவிடுகிறார். இதுவே 'நேர்த்திக்கடன்' எனப்படும்.

நேர்த்திக்கடன் விஷயமாக கடவுளுக்கு ஏற்படும் சங்கடம் சொல்லி முடியாது. ஒரு விஷயத்தில் இருவரிடையே தகராறு ஏற்பட்டால் யாருக்கு உறுதுணையாக நிற்க முடியும் அவரால்?

### கடன்

'நேர்த்திக்கடன்' என்ற வாக்கியத்தை நினைக்கும் போது இந்தப் பரந்த உல[illegible] இறது என்பது ஞாபகத்துக்கு வருகிறது. சட்ட விரோதமான செயலாகையால், தற்பாதுகாப்பாக 'கடன்' என்று இலஞ்சம் பெறுதல் ஒரு உத்தியெனக் கருதப்படுகிறது. உதவி கோரி வரும் ஒருவரிடம் 'எனக்கு இன்னது கடனாகக் கொடு' என்று ஒரு 'போடு' போட்டுத் தமக்குரிய இலஞ்சத்தைப் பெற்று விடுகிறார் உதவி செய்பவர். கடன் கொடுப்பவர் நிலை இங்கு ஒரு தர்ம சங்கடமான கட்டத்திலே இருப்பதை உணரவேண்டும். உதவி செய்பவர் கேட்கும் பொருளை மறுக்க முடியாது முதலிலும், கொடுத்த பொருளைத் திருப்பிக் கேட்க முடியாதபடி பின்னும் தவியாய் தவிக்கிறார். கைமாற்றாகப் பெறுவதுதான் இந்த இலஞ்சம்.

இலஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் உண்ணுவதும் உறங்குவதும் போலச் சர்வ சாதாரண நிகழ்ச்சிகள் ஆகிவிட்டன இன்றைய உலகில்.

ஒரு நாட்டிலே (எந்த நாடு என்று தயவு செய்து கேட்காதீர்கள்) லஞ்சத்தின் கை மிகவும் ஓங்கி விட்டது. எந்தப் பக்கம் திரும்பினாலும் "இலஞ்ச ஊழல்", "இலஞ்ச ஊழல் புகார்", "இலஞ்ச ஊழல் புகார் விசாரணை", "இலஞ்ச ஊழல் புகார் விசாரணை சபை" என்ற முழக்கம் காதைக் குடைந்தது.

தொல்லை தாங்க மாட்டாத நிலையில் நமது நவீனனை நாடினோம். "என்ன இதெல்லாம்? உன் ஆராய்ச்சி வேலையைத் தொடங்கு. அறிக்கை சமர்ப்பித்து விளக்கம் வழங்கு" என்று வேண்டிக் கொண்டோம். அவரும் அப்படியே செய்தார். அதை வாசகர்களுக்கு நாம் இங்கு வழங்குகிறோம்.

### சம்பளமும் கிம்பளமும்

சம்பளம் பெறும் ஒரு சிலர் கூடவே 'கிம்பளம்' பெறுவதைப்பற்றி நீங்கள் அறிந்திருக்கலாம். 'கிம்பளம்' என்றவுடன் ஏன் அதிக தூரம் யோசிக்கிறீர்கள்? இலஞ்சத்திற்கு இடப்பட்டுள்ள இன்னொரு பெயர் தான் இது.கிம்பளம் பெற்று ஆடம்பர வாழ்வை நடாத்த எத்தனையோ பேர்கள் நம்மிடையே கரந்துறையத் தான் செய்கிறார்கள். துப்பு மூலம் தன் உண்மையை அம்பலப்படுத்த முடியும். எல்லோரும் கிம்பளம் பெற முடியும் என்பதல்ல விஷயம். 'ஐயா தயவு இல்லாமல் காரியம் நடக்காது' எனக் கருதப்படும் இடத்திலே 'கிம்பளம்' நிச்சயம் தன் ஆட்சியை வலியுறுத்தத்தான் செய்யும். 'கைக் கூலி' என்று இன்னொரு நாமதேயமும் இதற்குண்டு.

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




க. சோமசுந்தரம், கந்தானை

கே: ஐயா குயுக்தியாரே, தாங்கள் உண்பதற்காக வாழ்கிறீர்களா, அல்லது வாழ்வதற்காக உண்கிறீர்களா?

ப: இரண்டுமில்லை. வாழ்கிறேனே என்பதற்காக உண்கிறேன் வாய்க்கு ருசியானவற்றை.

ஃ

என். எஸ். சின்னத்துரை, பதுளை

கே: பருவத்துடிப்புள்ள ஆண்கள் பெண்கள் இருபாலாரும் அதிகம் வெறுப்பது எதை?

ப: காதல் கானல் நீராவதை.

ஃ

என். வி. இராசதுரை,
நாயன்மார்க்கட்டு

கே: மட்டக்களப்பு எம். பி. திரு செ. இராசதுரை ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் என்று என்னுடைய நண்பர் சொல்கிறார். அவர் ஒரு 'பிஸ்னஸ்மன்' அதாவது வியாபாரி என்கிறேன் நான். சரிதானே.

ப: தவறு, தவறு. அவர் ஒரு அரசியல்வாதி.

ஃ

'திரு', புன்னாலைக்கட்டுவன்.

கே: பட்டிருப்பின் பாதி மந்திரி எதிர் மான சிங்க(ள)ம் 'அப்பே ஆண்டுவ'வில் எப்போதாவது முழு மந்திரிப் பதவி கிடைக்கப் பெறுவாரா? எந்தப் பதவியைக் கொடுக்கலாம்?

ப: அவருக்காவது கிடைப்பதாவது! போனால் போகிறது என்று ஒன்றைக்கொடுக்கலாமா என்ற ஆலோசனை ஆரம்பமாவதற்கு முன்னரே கலால் இலாகாவைத் தமக்குத் தரும்படி தாமே தண்டனிட்டுக்கொள்வார். ஆனால் காலித் தஹா ஆதற்குக் குறுக்கே நின்று கெடுத்து விடுவார்.

ஃ

இளங்குமரன்,
கொழும்புத்துறை.

கே: வாழ்க்கை எப்படிப் பட்டது?

ப: வாழத் தெரிந்தவர்களுக்கு அது ஒரு சினிமா. வாழத் தெரியாதவர்களுக்கு 'எனிமா'.

கே: நீங்கள் எப்போதாவது மறு உலகைப்பற்றிச் சிந்தித்ததுண்டா?

ப: கிடையாது. இந்த உலகப் பிரச்னைகளைப் பற்றியே சிந்தித்து ஒரு முடிவுக்கு வர முடியாமலிருக்கையில் மறு உலகைப் பற்றி வேறு சிந்தித்து மனதைக் குழப்பிக்கொள்ள வேண்டுமா?

கே: மதம் என்றால் என்ன?

ப: மதம் என்றால் வேஷம். வேஷம் போடுவதைத் தானே இன்று மதம் என்று பலரும் நினைக்கிறார்கள்.

ஃ

செல்வி டெய்ஸி ஜோசப்
முரசுமோட்டை

கே: காதல் எனும் தீவிலே நான் ஆட்சி புரிய விரும்பினால் அதற்கு என்ன செய்ய வேண்டும்.

ப: அதே நினைவோடு கண்களை மூடிக்கொண்டு நன்றாகப் படுத்து உறங்க வேண்டும். கனவில் எல்லாம் ஆகிவிடும்.

ஃ

சுடர், கொழும்பு

கே: கொழும்பு மாநகரில் நவநாகரிக நாரீமணிகள் வாடகைக் கார்கள் ஓட்டப் போகிறார்களாமே, உண்மையா?

ப: ஓட்டுபவர்களையெல்லாம் உலகுக்கு அளித்து ஆட்டிப் படைப்பவர்கள் தாமே ஓட்டப் புகுவதில் ஒன்றும் ஆச்சரியமில்லையே!

ஃ

ஆ. செந்தில்நாயகம்,
யாழ்ப்பாணம்

கே: பிரசவிப்பது பெண்ணும் பால் கொடுத்து வளர்ப்பது ஆணுமாக இருக்கக்கூடாதா?

ப: அப்படியானால் இப்போது பால் கொடுத்து வளர்ப்பது பெண் என்கிறீர் இல்லையா? பெரிய இடங்களில் போய்ப் பாருமய்யா. யார் புட்டியும் கையுமாக இருக்கிறார்களென்று.

ஃ

க. இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி

கே: திருமணம் சிலருக்கு கசப்பாக இருப்பதேன்?

ப: 'லைசென்ஸ்' பெறாமல் துப்பாக்கி பாவிப்பவர்களை "ஏன் இப்படி?" என்று கேட்டால் சரியான காரணம் சொல்லவா செய்கிறார்கள்?

ஃ

சி. உ. இராசையா, ஸ்பிரிங்வலி

கே: தாய்மொழிப் பற்றும் தன்மான உணர்வும் கொண்ட தமிழன் இன்று

> மிஸ்டர் குயுக்தியார்
> C/o சுதந்திரன்.
> த. பெ. 1183
> கொழும்பு.—12

எதை விரும்புகிறான்? எதை வெறுக்கிறான்?

ப: விரும்புவது சுதந்திர வாழ்வை, வெறுப்பது அதற்குத்தடையாகஇருக்கும் எட்டப்பர் கூட்டத்தை அதாவது காட்டிக்கொடுக்கும் கயவர் கும்பலை.

ஃ

பி. முஹம்மது மீரான்

கே: சகல துறைகளிலும் ஆண்களோடு சம உரிமை கோரும் பெண்கள் பஸ்ஸில் இடநெருக்கடி காரணமாக நின்றுகொண்டிருக்கும் போது ஆசனத்திலிருக்கும் ஆண்களைப் பார்த்துப் பல்லைக் காட்டுவதேன்?

ப: அவர்களை இளிச்சவாயர்களாக்கி எழுப்பிவிடுவதற்குத்தான். ஆனால் வெற்றி-தோல்வி, காட்டும் பல்லின் தகுதியையும் கொட்டும் பார்வையின் ஆழத்தையும் பொறுத்திருக்கிறது.

ஃ

ஆ. லோகேஸ்வரன்.
இரத்தினபுரி

கே: பிரதமர் பண்டாரநாயகா ஆட்சி ஆரம்பித்த காலத்தில் ஒவ்வொரு புதன் கிழமையும் வாராந்தம் பத்திரிகை நிருபர்கள் மாநாடு கூட்டுவாரே, இப்பொழுது அவற்றின் கதி என்னவாயிற்று?

ப: அதோ கதிதான். "புதுமைக்கு வண்ணான் பறை கொட்டி வெளுப்பான்" என்றொரு நாடோடிப்பழமொழி உண்டல்லவா, கேள்விப்பட்டதில்லையா?

ஃ

மனோகரி, தம்பலகமம்.

கே: உதவி மந்திரி எதிர்மான சிங்க(ள)ம் ஆங்கில அறிவுடையவரா?

ப: தமிழறிவிற்கே திண்டாடும் அவரிடம் போய் ஆங்கில அறிவு என்றால் [illegible] வார்? ஆயினும் ஒன்று, [illegible] (Yes-No) எங்கே எப்போது பாவிக்க வேண்டும்

என்பது அவருக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது.

ஃ

பி. கே. முத்து, லிண்டுலா.

கே: ஓய் குயுக்தியாரே, நீங்கள் திடீரென இறந்துவிட்டால் உங்கள் வேலையை யார் கவனிப்பார்கள்?

ப: நிச்சயமாக நீரல்ல. இதை நம்பும்.

ஃ

எச். எம். எம். இஸ்மாயில்,
வாழைச்சேனை.

கே: விதியை நம்பித் தானே எல்லோரும் வாழ்கிறார்கள். நீங்கள் மட்டும் இதற்கு விலக்கா?

ப: மதியற்றவர் பேச்சு இது. விபூதியை நம்பி வாழும் சாமியார்கள் இல்லையா?

ஃ

மா. இராமசாமி, வெள்ளவாயா.

கே: இந்தியர்கள் இலங்கையிலிருந்து வெளியேற்றப் பட்டால் இந்த நாட்டின் எதிர் காலம்......?

ப: இருண்டுவிடும் என்பது இந்தியர்களுக்கு எதிராக ஓலமிடுபவர்களுக்கே தெரியுமே.

ஃ

வி. கே. திலகம், பிளக்வூட்.

கே: ஆபத்து இல்லாத பிரயாணம் எது?

ப: மனோரதத்தில் செல்வது ஒன்றுதான்.

ஃ

கே. கந்தையா, செங்கலடி.

கே: 'பாடுபட்டால் பலன் கிட்டும், என்ற தத்துவத்தை பிச்சை எடுப்பவர்கள் ஏன் உணர்கிறார்களில்லை?

ப: அவர்கள் உணரவில்லையென்று யார் சொன்னார்கள்? பாடுபட்டுத்தானே பிச்சை எடுக்கிறார்கள்; பலன் காண்கிறார்கள். வெள்ளிக்கிழமை வந்தால் எத்தனை வீட்டு வாசல்களுக்கு நடக்கிறார்கள்! மற்ற நாட்களில் எவ்வளவு சக்தியைச் செலவு செய்து சத்தம் போட்டுச் சதம் பெறுகிறார்கள்!


## யாழ்ப்பாணப் பெண்மணிகளுக்கு
### ஓர் அரிய சந்தர்ப்பம்

உலகப் பிரசித்தி பெற்ற
அரஸ்கோ தையல் மெஷினின்

ஏக விநியோகஸ்தர்களான
ஆர். அரசரத்தினம் அன்ட் கம்பனியார்

தங்கள் யாழ்ப்பாணக்கிளை ஸ்தாபனத்தில், தையல் மெஷினில் செய்யக்கூடிய எல்லா விதமான நூதன சித்திர வேலைகளையும். பெண்கள், சிறுவர், சிறுமியரின் சகல ஆடைகளையும் நவீன உயர்ந்த முறையில் வெட்டவும், தைக்கவும், சாரிகள் மேசைத் துணிகள், மற்றும் சகல பொருட்கட்கும் வர்ணந் தீட்டவும், சுவெட்டர், கால் மேஸ், தொப்பி முதலியவை கம்பளி நூலால் பின்னவும், மற்றும் சகலவித தையற் கலைகளும் மிகவும் குறைந்த கட்டணத்துடன் கற்றுக் கொடுக்கின்றனர்.

கற்றுத் தேர்ச்சியடைந்தவர்கட்குத் தராதரப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இவ்வருந்தருணத்தைப் பயன்படுத்த விரும்பும் பெண்மணிகள் கீழ்க்காணும் விலாசத்திற்கு நேரிலாவது கடிதமூலமாவது மனுச் செய்க.

## ஆர். அரசரத்தினம்
அன்ட் கம்பெனி,
43, ஸ்டான்லி, ரோட், யாழ்ப்பாணம்.





நமக்குத் தொழில் கவிதை என்ற வெண்பாப் போட்டியில் கவிதை எழுத விரும்புவோர் யாவரும் கலந்து கொள்ளலாம். கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் எத்தனை வெண்பாக்கள் வேண்டுமானாலும் எழுதலாம். கவிதை அஞ்சல் அட்டையில் (Post Card) மட்டுந்தான் எழுதப்பட வேண்டும். ஒரு அட்டையில் ஒரு வெண்பாவுக்கு மேல் எழுதக் கூடாது. கீழே தரப்பட்டிருக்கும் அச்சிட்ட முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அச்சிட்ட முகவரி ஒட்டப் பெறாத அட்டைகள் கவனிக்கப்படமாட்டா.

## போட்டி இல : 9·

இந்த எட்டாவது வெண்பாப் போட்டிக்கு "காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே?" என்ற முதலடி தரப்பட்டிருக்கிறது. இதை வைத்தே வெண்பா எழுதப்பட வேண்டும். இலக்கியச் சுவைக்கும், நகைச் சுவைக்கும், அங்கதச் சுவைக்கும் (Satire) முக்கிய மதிப்பு அளிக்கப்படும். மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற வெண்பாக்கள் சுதந்திரனில் வெளியாகும். மிகச் சிறந்த வெண்பாவை எழுதியவருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

—ஆசிரியர் : சுதந்திரன்.

> 'நமக்குத் தொழில் கவிதை'
> C/o ஆசிரியர்,
> சுதந்திரன்,
> த. பெ. 1183,
> கொழும்பு—12.

வெண்பாக்கள்
கிடைக்க வேண்டிய
முடிவு தேதி
15—9—59

### "காட்டிக் கொடுத்த கயவர் வரிசையிலே"


## அன்பர்களே!

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானால் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

### ஸ்பேமடோன் கொம்பவுண்ட்
(Spermatone Compound)

ஒரு பிரபல ஜெர்மன் டாக்டரின் மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25
வி. பி. பி. தனி.

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,
டாக்டர்

### 'மோடர்ன் கிலினிக்'
(MODERN CLINIC)
255, காலி ரோட், கொழும்பு-4.
பம்பலப்பிட்டிய கன்வன்ட் எதிரில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தியோகத்தர் போதாமையால் வேலை

## சரியாக நடைபெறவில்லை

## அரசகரும மொழித் திணைக் களத்தில்!

## தமிழ் மொழிச் சட்டத்தை கல்வி மந்திரியே கேலிக் கூத்தாக்குகிருரே-தெரியுமா இது?

## நுண் தொழிற் கல்லூரிப் பிரவேசம்

### சம்பந்தமாக தமிழ் மாணவர்களுக்கு அக்கிரமம்

**வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் கமிட்டி நிலையில் விவாதிக்கப்பட்டபோது கோப்பாய்ப் பிரதிநிதி திரு கு. வன்னியசிங்கம் அரசாங்கத்தின் மீது பல குற்றச்சாட்டுக்களைப் பகிரங்கமாகச் சுமத்தினுர்.**

**அரசகரும மொழித் திணைக்களத்தில் திரைமறைவில் நடக்கும் தமிழ் ஒழிப்பு வேலைகளையும் ஊழல்களையும் அம்பலப்படுத்தினுர். அவருடைய பேச்சின் முதல் பகுதி கடந்த வாரம் வெளியிடப்பட்டது. இது இரண்டாவது பகுதி. தமிழ் மொழிச் சட்டம் பற்றியும் நுண் தொழிற் கல்லூரி பற்றியும் இதில் குறிப்பிடுகிருர்.**

அரசகரும மொழித் திணைக் களம் சொற்ருெகுதிகளை வெளியிட்டு வருகிறது. தமிழ்ச் சொற்ருெகுதியைப் பொறுத்தவரையில் முதலாம் பாகம் மாத்திரம் வெளியிடப்பட்டுள்ளது. ஆனுல் சிங்களத் தொகுதியில் 4 பாகங்கள் வெளிவந்துவிட்டன. தமிழிலும் பார்க்கச் சிங்களத்தில் நான்கு மடங்கு வேலை செய்யப்பட்டிருக்கிறது என்பதையே இது காட்டுகிறது. இத்திணைக் களத்தில் நிலவிவரும் தமிழ் ஒழிப்பு மனப்பான்மையே தமிழில் இவ்வளவு குறைந்த வேலை நடைபெற்றதற்குக் காரணமாகும்.

### வேலை நடைபெறவில்லை

தலைவரவர்களே! மருத்துவ கலைச் சொற்களையும் சட்டக் கலைச் சொற்களையும் தமிழிற் தயாரிப்பது பற்றிக் குறித்த விசேட ஆணையாளருக்கு எழுதியதுடன் இச் சபையிலும் ஒரு கேள்வியை நான் எழுப்பியது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். பிரதமர் அப்பொழுது இச் சொற்ருெகுதிகள் தயாரிக்கும் வேலை மேற்கொள்ளப்படும் என மிகக் கண்ணியமாக இச் சபைக்குத் தெரிவித்தார். மருத்துவ, சட்ட சொற்ருெகுதிகள் பற்றிய வேலையெதுவும் இதுவரை நடைபெறவில்லையென்பது கௌரவ பிரதம மந்திரியாருக்குத் தெரியுமா? அச் சொற்களைச் சேகரிக்கும் வேலைதானும் இன்னும் செய்யப்படவில்லை.

### உத்தியோகத்தர் நியமனம்

கல்விப் பிரிவிலும் ஏறக்குறைய இதே நிலைதான் நிலவுகிறது எனச் சொல்லலாம். ஆனுல் இப்பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள சிவில் சேவை அதிகாரி-தன் மொழிப்பகுதிக்குப் பொறுப்பான பிரதி ஆணையாளர் தமக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் குறைந்த தொகையான உத்தியோகத்தர் மூலம் தம்முல் இயன்றவரை பிரயாசைப்படுகிருர். தமிழ்ப் பிரிவிலுள்ள உத்தியோகத்தர் தொகைபோதாதென நாம் பலமுறை பிரதம மந்திரியரிடம் முறையிட்டுள்ளோம், இச் சபையிலும் பேசியுள்ளோம். ஆனுல் எவ்வித பலனும் கிட்டவில்லை. ஒரு காலியான இடமிருக்கிறது அதற்குத் தமிழ் உத்தியோகத்தர் ஒருவரை நியமியுங்கள் என நாம் கேட்டவுடனே அந்த இடத்திற்கு ஒரு சிங்கள உத்தியோகத்தர் தேவையென விளம்பரப்படுத்தி அத்தகைய ஒருவரைத் திடுதிப்பென நியமித்துவிடுகிருர்கள். இவ்வாறு பல முறை நடந்திருக்கிறது.

### தமிழ்ப் பிரிவில் குறைந்த வேலை

உத்தியோகத்தர் தொகை குறைவாக விருந்த போதிலும் தமிழ்ப் பிரிவில் எவ்வித குறைபாடுமில்லையெனவும் அப்பிரிவு சிங்களப் பிரிவுக்குப் பின் தங்கிவிடவில்லையெனவும் குறித்த விசேட ஆணையாளர் கூறினுர். இவர் எமக்கு அறிவித்த தகவல் பிழையானதென நான் அறிந்தவுடன் இச் சபையில் ஒரு கேள்வி கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்தேன். இக் கேள்விக்கு விடையளிக்கும் முகமாக, சிங்களத்திலும் தமிழிலும் வெளியிடப்பட்டுள்ள புத்தகங்களினதும் தயாரிக்கப்பட்டு வருகின்ற புத்தகங்களினதும் நாமாவளியொன்றைச் சமர்ப்பித்தார் அதிலிருந்தே தமிழ்ப் புத்தகங்களும், தொழில் நுட்ப, விஞ்ஞான கலைச் சொற்ருெகுதிகளும் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டவற்றிலும் பார்க்க மிகக் குறைவாக விருந்தன வென்பதை அவதானிக்கலாம். இதற்குக் காரணம் கல்விப் பிரிவிலுள்ள தமிழ் உத்தியோகத்தர் தொகை போதாமையே.

இன்னுமொரு விஷயம். 1958ம் ஆண்டின் 28-ம் இலக்க அதிகார சட்டத்தை நிறைவேற்றி யிருக்கிறீர்கள். இச் சட்டத்தின்கீழ் பிரமாணங்கள் எவற்றையாயினும் ஆக்கியிருக்கிறீர்களா?

திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா: பிரமாணங்கள் ஆக்கப்படுகின்றன.

திரு வன்னியசிங்கம்: பிரமாணங்களை ஆக்குவதில் ஏன் இத்தாமதம்? பிரமாணங்கள் ஒரு புறமிருக்க, இவ்வதிகாரச் சட்டத்தின்படி நிருவாக உத்தியோகத்தர் நடப்பதற்கு உதவியாக நிருவாக விதிகளையாயினும் ஆக்கினீர்களா? இல்லை. இவற்றிலும் பார்க்க முக்கியமான விடய மெதுவெனில் இவ்வதிகாரச் சட்டம் ஒழிந்துவிட்டது என்றே கொள்ளப்படுகிறது.

திரு. பண்டாரநாயகா: இல்லை.

### கல்வி மந்திரியின் செய்கை

திரு வன்னியசிங்கம்: நான் சொன்னது உண்மை. உங்கள் சொந்த மந்திரிமாரே இவ்வதிகாரச் சட்டம் ஒரு கேலிக் கூத்தெனவும் அது ஒழிந்துவிட்டதெனவும் கருதுகிருர்கள். அப்படி அவர்கள் கருதாவிட்டால் சிங்களம் தெரியாத மாணவர்கள் நுண் தொழிற் கல்லூரியிற் புக முடியாதபடி கல்வி மந்திரி நடவடிக்கை எடுப்பாரா? உங்கள் தாய் மொழிமூலமே கல்வி கற்பிக்கப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவையிற் சேர்வதற்குத்தானும் சிங்கள அறிவின்மை தடையாகவிருக்கக் கூடாதெனவும் உங்கள் அதிகாரச் சட்டம் விதித்திருக்கும்போதே கல்வி மந்திரியார் இந்த நடவடிக்கையை யெடுத்துள்ளார். அத்தகைய சுற்றறிக்கை யொன்றைத் தாம் விடுத்ததாக இச் சபையிலேயே கூறினுர் கல்வி மந்திரியார். அவர் விடுத்த சுற்றறிக்கை பின்வருமாறு:

"இலங்கை நுண் தொழிற்

(13-ம் பக்கம் பார்க்க)

## தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

தமிழியக்கத்தில் நித்தமும் பலர் தொண்டர்களாகச் சேர்ந்து கொள்கிருர்கள். அவர்களுக்கெல்லாம் இனிப்பான செய்தி ஒன்று.

திரு. கு. வன்னியசிங்கம் திரு. செ இராசதுரை எனும் பாராளுமன்ற உறுப்பினர் இருவரும் தங்கள் அலுவல்களை எல்லாம் பல ஆண்டுகளாகத் தமிழிலே நடத்திவருகிருர்கள். ஏனைய தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரும் தங்கள் அலுவல்களை எல்லாம் தமிழிலே செய்ய முடிவு செய்திருப்பதாக அறிகிருேம். மற்றப் பாராளுமன்றத் தமிழ் உறுப்பினரும் இவர்களைப் போல் தமிழுக்கு முதன்மை கொடுக்க முன்வருதல் வேண்டும்

### இளந்தமிழர் இயக்கம் செய்ய வேண்டியது எது?

தமிழ்ப் பகுதிகளிலுள்ள சங்கங்கள், கழகங்கள், சனசமூக நிலையங்கள், கிராமச் சங்கங்கள், பட்டின சபைகள், நகர சபைகள், யாவும் தங்கள் அலுவல்களைத் தமிழிலே செய்ய வேண்டும். தமிழிலே செய்யுமாறு யாவரையுந் தூண்ட வேண்டும்.

யாழ்ப்பாண மாநகர சபை இத்துறையில் வழிகாட்டல் வேண்டும. வல்வெட்டித்துறைப் பட்டின சபை தமிழில் தன் கருமங்களை ஆற்றத் தீர்மானம் செய்திருப்பது பாராட்டுக்குரியதுமட்டுமல்ல, ஏனைய ஊராட்சி மன்றங்கள் பின்பற்றக் கூடியதுமாகும். இப்பொழுது தோன்றியுள்ள இளந் தமிழர் இயக்கம் தேவையான நேரத்தில் தோன்றிய அருமையான இயக்கம். இந்த இயக்கம் தமிழ் மாணவர்களிடையே தமிழ் உணர்வத்தை உண்டாக்க வேண்டும். தமிழியக்கத்தை எங்கும் பரப்ப வேண்டும்.

யாழ்ப்பாண மாநகர சபை அதன் அலுவல்களை எல்லாம் தமிழிலே செய்யுமாறு உடனே தூண்ட வேண்டும்.

தமிழியக்கத் தொண்டர்கள்முதலிற் செய்ய வேண்டிய சிலபணிகளையிங்கு குறிப்பிடுகிருேம்:

**பணிகள்**

1. தபாற் கந்தோர், கச்சேரி போன்ற நிலையங்களுக்குச் சென்று அங்கு வரும் பொது மக்களுக்குத் தமிழியக்கத்தின் நன்மைகளை விளக்கல். இவற்றுடன் தமிழிலேயே தொடர்பு கொள்ளச் செய்வித்தல்.
2. கிராமச் சங்கங்கள், பட்டின சபைகள், நகர சபைகள், சனசமூக நிலையங்கள், கிராமாபிவிருத்திச் சங்கங்கள், கல்லூரிகள் முதலியன யாவற்றையும் தமிழிலே தம் அலுவல்களைச் செய்யுமாறு தூண்டுதல்.
3. தமிழியக்கப் பிரசாரக் கூட்டங்கள், ஊர்வலங்கள் ஊர்கள் தோறும் நடத்துதல்.
4. வீடு விடாகத் தமிழியக்கப் பிரசாரஞ் செய்தல். துண்டறிக்கைகள் வெளியிடுதல்.
5. தமிழியக்கத்துக்குத் தொண்டர்களைச் சேர்த்தல்.

### காலம் தாழ்த்தலாகாது

இனியுங் காலந் தாழ்த்தாது தமிழ் மக்கள் யாவரும் இலங்கையில் எந்தப் பகுதிக்கும் தமிழ் நாட்டுக்கும் அனுப்புங் கடிதங்கள் முதலியவற்றுக்குத் தமிழிலேயே முகவரியை எழுதல் வேண்டும்.

தமிழ் நாட்டுத் தமிழன்பர்களையும் தமிழ் நாட்டின பலபகு

(9-ம் பக்கம் பார்க்க)

## கடவுளுக்கு கடிதம்

ஐயா கடவுளே, இம் மாதம் நீங்கள் அனுப்பிய சம்பளத்தை வைத்துக் கொண்டு 'பட்ஜட்' தயாரிக்க முடியாமல் தவிப்பதால் செய்திகளை அனுப்ப முடியவில்லை. என்ருலும் ஒரு கதை சொல்லுகிறேன், கேளுங்கள்.

திரிசங்கு என்ற ஒரு தவசி தன்னுடைய தொகுதி மெம்பரிடம் போய், மோட்சத்தில் ஒரு 'வேக்கன்ஸி' இருப்பதாகவும் அதைத் தமக்கு எடுத்துத் தரும்படியும் கேட்க, அந்த எம். பி. ஆகப் பட்டவர் பின்வரும் கதையைச் சொன்னுர்:-

"ஒரு ஊரிலே ஒரு அரசாங்கம் இருந்தது. அதன் கீழே ஒரு கல்வி இலாகா இருந்தது. அந்த இலாகா ஒரு முறை ஐம்பதுக்குமேற்பட்ட ஆசிரியர்களை இடமாற்றம் செய்தது. சில தினங்களில் இந்த மாற்றங்களை ரத்துச் செய்தது. இன்னும் சில தினங்களால் அந்த 'ரத்தை' ரத்துச்செய்தது. இனி என்ன நடக்கும்?" என்று கேட்டார் அந்த மெம்பர். அவ்வளவோடு நிறுத்தவில்லை அவர். இதற்கு திரிசங்கு விடை கொண்டு வந்தால் அவரைமோட்சத்துக்கு அனுப்புவதாகவும் தேர்தல் காலங்களில் நடப்பதுபோல வாக்குறுதி தந்தார்.

திரிசங்குவும் சரியென்று புறப்பட்டு ஒரு கங்கையருகில் கண்மூடித் தவத்தில் மூழ்கி இருந்த ஒரு முனிவரைத் தட்டி எழுப்பி இதற்கு விடை என்ன என்று கேட்க அவர் ஒரு கதையைச்சொன்னுர்:-

"ஒரு ஊரிலே கலுகல்ல என்ற ஒரு கைதி தப்பி ஓடிவிட்டார். இதற்கு காரணஸ்தர் ஒரு மந்திரியாக இருக்கும் என்ற எண்ணத்தில், மற்றைய சில பிரதிநிதிகள் அந்த மந்திரிமேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர எண்ணினர். இப்படியான சம்பவம் நிகழ்ந்த ஊர் எது? இப்படி வேறு எந்த நாட்டிலும நடப்பதுண்டா?" என்று கேட்ட முனிவரானவர், இதற்கு விடை கொண்டுவந்தால் முந்திய வினவுக்கு தாம் விடை கூறுவதாகச் சொன்னுர்.

திரிசங்கு ஆகப்பட்டவன் ஒரு கடலில் மூழ்கி இன்னொரு சமுத்திரத்தில் மிதந்து, அங்கு நீராடிக் கொண்டிருந்த ரிஷி ஒருவரைக் கரைக்கு இழுத்துக் கொண்டுவந்து நிறுத்தி இதற்கு விடை என்ன என்று கேட்க, அந்த ரிஷி பின்வருமாறு சொன்னுர்:-

"முன்னொரு காலத்தில் இந்தியாவில் எட்டப்பன் என்ற ஒரு அரசன் வெள்ளையருடன் சேர்ந்து தன் இனத்தவரைக் காட்டிக் கொடுத்ததால், கட்டபொம்மன் என்ற ஒரு மறத் தமிழ் மன்னன் தூக்குக் கயிற்றை முத்தமிட, தமிழ் மக்கள் மண் கவ்வினர். இதேபோல இன்றைக்கு ஒரு அரை மந்திரிப் பதவிக்காக சிங்கள அரசாங்கத்தில் சேர்ந்து தமிழரைக் காட்டிக்கொடுத்த மன்னுதி மன்னர் யார்? இவருக்கு மற்றத் தமிழ்த் துரோகிகள் வரவேற்பு நடத்தியது ஏன்?" என்று கேட்ட ரிஷியானவர், இந்த வினவுக்கு விடை கொடுக்கும்படி பணிக்க—

(12-ம் பக்கம் பார்க்க)


## ஏஜண்டுகள் தேவை

சுதந்திரன் பத்திரிகை விற்பனை செய்வதற்கு கீழ்க் காணும் இடங்களில் தகுதி வாய்ந்த ஏஜண்டுகள் தேவை விபரங்கட்கு விண்ணப்பிக்கவும்.

| | |
|---|---|
| அளவெட்டி | கெக்கிராவ |
| சினன்வாடி | கிளிவெட்டி |
| கலகா | கொச்சிக்கடை |
| ஹாலி-எல | குளியாப்பிட்டி |
| உனுப்பிட்டி | மதவாச்சி |
| கடுகண்ணுவை | மந்திகை |
| கல்லாறு | மாத்தறை |
| கல்பிட்டி | பொத்துவில் |
| களுத்துறை | இதல்கஸ்ஹின்ன |
| கேகாலை | |

194, ஏ தட்டாதெரு, கொழும்பு-12.

சர்க்குலேஷன் மனேஜர், சுதந்திரன்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்தியா மீது சீனு ஆக்கிரமிப்பு!

## நேருவின் பஞ்ச சீலம்
## 'பஞ்சர்' ஆகிவிட்டதற்கு இது உதாரணம்

## கொம்யுனிஸ்டுகளின் தேசாபிமானமற்ற தன்மை வெட்ட வெளிச்சமாகிவிட்டது

சென்னை, செப். 2—

பாரதப் பிரதமர் நேருவின் பஞ்சசீலம் 'பஞ்ஷர்' ஆகிவிட்டது. அதாவது அவருடைய உடனிருந்து வாழும் கொள்கையில் ஓட்டை விழுந்துவிட்டது. அண்டை நாடான சீனுவுக்கு நாடு பிடிக்கும் ஆசை தலைக்கு ஏறிவிட்டது. திடீரென்று இந்தியாமீது ஆக்கிரமிப்பு தொடங்கிவிட்டது. சீன-இந்திய எல்லைப் பிரதேசத்தில் தாக்குதல்நடத்தி வருகிறது.

### சீனு நாடு பிடித்தது

காஷ்மீரைச் சேர்ந்த லடாக் பகுதியில் பலநூறு சதுர மைல் பிரதேசத்தை சீனு தன்வசமாக்கிக்கொண்டுவிட்டது. வடகிழக்குப் பகுதியில் அஸாம் பிராந்தியத்திலும் அப்படியே பலமான தாக்குதல் அங்கெல்லாம் நடந்து வருகிறது.

### நேச நாடு

செஞ்சீனு நடத்தும் இந்தக் கெடுபிடித் தாக்குதல் உலகத்தையே வியப்பில் ஆழ்த்திவிட்டது. இந்தியா சீனுவின் நேச நாடு என்பது பேச்சளவில் மட்டும் இருந்து வரவில்லை. இந்தியா செயலளவிலும் அதைக் காட்டியே வந்திருக்கிறது. செஞ்சீனுவுக்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் இடமளிக்க வேண்டும் என்று உறுதியாக வாதாடி வந்த நாடு இந்தியா என்பது ஒன்றே போதும் சீனுமீது இந்தியா வைத்திருந்த நேசத்தையும், நல்லெண்ணத்தையும், அபிமானத்தையும் வலியுறுத்த.

### எல்லைத் தகராறு என்ருல் ஏன் தாக்குதல்?

ஆயினும் கொம்யுனிஸ்டுகள் தமது பாரம்பரியத்துக்கு இணங்க நண்பனின் கழுத்தில் கைவைக்கத் தொடங்கிவிட்டார்கள். சீன சர்க்காரைக் கேட்டால் இது எல்லைத் தகராறே தவிர ஆக்கிரமிப்பு அல்ல என்கிருர்கள். எல்லைத் தகராறு என்ருல் அதைப்பற்றி இரு நாடுகளும் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டியதுதானே. நேருவே சொல்லியிருக்கிருர், தாம் எந்தத் தகராறையும் நேசப்பான்மையோடு கூடிப் பேசித் தீர்வு காணத் தயார் என்று. அப்படி இருக்க ஏன் படை கொண்டு தாக்குதல் ஆரம்பிக்க வேண்டும் சீனு?

### போர் நடக்கிறது

இன்னும், மலைப்பிரதேசத்தில ஒருசில சதுரமைல் பிர. தேசம் சீனுவிடம் இருந்தாலும் சரி, இந்தியாவிடம் இருந்தாலும சரி, அப்படி ஒன்றும் வித்தியாசம் ஏற்பட்டுவிடப்போவதில்லை என்றும் பிரதமர் நேரு கருத்து வெளியிட்டு இருக்கிருர். அப்படி இருந்தும் சீனப் படைகள் தாக்குதலை நிறுத்திக்கொள்ளவில்லை. ஏதோ பாதுகாப்புக்காக என்று இந்தியப் படைகளும் எலலைப்பிரதேசத்தில் இப்போது வேண்டா வெறுப்பாக எதிர்த்தாக்குதல் நடத்தி வருகின்றன. ஆக, அங்கு போர் நடக்கிறது.

### தலைலாமாவால் வந்த வினை

இந்தியாமீது சீனு ஆக்கிரமிப்பு நடத்தத் தொடங்கியது நாடு பிடிக்கும் ஆசையால் என்பது ஒருசாராரின் அபிப்பிராயம். இன்னெரு சாரார் வேறுவிதமாகச் சொல்லுகிருர்கள். திபெத்திலிருந்து ஓடிவந்த தலைலாமாவுக்கு இந்தியா புகலிடம் கொடுத்ததன் பலன்தான் இது என்று அவர்கள் கருதுகிருர்கள். தலைலாமாவுக்கும் அவருடைய பரிவாரங்களுக்கும் இந்தியாவில் புகலிடம் அளித்ததால் இந்தியாவுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 29,000 செலவு. இப்படி வெட்டிச் செலவு செய்துவிட்டு வெளிநாடுகள்சென்று கையேந்தி நிதி சேர்த்து நிர்வாகத்தை நடத்த வேண்டி இருக்கிறது இந்தியா. இந்த நிலையில் சீன ஆக்கிரமிப்பு இந்தியாவுக்கு புது தொல்லை.

### சீனப் பிரதமர் சூ-என்-லாய்

"சீனப் பிரதமர் சூ-என்-லாய் பாரதப் பிரதமரின் நல்ல நண்பர். இந்தியாமீது அன்பு பூண்டவர். அவர் சமீபத்தில் இந்தியா வந்துசென்றபோது இது சந்தேகத்துக்கு இடமில்லாமல் நிரூபணமாயிற்று. அவரும் ஒரு கொம்யுனிஸ்டாக இருந்த போதிலும் இந்தியா மீது இப்படித் தாக்குதல் நடத்த ஒப்புதல் அளித்திருக்கமாட்டார். அவரை ஒருபுறம் ஒதுக்கித் தள்ளி மறைவில் வைத்துவிட்டு வேறு யாரோ தலைமைப்பதவியில் இருந்துதான் இப்படியெல்லாம் கெடுபிடிகள் செய்கிருர்கள்"—என்று இன்னும் சிலர் கருதுகிருர்கள். தமது விரோதியான தலைலாமாவுக்கு புகலிடம் அளித்த இந்தியாவுக்கு பாடம் கற்பிகக கொம்யுனிஸ்டுகள் இந்தவிதமாக நடந்துகொள்வது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றுதான் என்று தமது கருத்தை அவர்கள் மேலும் வலியுறுத்துகிருர்கள்.

### ஐக்-மக்மிலன் பேச்சு

மேற்கு நாட்டிலுள்ளவர்களும் அங்குள்ள பத்திரிகைகளும் சீனுவின் செய்கையைப் பலமாகக் கண்டிக்கின்றன. அணிமையில் லண்டன் சென்று பிரிட்டிஷ் பிரதமரோடு பேச்சுவார்த்தைகள் நடத்திய அமெரிக்க ஜனதிபதி ஐசன்ஹோவர் சீனு இந்தியாமீது நடத்தும் ஆக்கிரமிப்புபற்றியும் பேசியிருக்கிருர். சீன ஆக்கிரமிப்பு உலகப் போராக வெடிக்கும் காலை தத்தம் நிலை என்ன என்பதை அவர்கள் பூர்வாங்கமாகப் பேசியிருக்கலாம் என்று அவதானிகள் சொல்கிருர்கள்.

### சீனப் படைகளை நொறுக்கு

மேற்கு நாட்டுப் பத்திரிகைகளை எடுத்துக்கொண்டால் அவை இந்தியாவைப் போருக்கு முடுக்கிவிடுகின்றன. சீனுவை இந்தியப் படைகள் நொறுக்கித் தள்ள வேண்டும் என்று வற்புறுத்துகின்றன. இதை நேரு ஏற்கத் தயாராயில்லை. தாம் எண்ணியிருந்தது போலச் செஞ்சீனு இந்தியாமீது நட்பாக இல்லை என்பதை நேரு ஒப்புக்கொண்டாலும் தமது பஞ்சசீலம் அடியோடு 'பங்ஷர்' ஆகிவிட்டதை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை.

### இந்திய இராணுவம்

ஏதோ பாதுகாப்பு என்ற பேரில் ஒப்பனைக்கு இந்தியப் படைகளை எல்லைப் பிராந்தியத்துக்கு அனுப்பியிருக்கிருர்கள். தீவிரமாக இந்தியப் படைகள் போரில் குதிப்பதாய் இல்லை. "ஏன் இந்தத் தவக்கம்? இந்திய இராணுவத்துக்கு கோடி கோடியாக் கொட்டிச் செலவு செய்ததெல்லாம் வீணு? அது பலமற்றதா?" இப்படிப் பலரும் கேட்கிருர்கள்.

### ராஜிநாமாக்கள்

இராணுவத்திலே குழறுபடி. இராணுவ மந்திரி வி. கே. கிருஷ்ணமேனனுக்கும் உயர்தர இராணுவ அதிகாரிகளுக்கும் லடாய். கிருஷ்ணமேனன் காரியத்தைக் கெடுக்கிருர் என்று காங்கிரஸாரே வேறு புகார் சொல்லத் தலைப்பட்டுவிட்டார்கள். இந்த நிலையில் கிருஷ்ணமேனன் தமது ராஜிநாமாவைப் பிரதமரிடம் சமர்ப்பித்துவிட்டார். இராணுவ அதிகாரிகளும் அப்படியே. யாருடைய ராஜிநாமாவையும் நேரு தற்போதைக்கு ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இதையெல்லாம் சீன விவகாரத்தை முடித்துக் கொண்ட பின்னர் பார்க்கலாம் என்று சொல்லி எல்லோரையும் சமாதானப் படுத்திவிடலாம்.

**சென்னைக்கடிதம்**

சுதந்திரன் சென்னை நிருபர்
ஈழத்தரசன்

> **9 பேர் சாவு**
>
> —0—
>
> **8,000 பேர் கைது**
>
> இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை சம்பந்தப்பட்டமட்டில் நேரு பிரசவித்த பஞ்சசீலம் 'பஞ்சர்' ஆகிவிட்டதுபோலவே உள்நாட்டு விவகாரத்திலும் பெரிய ஓட்டை விழுந்துவிட்டது.
>
> ஒவ்வொரு இராச்சியத்திலும் ஊழலும் கொந்தளிப்பும் நிலைபெற்றுவிட்டன. எல்லைப்பிரதேசத்தில் இந்திய-சீனப் படைகள் பொருதுகின்றன. இராச்சியங்களில் மக்கள்-பொலீஸார் பொருதுகிருர்கள்.
>
> கல்கத்தாவில் சர்க்காரின் உணவுக் கொள்கையை எதிர்த்து எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கிளர்ச்சியில் திரளான மக்கள் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். பொலீஸார் சுட்டார்கள். 9 பேர் செத்தார்கள். பலர் காயமடைந்தார்கள். சுமார் 8,000 பேர்வரை கைது செய்யப்பட்டார்கள். இவர்களில் சுமார் 700 பேர் பெண்கள். 451 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். ஊர்வலங்கள் கூட்டங்கள் இப்போது 144-வது சட்டப் பிரிவுப்படி கல்கத்தாவில் தடை செய்யப்பட்டுள்ளன.

### நேருவின் அந்தரங்க எண்ணம்

இந்திய இராணுவத்தின் [illegible] என்பது ஒரு புறமிருக்க தமது தனிப்பட்ட செல்வாக்கிலும் நேருவுக்கு கவனம் அதிகம். தன்னுடைய காலத்தில் இந்தியாவைப் போருக்குள் மாட்டி வைப்பது அவருக்கு கட்டோடு பிடித்தமில்லை. சமாதானப் பிரியர் நேருவே போர் செய்தார் என்று சரித்திரத்தில் இடம்பெறக் கூடாது என்பது நேருவின் அந்தரங்க எண்ணம். அதற்காக எந்த நாடு எப்படிக் குட்டினுலும் அவர் குனிந்து கொடுக்கத் தயார்.

### நேரு-அயூப்கான் சந்திப்பு

கிழக்கு பாகிஸ்தானிலுள்ள டாக்கா செல்லும் வழியில் பாகிஸ்தான் ஜனுதிபதி அயூப்கான் டில்லியில் சில மணி நேரம் தங்கி நேருவோடு பல விஷயங்கள்பற்றியும் சமீபத்தில் பேசினுரல்லவா. அப்போது இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள காஷ்மீர் உட்பட்ட தாவாக்களைக் கூடிப் பேசித் தீர்த்துக்கொள்வதாக இருவரும் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். பேச்சோடு பேச்சாக அயூப்கான் சீனத் தாக்குதலையும் குறிப்பிட்டு இந்தியாவைப் பலமாக எச்சரித்திருப்பதாகத் தெரிகிறது. இராணுவ அதிகாரி என்ற முறையில் பிரச்னையை நுட்பமாகப் பார்த்து பரிகாரம் சொன்னுர் அவர் என்று ஊகிக்கப்படுகிறது ஆயினும் அயூப்பின் பேச்சும் நேருவுக்கு உற்சாகம் ஊட்டியிருப்பதாகத் தெரியவில்லை.


### இந்திய கொம்யுனிஸ்டுகள்

எல்லாவற்றிற்கும்மேலாக இந்தியாவிலுள்ள கொம்யுனிஸ்டுகள் சீன ஆக்கிரமிப்பு பற்றி வெளியிட்டு உள்ள அறிக்கை எல்லோருக்கும் ஏமாற்றத்தை மாத்திரமல்ல ஆத்திரத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது. சீனு இந்தியாமீது நடத்துவதை "ஆக்கிரமிப்பு" என்று அவர்கள சொல்லவில்லை. அது ஒழிய வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. "எல்லை வரை

(9-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுவிகாரம் - விளைவுகள்

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசிலனைக்குழு சட்ட ஆலோசகர்

தேசவழமை வழக்கப்படி சுவிகார முறை (Adoption) தமிழரிடையே ஒரு காலத்தில் நிலவியதென்றும் அம் முறை காலப்போக்கில் வழக்கற்றுப் போயவிட்டதென்றும் முந்திய கட்டுரையில் அறிந்தோம். பொதுச் சட்டத்தில் இம்முறையிருக்கவில்லையென்றும் 1941 ஆண்டில்தான் சுவிகாரச் சட்டமொன்று இலங்கை முழுதிற்கும் ஏற்படுத்தப்பட்டதென்றும் கவனித்தோம். இக் கட்டுரையில் 1941 ஆண்டு சுவிகாரச் சட்டத்தின் நுணுக்கங்களைப்பற்றிஆராய்வோம்.

### சுவிகாரத்துக்கு விண்ணப்பம்

1941-ம் ஆண்டுச் சுவிகாரச் சட்டப்படி ஒருவர் இன்னொருவரின் பிள்ளையைச் சுவிகாரம் செய்ய வேண்டுமாயின் அவர் தாம் வசிக்கும் அல்லது அப்பிள்ளை வசிக்கும் இடத்துக்குரிய விண்ணப்ப நீதி மன்றத்துக்கு (சிறிய நீதி மன்றம் Court of Requests) மனுப்பண்ண வேண்டும். அதற்கு அப் பிள்ளையின் பிதா அல்லது மாதா ஒரு கட்சிக் காரராக்கப்பட வேண்டும். அத்துடன் அப் பிள்ளையின் நலனைக் காப்பாற்றுவதற்காக ஒரு தற்காலிக பராமரிப்புக்காரன் நீதி மன்றத்தால் நியமிக்கப்பட வேண்டும்.

### வயதுக் கட்டுப்பாடு

நீதி மன்றம் சுவிகாரக் கட்டளை பிறப்பிக்கு முன் பின்வரும் விஷயங்களை ஆராய்ந்து தான் கட்டளை பிறப்பிக்கும்:- முதலாவது சுவிகாரம் செய்பவர் 25 வயதுக்கு மேற்பட்டவராய் இருக்க வேண்டும்.

இரண்டாவதாக பிள்ளையிலும் பார்க்கச் சுவிகாரம் செய்பவர் இருபத்தொரு வயதுக்கு மூத்தவராயிருக்க வேண்டும். ஆனால் பிள்ளை அவரின் சகோதர சகோதரியாயிருந்தாலும் அல்லது அவரின் தாய் தந்தையரின் மறுதாரப் பிள்ளைகளாயிருந்தாலும் அல்லது அச் சகோதர சகோதரிகளின் கீழ்ச் சந்ததியாராயிருந்தாலும் அல்லது அவரின் மனைவியின் மறுதாரக் குழந்தைகளாயிருந்தாலும் அல்லது அவரின் கணவரின் மறுதாரக் குழந்தைகளாயிருந்தாலும் நீதி மன்றம் விரும்பினால் அவர்களுக்கிடையே 21 வயதுக்கு மேற்பட்ட வித்தியாசமில்லாத போதிலும் சுவிகாரத்துக்கு அனுமதி கொடுக்கும்.

### பெற்றோர் சம்மதம்

மூன்றாவதாக பிள்ளையின் பெற்றோர் அல்லது பராமரிப்புக்காரர் சம்மதம் கொடுக்க வேண்டும். ஆனால் அவர்கள் பிள்ளையைக் கைவிட்டிருந்தால் அல்லது அவர்களைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் அல்லது அவர்கள் சித்தசுவாதீனமற்றிருந்தால் அல்லது அவர்கள் நெடுங்காலமாகவும் பிடிவாதமாகவும் பிள்ளையைப் பராமரிக்க அல்லது பராமரிப்புப் பணம் கொடுக்க மறுத்திருந்தால் நீதி மன்றம் அவர்களின் சம்மதமின்றி சுவிகாரத்துக்கு அனு'மதி கொடுக்கலாம்.

நாலாவதாக சுவிகாரப் பிள்ளை 14 வயதுக்குட்பட்டிருக்க வேண்டும்.

### தம்பதிகள் சம்மதம்

ஐந்தாவதாக கலியாணம் முடித்த தம்பதிகளில் ஒருவர் மற்றவரின்சம்மதமின்றி ஒரு பிள்ளையைச் சுவிகாரம் செய்ய முடியாது (தேசவழமையில் இக் கொள்கையில்லையென்பதையும் தேசவழமைக் கொள்கைகளை இச் சட்டம் பாதிக்கவில்லையென்பதையும் இங்கு கவனிக்க வேண்டும். தேச வழமைச் சுவிகார முறை அற்றுப்போனதென்பதேயொழிய அச் சட்டம் இன்னும் சட்டரீதியாயிருக்கிறதென்பதை முன் கட்டுரையில் கண்டுள்ளோம்.) நீதி மன்றம் போதிய காரணம் காட்டினால் மற்றத் தம்பதியின் சம்மதமின்றிச் சுவிகாரம் செய்ய அனுமதி கொடுக்கும்; உதாரணமாக, நீதி மன்ற மூலம் மணப்பிரிவினை (Judicial Separation) நடந்திருந்தால் அச்சம்மதம் தேவையில்லை.

### பிள்ளையின் சம்மதம்

இன்னும் 10 வயதுக்கு மேற்பட்ட பிள்ளையாயின் அப் பிள்ளையின் சம்மதமும் கோர வேண்டும். இதை விடப் போதிய காரணமில்லாவிடின் ஒரு ஆண் ஒரு பெண் குழந்தையைச் சுவிகாரம் செய்ய நீதி மன்றம் இடம் கொடுக்க மாட்டாது. ஒரு சுவிகாரக் கட்டளை (adoption order) பிறப்பிக்க முன் இச் சுவிகாரம் அப் பிள்ளைக்கு நலனைக்கொடுக்குமோவெனவும் அப் பிள்ளையினுடைய பெற்றோர் சம்மதம் கொடுக்கு முன் இக் கட்டளையின் [illegible] யிலுள்ள பெற்றோர் உரிமையை யிழக்கிறர்களென அவர்கள் முற்றுமுணர்ந்து தான் சம்மதம் தெரிவிக்கிறார்களோவெனவும் நீதி மன்றம் பூரணமாய் திருப்தியடைய வேண்டும். அத்துடன் சுவிகாரம் செய்பவர்கள் இச் சுவிகாரத்துக்காக ஒரு வெகுமதியாவது அல்லது பணமாவதுவேறெவரிடமிருந்தும் பெறவில்லையெனவும் திருப்தியடைய வேண்டும். இப்படித் திருப்தியடையாவிடில் நீதி மன்றம் அனுமதியை மறுக்க இடமுண்டு.

### இடைக் கட்டளை

நீதி மன்றம் சுவிகாரக் கட்டளையிடும்பொழுது பெற்றோரிடம் தகுந்த நிபந்தனை பெற்றுக் கொள்ளலாம். சில சமயங்களில் நீதி மன்றம் சுவிகாரத்துக்கு அனுமதி கொடாமல் தற்காலிகமாக இரண்டு வருஷத்துக்குட்பட பிள்ளையை சுவிகாரம் செய்ய விரும்புபவரின் பொறுப்பிலும் பராமரிப்பிலும் விட்டு அவர் பிள்ளையின் கல்வி, பாரமரிப்பு மேற்பார்வையெப்படி நடாத்துகிறார் என்பதையறியலாம். இதற்காக ஒரு இடைக் கட்டளை (Interim Order) யிடலாம்; ஆனால் இது சுவிகாரக் கட்டளையாக ஏற்படமாட்டாது. அதன் பிறகு நீதி மன்றம் திருப்தியடைந்தால் சுவிகாரக் கட்டளை கொடுத்துச் சுவிகாரத்தை அனுமதிக்கலாம்.

### மறு சுவிகாரம்

ஒருவரின் சுவிகாரத்திலிருக்கும் பிள்ளையை இன்னொருவர் சுவிகாரம் செய்யலாம். அச் சந்தர்ப்பத்தில் முதல் சுவிகாரம் செய்தவர்கள் தாய் அல்லது தகப்பன் முறையலிருப்பதாய்க் கருதியவர்களின் சம்மதம் பெற வேண்டும்.

இனி சுவிகாரம் முறைப்படி செய்தால் அதனால் வரும் விளைவுகள் யாவை என்பதை ஆராய்வோம்.

### விவாகம்

சுவிகாரக் கட்டளை பிறந்த நாட் தொடங்கி சுவிகாரம் செய்தவர் முறையாக விவாகம் செய்த பயனாகப் பிறந்த பிள்ளை போலவே அப்பிள்ளை கருதப்படும் ஆனால் இதில் ஒரு விதிவிலக்குண்டு-அதாவது விவாக சம்பந்தமாக ஆராய்ந்த பொழுது ஒரு விஷயம் கவனித்தோம். அதென்னவெனில் சகோதர சகோதரிகள் ஒருவரையொருவர் விவாகம் செய்யச் சட்டம் இடங்கொடாதென்பதே. இரு பிள்ளைகளும் சகோதர சகோதரிகளாயிருந்து சுவிகாரத்தினால் வேறு பெற்றோரின் பிள்ளைகளாகக் கருதப்பட்டபோதிலும் அவர்கள் ஒருவரையொருவர் விவாகம் செய்துகொள்ளக்கூடாது. அதைவிட முதலிலே விவாகத்துக்குத் தடுக்கப்பட்ட முறையில் உள்ளவர்கள் சுவிகாரத்தினாலே அத் தடையை தள்ளிவிட முடியாது. இரத்த முறைப்படி விவாகம் முடிக்க இயலாதவர்கள் சுவிகார முறையைக் கையாண்டு அத் தடையை நிவிர்த்தி செய்ய முடியாது. இது ஒரு பிரதான அம்சம்.

### சுவிகாரப் பிள்ளைகள் தமக்குள் விவாகம்

அதுபோலவே தடுக்கப்படாத முறையிலில்லாதவர்கள் சுவிகாரத்தின் விளைவாகத் தடுக்கப்பட்ட முறையில் வரமாட்டார்கள். உதாரணமாக ஒருவர் தம் சகோதர சகோதரியின் பிள்ளையை விவாகம் செய்ய இயலாது. எனினும் ஒருவர் தம் சகோதர சகோதரியின் சுவிகாரப் பிள்ளையை விவாகம் செய்வதற்கு ஒரு தடையுமில்லை. ஆனால் ஒருவரின் சுவிகாரம் செய்த பிள்ளை அவரின் சொந்தப்பிள்ளையை விவாகம் செய்யலாமோ இல்லையோ யென்பது ஆட்சேபனைக்குரிய கொள்கை எனினும் தேசவழமைச் சுவிகார முறை இக் கொள்கையை ஆதரிக்கவில்லை. அதாவது தேசவழமைப்படி சுவிகாரம் செய்யப்பட்ட பிள்ளை தன் சுவிகாரப் பெற்றோரின் சொந்தப்பிள்ளையை விவாகம் செய்யலாம். 1941-ம் ஆண்டுச் சட்ட தேச வழமைச் சட்டத்துக்கும் அச் சட்டத்துக்கும் முரண்பாடேற்பட்டால் தேசவழமைச் சட்டமே முறையான சட்டமெனக் கூறியுள்ளது. ஆகையால் தேசவழமைக்கு அமைந்த தமிழருக்கிடையில் சுவிகாரத்தால் ஏற்பட்ட இரு சகோதர சகோதரிகள் விவாகம் செய்யலாமென்பதே சட்டமெனலாம். (நீதி மன்றத்தில் இத்தகைய பிரச்னை யெழவில்லையென்பதும் தமிழரின் பண்பாட்டில் அத்தகைய விவாகம் நடைபெறவில்லை யென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.)

### ஆதன உரிமை

சுவிகாரம் செய்யப்பட்ட பிள்ளை தன் பெற்றோரை அல்லது பெற்றோர்களை தாபரிக்கக் கடமைப்பட்டுள்ளது.

இனி சுவிகாரத்தினால் ஏற்படும் ஆதன உரிமைகளைக் கவனிப்போம். சுவிகாரக் கட்டளைக்கு முன்னதாகவே முடிந்த ஒரு சாசனப் படி ஒருவரின் பிள்ளைகளுக்கான ஆதனங்கள் விடப்பட்டிருந்தால் அவ் வாதனங்களில் சுவிகாரப் பிள்ளைக்கு ஒரு உரித்தும் கிடையாது. ஆனல் சாசனத்தில் சுவிகாரப் பிள்ளைகளுக்கும் உரித்துண்டென்றிருந்தால் அவர்களுக்குரித்துண்டு. சுவிகாரத்துக்குப்பிறகு எழுதிய சாசனமாகில் அவர்களுக்குமுரித்துண்டு.

இதுபோலவே தலைமுறை தலைமுறையாகப் பிள்ளைகளுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட ஆதனங்களாயின்(Fiei Commission Property) அவ்வாதனங்களிலும் சுவிகாரப் பிள்ளைகளுக்குரித்தில்லை. இதைவிட முறையான பிள்ளைகளின் வாரிசு (Heirs)களுக்குப் போக வேண்டிய ஆதனங்களிலும் சுவிகாரப் பிள்ளைகளுக்குரித்தில்லை. சுவிகாரம் செய்தவரிடமிருந்து சுவிகாரப் பிள்ளை மரணசாசனமூலமேனும் வாரிசு முறையாகவேனும் ஆதன உரிமை பெறலாம் என்பதை நன்றாய்க் கவனிக்க வேண்டும்.

### சுவிகாரப் பிள்ளையின் வாரிசு

சுவிகாரப் பிள்ளை யிறந்தால் அப் பிள்ளைக்கு வாரிசு யார் என்னும் வினு எழும், அச்சந்தர்பபத்தில் அப் பிள்ளைக்கு சுவிகாரமில்லாவிட்டால் யார் யார் வாரிசுகளாயிருப்பார்களோ அவர்களே அப்பிள்ளை சுவிகாரத்துக்குப் பின் இறந்தாலும் வாரிசுகளாயிருப்பார்கள். ஆனல் இதற்கு ஒரு விதிவிலக்குண்டு. அதாவது சுவிகாரப்

(13ம் பக்கம் பார்க்க)

## "ஆஸ்த்மா"வைப் பற்றிய உண்மைகள்

ஆஸ்த்மா என்ற தொய்வு ஒரு பயங்கரமான வியாதியாகும். நரம்புத்தளர்ச்சி, காலநிலை, மூக்கடைப்பு மார்பில் ஏற்படும் சளி, வயிற்றுக்கோளாறுகள் ஆகிய பல காரணங்களால் ஆஸ்த்மா, என்ற தொய்வு ஏற்படுகிறது.

பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு வியாதியைப் பூர்ணமாகக் குணமாக்கக் கூடிய "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புதமான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இம் மருந்தின் பெருமையைப்பற்றி நூற்றுக்கணக்கான கடிதங்கள் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள்-நன்றிக் கடிதங்கள் எழுதிய தமிழன்பர்கள் யாவருக்கும் நம் நன்றி—இன்னும் சில கடிதங்கள்.

(1) டாக்டர்,

எனக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி "ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷல் பாவித்ததில் பூர்ண குணம்.

என் அன்பு நன்றி.

திரு. S. S. றமீது
C/o திரு. K. அப்துல் வஹாப்
(மட்டக்களப்பு பகுதிக்கு அரசாங்க கண்டிராக்டர்
11, பவுண்டரி ரோட் (BOUNDRY ROAD.) மட்டக்களப்பு)

(2) எனது மனைவிக்கு 15 வருட காலமாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, பூர்ணசுகம் நன் நன்றி.

திரு. இ. சரவணமுத்து
பிரதம அதிகாரி
வி. சி. ஆபீஸ் பக்கியல்ல (களுவாஞ்சிக்குடி)
களுவாஞ்சிக்குடி (EP).

ஒரு பாட்டில் ஆஸ்த்மடிக்காவில் எனக்கிருந்த ஆஸ்த்மா என்ற தொய்வு பூர்ணசுகம்.

வணக்கம்
திரு. அ. ஆனந்தலிங்கம்
ரூப்பியன் தோட்டம், கம்பர்மலை
வெள்வெட்டித்துறை

அன்பர்களே அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம். ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

"ஆஸ்த்மடிக்கா"
(ஒரு நவீன சஞ்சீவி)

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல்—ரூ. 15/-
மிக உபாதை தரக்கூடிய நாள் பட்ட ஆஸ்த்மாவுக்கு)
ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-
வி. பி. பி. சதம் -/85

விபரங்களுக்கு
டாக்டர்.
சுக ஆதார வைத்தியசாலை
MODERN CLINIC
255, காலி ரோட், பம்பலப்பிட்டிய
கன்வன்ட் எதிரில்
கொழும்பு-4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேயிலை உற்பத்தியாக்கும் நாடுகளில் சீனவும் ஒன்று. தேயிலையைப் பெரிய சட்டிகளிலே போட்டு கையினுலே வறுத்துப் பதப்படுத்துவதைக் கன்செளவில் கண்டோம். சிறுவர்களும் தலையிலே கூடைத் தொப்பி அணிந்து தேயிலைக் கொழுந்து பறிப்பதைக் கண்டோம். சீனவிலே எங்கும் எப்பொழுதும் தேநீர் அருந்துகிறார்களென்றால், ஏழை நாட்டில் இது எப்படிக் 'கட்டுபடியாகும்' என வாசகர்கள் வியப்பெய்தலாம்.

## பச்சைத் தேநீர்

குளிர்மிக்க நாடானபடியால் வெந்நீர்ப் போத்தல்களில் எப்பொழுதும் வெந்நீர் வைத்திருக்கிறார்கள். கோப்பைக்குள் சிறிதளவு தேயிலைத் தூள்களை இட்டு, வெந்நீர் ஊற்றிச் சிறிது அவிந்ததும் அப்படியே பருகுகிறார்கள். சீனியோ, பாலோ கலப்பதில்லை. இதனைத்தான் "பச்சைத் தேநீர்" (Green Tea) என அவர்கள் அழைக்கிறார்கள்.

மூங்கில் திரையைக் கடந்து இரயில் ஏறியதும் முதலில் இத்தேநீரே கிடைத்தது. இனிப்பில்லை; மிதந்து வரும் தேயிலைத் துகளை என் செய்வது என்பனபோன்ற சிக்கல்கள் எமக்கிருந்தன. இச்சிக்கலைத் தீர்த்து வைத்தார் எம்மோடு வந்த செல்வி மேரி மாசிலாமணி அவர்கள். இரயில் உணவு விற்பனை நிலையத்தில் சீனியை வாங்கி வந்து இரகசியமாகக் கலந்து தந்தார்.

## முதலில் கசந்தது பின்னர் இனித்தது

ஆனால் செஞ்சீனவில் நாம் தங்கியிருந்தபோது சென்ற பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்சாலைகள், வள்ளங்கள் அத்தனையிலும் இப் "பச்சைத் தேநீரே" விருந்தாகக் கிடைத்தது. இரயிலில் இரகசியமாகச் செய்த 'புண்ணிய கைங்கரியத்தை'ச் செல்வி மேரி மாசிலாமணியவர்கள் தொடர்ந்து செய்ய முடியவில்லை. விருந்தெனத் தந்த தேநீரை மருந்தென அருந்தினேம் மரியாதைக்காக. சில நாட்களின் பின் நாமே இத் தேநீரை விரும்பி வாங்கி அருந்தினேம். "பழகப் பழகப் பாலும் கசக்கும்" என்ற பழமொழி என்னவோ இத் தேநீரைப் பொறுத்தமட்டில் பொய்த்துவிட்டது. பழகப் பழக இத்தேநீரும் இனித்தது எமக்கு.

## இசை, நாடகமூலம் கருத்துக்கள்

"கலை கலைக்காகவல்ல; கலை கருத்துக்காகவுமே" என்ற கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வந்து பயன் பெறுகின்றனர் பொதுவுடமையினர். கன்செள நகரில் இசை நாடகமொன்றிற்குச் சென்றிருந்தோம். பொது நலப் பணிக்கு முன்வந்த இளம் பெண்ணை வெறுத்தொதுக்குகிறாள் அவள் மாமியார்; கொடுமைகள் பல செய்கிறாள். நாட்டுப்பற்றுடையவர்கள் மாமியாரிடம் சென்று பொதுநலப் பணியின் அவசியத்தை விளக்குகின்றனர். மாமியார் மனம் மாறுகிறாள்; தானும் அப்பணியிலீடுபட்டு உழைக்கிறாள். இக்கருத்தை வைதது உருவாக்கியிருக்கிறார்கள் நாடகத்தை. இசைக் கருவிகள் நல்ல பின்னணியைத் தருகின்றன. ஒளி அமைப்புகளும், காட்சி மாற்றங்களும் நாடகத்தைக் கவர்ச்சியுள்ளதாக்குகின்றன.

## ஈயடிப்பு வாரம்

நாம் கன்செளவில் தங்கியிருந்தபோது ஈயடிப்பு வாரம் தொடங்கியது. ஒவ்வொருவருடைய கையிலும் அகப்பைபோன்ற வடிவமுள்ள ஈயடிப்பான் குச்சிகள் இருந்தன. பாலர்கள் ஈயடிப்பான்களைத் தாங்கிக்கொண்டு தெருக்களிலே பவனி வந்த காட்சி என்றும் மறக்க முடியாதது. பாலர்கள் பெருமளவு ஈக்களைக் கொல்லாவிடினும், ஈக்களால் நோய் பரவ மக்கள் நலம் கெட்டுவிடுகிறது. எனவே அவற்றை ஒழித்துவிட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தைப் பெறுகிறார்கள். கட்டுப்பாடான முறையில் நாட்டுப் பணிக்குப் பணிந்து செயலாற்ற வேண்டும் என்ற ஒழுங்கு முறை பால்மணம் மாறுப் பாலர்களிடையே நிலைநிறுத்தப்படுகின்றது.

## பெளத்த மடாலயம்

கன்செளவிலிருந்து சுமார் 20 மைல்களுக்கப்பாலுள்ள பெளத்த மடாலயமொன்றிற்குச் சென்றேம். மலைச் சாரலிலே இயற்கை வனப்போடு புத்த கோவில்களும் துறவி மடங்களும் விளங்கின. புத்த துறவிகளை அங்கு அதிகம் காண முடியவில்லை. கோவில்கள் மிகச் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தன. பொதுவுடமை ஆட்சியில் அவை பழுதுபார்க்கப்பட்டுள்ளன. புத்தர் சிலையருகே சாம்பிராணித் தூபம் இடப்பட்டிருந்தது.

நாம் சென்றிருந்த நாளில் பள்ளி மாணவர் பலர் சுற்றுலாவிற்காக அங்கு வந்திருந்தனர். வேடிக்கை பார்த்து மகிழ்ந்தனரேயன்றி, ஓர் புனித ஆலயத்திற்கு வந்திருக்கின்றேமே என்ற எண்ணம் அவர்களிடம் இருந்ததாகத் தெரியவில்லை. கோவிலுள்ளே காலணிகளோடு தாராளமாக உலவினர். எமது குழுவிலேயிருந்த பௌத்தர்களின் உள்ளத்துள்ளேயிருந்த அருவருப்பு உணர்ச்சி சிறிது முகத்திலேயே தென்பட்டது. எவ்வித விருப்பு வெறுப்புமில்லாதவர்கள்போலச் சமாளிக்க முயன்று தோற்றுவிட்டனர். 'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' அல்லவா?

## கைவண்ணமும் வாய்வண்ணமும்

மடத்தருகேயிருந்த மலைச் சாரலில் குகைகளும், பல சிற்பங்களும் உள்ளன. சிரிக்கும் புத்தர் சிலையொன்று பெரிய அளவிலே செதுக்கப்பட்டிருக்கின்றது. அந்த மலையிலே ஏறி இறங்குவதற்கு அங்கிருந்த மாணவர்கள் பலர் உதவி செய்தனர். என்னைப் பார்த்து அவர்கள் என்னென்னவோவெல்லாம் சீனமொழியிற் பேசினர். என் பையில் வைத்திருந்த இலங்கை முத்திரைகளையும் நாணயங்களையும் தாராளமாகக் கொடுத்தேன். தொடர்ந்து என்னையும் எமது குழுவினரையும் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். பழம் முத்திரைகளை அள்ளிக் கொடுத்த என் கை வண்ணத்தைப் பாராட்டித்தான் அவர்கள் வாய் வண்ணம் காட்டி [illegible] உடல் வர்ணம்தான் அவர்களை அப்படிப் பேசச் செய்தது என என்னோடு வந்த செல்வி இவான் குணசேகரா கூறியதில் எவ்வித உண்மையுமில்லையென இற்றைவரை நம்புகிறேன்.

## யேட் நீரூற்று

பெளத்த மடாலயத்திலிருந்து திரும்பி வரும் வழியில் யேட் நீரூற்றுக்கு (Jade Fountain) சென்றேம். இந்த நீரூற்றைச் செவ்வக வடிவமான கேணியாகக் கட்டியிருக்கிறார்கள். அழகிய பொன் மீன்கள் அங்குமிங்கும் துள்ளி நீந்துவதை மணிக்கணக்காகப் பார்த்துக்கொண்டிருக்கலாம். 16-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த புகழ்பெற்ற சிற்பியொருவரால் சீனச் சித்திர எழுத்தில் "மகிழ்ச்சிகரமான மீன்களின் இராசதானி" என இங்குள்ள கல்லொன்றில் செதுக்கப்பட்டிருக்கின்றது.

யேட் நீரூற்றுக்கருகே கி. பி. 482-ம் ஆண்டு கட்டப்பெற்ற யூ-சுஆன் கோவிலுண்டு. இக் கோவிலின் பின்னே சென்-சூ என்ற இன்னேர் நீரூற்றுண்டு. இந் நீரூற்றருகில் நின்று காலால் நிலத்தை அழுத்தினல் முத்துக்கள் போலக் குமிழிகள் தோன்றும். எனவேதான் 'முத்துக் குமிழிகள்' என்ற கருத்துள்ள சென்-சூ என்ற பெயர் இந்த நீரூற்றிற்கு இடப்பட்டிருக்கின்றது.

## ஆறு இணக்கக் கோபுரம்

கிறித்தவ மதத்திலே பத்துக் கட்டளைகள் இருப்பது போல பெளத்த மதத்திலே ஐந்து ஒழுக்கக் கட்டளைகள் (பஞ்ச சீலம்) இருக்கின்றன. இதைவிட ஆறு இணக்கக் கட்டளைகளும் பௌத்தத்தில் உள்ளன. இவற்றை நினைவுபடுத்துவதற்காக 6 பட்டங்களையுடைய உயர்ந்த கோபுரமொன்றுண்டு (Pagoda of Six Harmonies). இது சுமார் 60 மீட்டர் உயரமானது. கி. பி. 970-ல் கட்டப்பட்டதாயினும் அடிக்கடி பழுது பார்க்கப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது வெளித்தோற்றத்திற்கு இது 13 அடுக்குகளைக் கொண்டது போல அமைக்கப்பட்டிருக்கிறதெனினும், உட்படிகளிலே ஏறினல் ஏழு மாடிகளையே கொண்டது.

## நாட்டு வீரனுக்கும் கோவில்

பெற்றேர்களையும், முதியோர்களையும், நாட்டு வீரர்களையும் பேணிப் போற்றும் பெற்றியர் சீனர். "தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல் வன்மையுள் எல்லாந் தலை" என்பதைப் பண்டைய சீனர் நன்குணர்ந்துள்ளனர். கண்ணகியென்ற கற்பின் செல்விக்கு-அப் புரட்சித் தலைவிக்கு-இமயத்திலிருந்து கல்லெடுத்துச் சிலை சமைத்தனர் நம்மவர் என்று மாத்திரந்தான் சிலப்பதிகாரம் கூறுகின்றது. வீரத்தின் விளைநிலமான தமிழகத்திலே நாட்டு வீரர் யாருக்கும் சிலை வைத்துப் பெருங்—கோவில் எழுப்பியதாக நாம் கேள்விப்பட்டதில்லை. ஆனல் சீனவிலே நாட்டைக் காத்த நல் வீரருக்குக் கோவில் எழுப்பியிருக்கிறார்கள். அத்தகைய மாவீரன் கோவிலொன்று கன்செளவில் நாம் தங்கியிருந்த விடுதிக் கணித்தாக உள்ளது. கி. பி. 12-ம் நூற்றாண்டு முற்பகுதியில் வெளி நாட்டாரது தாக்குதலைத் தாங்காது நாடு நலிந்தபோது, படைத் தலைவனுயிருந்து நாட்டின் மானம் காத்த மாவீரன் யூ-பெய் [Yueh-Fei] போரிலே புறமுதுகு காட்டாது உயிர் நீத்த பேராண்மையாளன்.



மேலே: (இடம்)-ஆறு இணக்கக் கோபுரம் (வலம்)- கன்செள பௌத்த மடாலயம் ஒன்றில் காணப்படும் சிரித்த முகப் புத்தர் உருவம். கீழே: (இடம்) பௌத்த மடாலயம் ஒன்றின் கவின் பெறு காட்சி. (வலம்)-தேயிலையைக் கையால் பதனிடுகிறார் சீனத் தொழிலாளி ஒருவர்.

## காட்டிக்கொடுத்த துரோகிகளுக்கு இரும்புச் சிலை

அவ் வீரனின் நினைவாக எழுப்பப்பட்ட திருக்கோயில் இன்றும் வீரத்தின் சின்னமாகத் திகழ்கின்றது. கோவிலுள்ளே யூ-பெய்யின் உருவச் சிலையுண்டு. இருமருங்கிலும், உற்றவிடத்து உயிர் கொடுக்கும் பெற்றியரான அவனது சேனை வீரர் இருவரது சிலைகளும் இருக்கின்றன. அவ்வீரன் எவரெவரால் காட்டிக் கொடுக்கப்பட்டுக் களத்திலே உயிர் நீத்தானே, அத்துரோகிகளின் உருவச் சிலைகளையும் இரும்பினுற் செய்து அங்கு நிறுவி

(10-ம் பக்கம் பார்க்க)



ஈயடிப்பான் குச்சிகள் கொண்டு ஈக்களுக்கு எதிராகப் போர் தொடுத்திருக்கிறார்கள் கன்செள நகர் வாசிகள். கீழே: மறைந்த மாவீரன் ஒருவனின் நினைவுச் சின்னமாக [illegible] பழைய கோவில் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1959 செப்டம்பர் மாதம் 6-ந் தேதி

194 ஏ. [illegible]தெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


## இவர்களை அணைக்கலாமா?

வெள்ளம் வருமுன்னர் அணை கட்டியாக வேண்டும். அப்படிக்கில்லாமல் வரும்போது கட்டலாம் என்று இருப்பது புத்தியாகாது.

தற்போது இந்தியாவிலிருந்து கிடைக்கும் பரபரப்பான செய்திகள் இலங்கையில் உள்ள நாம் இப்போதே அணை கட்டிக்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவனவாய் அமைந்திருக்கின்றன.

“இந்தியாவின் வட கிழக்கு எல்லைப் பிராந்தியத்தில் சீனத் துருப்புக்கள் புகுந்துவிட்டன. பீரங்கிகள் முழங்குகின்றன. தாக்குதல் ஆரம்பமாகிவிட்டது. இந்தியாவுக்கு உரிய பூமியில் பல நூறு சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்தை சீனு கைப்பற்றிக்கொண்டது” — இப்படிச் செய்திகள் வருகின்றன. நடைபெறுவது சீன ‘ஆக்கிரமிப்பு’ என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். பிரதமர் நேருவும் அப்படித்தான் இந்தியப் பாராளுமன்றத்தில் கருத்து வெளியிட்டிருக்கிருர்.

இந்திய கொம்யுனிஸ்டுகளும் இது சம்பந்தமாக அபிப்பிராயம் தெரிவித்திருக்கிருர்கள். செஞ்சீனுவுக்கும் இந்தியாவுக்குமிடையே ஏற்பட்டிருப்பது சிறு ‘எல்லைத் தகராறு’ என்றும், போயும் போயும் இதைத்தான் வீணில் பெரிது படுத்தி அனைவருக்கும் கலக்கத்தை உண்டுபண்ணுகிருர்கள் கொம்யுனிஸ்டு விரோதிகள் என்றும் பொருள்பட இந்திய நாட்டு கொம்யுனிஸ்டுகள் கூறுகிருர்கள். சீனு இந்தியாமீது ‘ஆக்கிரமிப்பு’ நடத்துகிறது என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டுமென்ற கட்டாயம் எதுவும் இல்லை நம்மைப் பொறுத்தவரையில், நடப்பது எல்லைத் தகராறு அல்லது ஆக்கிரமிப்பா என்று ஆய்ந்தறிந்து தீர்ப்பு வழங்கவேண்டுமென்பது நமது நோக்கமும் அல்ல.

ஆனல் ஒன்று. நடப்பது எல்லைத் தகராருய் இருந்தாலும் சரி அல்லது ஆக்கிரமிப்பாய் இருந்தாலும் சரி இந்தியாவின் சுதந்திரத்துக்கு அது குறுக்கே நிற்கிறது என்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. சாதாரண எல்லைத் தகராறுதான் இந்திய வட கிழக்கு எல்லையில் முளைத்திருக்கிறது என்று வைத்துக்கொண்டாலும் அதற்கு பரிகாரம் தேட எத்தனையோ வழிகள் இருக்கும்போது, படை கொண்டு புறப்படவேண்டியதில்லைச் சீனு இந்திய எல்லைப்புற மண்ணில் (அது பிரச்னைக்குரிய பிரதேசமாயிருந்தாலும்) தன்விச்சைப்படி கால் ஊன்றியிருக்க வேண்டியதில்லை.

உலகமே இந்த நீதியைத்தான் சொல்லுகிறது. ஆனல் இந்திய கொம்யுனிஸ்டுகள் சொன்னர்களா? ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று சீனத் தோழர்களை ஒரு வார்த்தை கேட்டார்களா? உரிமையோடு கேட்டிருக்க வேண்டிய அவர்கள் ஊமைகளாகிவிட்டார்கள்.

செஞ்சீனுவையோ அன்றிச் சோவியத் ருஷ்யாவையோ கண்டிக்க அவர்களுடைய குரு பக்தி இடம் தராது. சொந்த நாட்டின் சுதந்திரம் பறிபோகிறது என்ருலும், பறிப்பவன் கொம்யுனிஸ்டாக இருந்துவிட்டால் அவர்கள் எதிர்த்துக் குரல் எழுப்பமாட்டார்கள். வேண்டுமானல் முடிந்தவரையில் பறிக்க வந்தவனின் பாதம் தொழுது பணிபுரியவும் செய்வார்கள். உடலை மட்டும் வாழும் நாட்டில் வைத்துக்கொண்டு உள்ளத்தையும் உணர்வையும் கொள்கை வகுக்கும் மாஸ்கோவிற்கும், பீக்கிங்கிற்கும் ஏற்றுமதி செய்துவிடுபவர்கள் ஆயிற்றே அவர்கள்!

அவர்களின் வாரிசுகள்தாம் நம் மத்தியிலும் வாழ்கிருர்கள். ஆமாம், இலங்கையிலுள்ள கொம்யுனிஸ்டு தோழர்களையே குறிப்பிடுகிறேம். இந்தியாவில் உள்ளவர்களைப் பார்த்தால் இவர்களை வேறு தனியாகப் பார்க்க வேண்டியதில்லை.

இந்தியாவுக்கு ஆபத்து என்றதும், அது சீனக் கொம்யுனிஸ்டுகளால் உண்டாக்கப்படுவது என்பதைத் தெரிந்துகொண்டதும் எப்படி இந்தியக் கொம்யுனிஸ்டுகள் தமது வாலைச் சுருட்டிக்கொண்டு ‘இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா’ என்ற தோரணையில் இருக்கிருர்களோ அப்படியேதான் நாளைக்கு இலங்கைக்கு ஆபத்து என்ருல் இவர்களும் இருப்பார்கள். இதில் ஐயத்துக்கு இடமில்லை.

இன்றைய நிலையில் இலங்கைக்கு எந்தத் திசையிலிருந்து எப்போது ஆபத்து வரும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. திபெத்தையும் இந்தியாவையும் போல சீனுவின் எல்லையோரத்தில் இலங்கை இல்லாவிட்டாலும் வர்த்தக தொடர்புகளும் வேறு விவகாரங்களும் இலங்கைக்கும் சீனுவுக்குமிடையே இருக்கவே இருக்கின்றன. ஊசி குத்த மட்டும் இடம் கிடைத்தால்கூட அதில் உலக்கையையே நுழைக்க முயலும் கொம்யுனிஸ்டுகளுக்கு இந்த தொடர்புகள் போதாவா? தோழர்களின் தயவு இருக்கும் வரையில் இவைகூட வேண்டியதில்லையே!

**எனவேதான் நம்மவர்களை எச்சரிக்க விரும்புகிறேம்.** இந்தியாவில் நடப்பதை ஒரு பாடமாகக்கொண்டு நாம் இங்கு சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நம்மிடையே நல்லவர்போல நடமாடும் நச்சரவங்கள் (தோழர்கள்) விஷயத்தில் எப்பொழுதும் விழிப்புடன் இருக்க வேண்டும். எத்தனைதான் இனிக்க இனிக்கப் பேசினலும் [illegible] கெடுப்பவர்களை அணைக்கலாமா? அறவே கூடாது.

பட்டிருப்பார் விருந்து:

# வாக்குறுதி எங்கே? ராஜினமா செய்வாரா?

## எட்டப்பன் எதிர்மான சிங்க(ள)த்தை எதிர்த்து எண்ணிறந்த துண்டுப் பிரசுரங்கள்

[ எழுதியவர் : “இராமபாணம்” சுதந்திரன் விசேஷ நிருபர் ]

வீர பாண்டிய கட்டபொம்மனை வெள்ளையரிடம் காட்டிக் கொடுத்தான் மானங் கெட்ட ஒரு எட்டப்பன்! அவனுக்குத் துணை நின்ருன் தமிழ் வளர்த்த பெரும் பரம்பரையில் வந்தும் நாட்டன்பு அற்றவனுன கயவன் தொண்டைமான்!

இங்கு தமிழ் மக்களைச் சிங்களவரிடம் காட்டிக் கொடுக்கும் இழி செயலைப் புரிகிருர் ஈழத்து எட்டப்பனுன எதிர்மான சிங்க(ள)ம். தொண்டைமானைப் போல் அண்டையில் நின்று துணை புரிகிருர் ஒரு புலவர் மணி!

முன்னவருடைய பூர்வாசிரமத்தையும், பின்னவருடைய அரசியல் அந்தரக் கரணங்களையும் ஏற்கனவே இப் பத்திகளில் எடுத்துரைத்தோம்.

எட்டப்பன் எதிர்மான சிங்க(ள)ம் சொந்தக் கையெழுத்துடன் அச்சிட்டு வெளியிட்ட ஒரு துண்டுப் பிரசுரத்தின் ‘போட்டோஸ்டாட்’ பிரதியை வெளியிட்டு, “(1) சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து பெற்றுக் கொடுப்பேன். (2) தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தைத் தடை செய்வேன். (3) தமிழுக்குச் சம அந்தஸ்து கொடாத எந்த அரசாங்கக்கட்சியிலும் சேர மாட்டேன். (4) தமிழுக்கு ஆபத்து வருமானல் பாராளுமன்ற அங்கத்தவர் பதவியை ராஜினமாச் செய்வேன்” என்றெல்லாம் அவர் சூளுரைத்த பெற்றியினையும் பின்னர் இன்று அவர் நடந்துகொண்டுள்ள விதத்தினையும் அம்பலப்படுத்தினேம்.

இப்படிப்பட்ட ஒருதுப்புக்கெட்ட மனிதருக்கா வரவேற்பு? எதற்காக இந்த வரவேற்பு? என்று கேட்டிருந்தோம். பட்டிருப்புத் தொகுதியில் களுதாவளை என்னும் கிராமத்தைச் சேர்ந்த திரு. எஸ் பூபாலபிள்ளை என்பவர் வரவேற்பா? எதற்கு?” என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் மூலம் கேட்டிருந்த பத்துக் கேள்விகளைக் கடந்த வாரம் வெளியிட்டிருந்தோம்.

அதைப்போல வெளியாகிய துண்டுப் பிரசுரங்கள் ஒன்றிரண்டல்ல. எத்தனையோ வெளியாகியுள்ளன. வாக்குறுதி எங்கே?—ராஜினமாச் செய்வாரா? என்று கோட்டைக்கல்லாறைச் சேர்ந்த பட்டிருப்புத் தொகுதி வாக்காளன் திரு க. வடிவேல் என்பார் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 17-11-56-ல் வெளியிட்ட ஒரு துண்டுப்பிரசுரம் இன்னும் ஞாபகப்படுத்துவதற்கு அருகதையானது.

அப்போதே இந்த எட்டப்பனுக்கு எத்தகைய எதிர்ப்பு அவர் தொகுதியில் இருந்ததென்பதற்கு இத் துண்டுப் பிரசுரம் ஒரு எடுத்துக்காட்டு என்பது மட்டுமல்ல, அரசாங்கக் கட்சியில் சேர இவர் அப்போதே என்ன பாடுபட்டார் என்ற வெட்கக்கேட்டினையும், அன்று பிலிப் கோஷ்டியின் பலத்தினுல் யாருடைய உதவியும் வேண்டாதிருந்த நிலையில் [illegible] கட்சியில் சேர்த்துக்கொள்ளாது எட்டி உதைத்துத் தள்ளினர் என்பதனையும் மேற்படி துண்டுப்பிரசுரம் நினைவு கூரச் செய்கிறது.

பிரஸ்தாப துண்டுப் பிரசுரம் கூறுவதாவது:—

பட்டிருப்புத் தொகுதி வாக்காளர்களே,

பாராளுமன்றத் தேர்தல் முடிந்து மாதங்கள் சிலதான் கடந்து விட்டன ஆயினும் இந்தக் குறுகிய காலத்திற்குள்ளேயே பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற அங்கத்தவர் அவர்கள் தமது தேர்தல் வாக்குறுதிகளை மீறித் தமிழ் பேசும் சமுதாயத்திற்கு சிறப்பாக பட்டிருப்புத் தொகுதிக்கு ஏற்படுத்தியுள்ள அவமானங்களை எண்ணிப் பார்க்க மனம் கூசுகிறது. தன்மானம் உள்ள தமிழ் இரத்தம் கொதிக்கிறது.

தேர்தல் பிரசார காலத்தில் அன்புள்ள சோ. உ. எதிர்மானசிங்கம் அவர்கள் 9-3-56 ஐ. உடைய தமது வேண்டுகோள் ஒன்றில்:

அன்பர்களே!

மட்டக்களப்புத் தமிழ் ஐக்கிய முன்னணியே நான் சேர்ந்திருக்கும் கட்சியாகும். இக்கட்சியின் நோக்கங்கள் பின்வருமாறு:

1. சிங்களத்திற்கும் தமிழிற்கும் சம அந்தஸ்து பெறுவது.
2. தமிழ்ப் பகுதிகளிலே சிங்களக் குடியேற்றத்தை தடை செய்வது.
3. தமிழுக்குச் சம அந்தஸ்துக் கொடாத எந்த அரசாங்கக் கட்சியிலும் சேராமல் விடுவது.
4. தமிழுக்கு ஆபத்து வருமானல் பாராளுமன்ற அங்கத்தவர் பதவியை இராஜினமா செய்வது.

இந்தக் கொள்கைகளை நிறைவேற்றுவேன் என்று உறுதிப் படுத்துகிறேன் என்று கூறியிருந்தார்.

அன்பர்களே! பாருங்கள் இவ்வித உறுதி கூறிய திரு. எதிர்மன்னசிங்கம் தான் இன்று பச்சோந்தியாக வாக்கு மாறிக்கொண்டிருக்கிருர். நான் ஓர் தமிழன். என் உடம்பில் ஓடுவது தமிழ் இரத்தம் என்றெல்லாம் மார்பு தட்டிய இந்த மாவீரன் இன்று மக்களை ஏய்த்து மட்டந்தட்டுகிருர். இவ்வித பொய்ப் பிரசாரங்களாலும் இவருக்கே உரியதான சில அசகாய சூரத்தனத்தினுலும் 106 அதிகப்படியான வாக்குகளால் வெற்றியடைந்தார். வெற்றியடைந்தும் செய்தது என்ன?

1. இலங்கையில் அரசியல் மொழி சிங்களம் மாத்திரம் தான் என்று சட்டமாக்கி இந் நாட்டில் வாழ் தமிழ் பேசும் பெருங்குடி மக்களை உரிமையற்ற அடிமைகளாக்கி பண்டார நாயக்கா அரசாங்கத்துடன் தானகவே மனுப் பண்ணினர். அவர்களால் ஒதுக்கித்தள்ளப்பட்டார்.
2. தனிச்சிங்கள சட்டத்தை அமுல் நடத்துவதற்கு வசதியான அந்தப் படுபாதக வரவு—செலவு திட்டத்தை வடக்கு கிழக்கு மாகாண ஏனைய பிரதிநிதிகளும் முற்போக்குச் சிங்கள பிரதிநிதிகளும் எதிர்த்து வாக்களித்த போதும் அன்பான எதிர்மன்னசிங்கம் மாத்திரம் சாதகமாகவாக்களித்தார்.
3. திருமலையில் உரிமைக் குரல் எழுப்பத் திரண்டிருந்த தமிழர் பெருங் கூட்டத்தைப் பண்டாரநாயக்கா அவர்கள் அங்கீகரிக்க முன்வந்த போதும் தமிழ் இரத்தம் ஓடும் பட்டிருப்புப் பிரதிநிதியோ கூட்டம் வேண்டாம் அனுமதி கொடாதீர்கள் என்று பண்டார நாயகாவுக்குத் தந்தியடித்தார். ஏமாற்றமும் அடைந்தார்.
4. சமீபத்தில் நேர்ந்த கல்லோயாக் கலவரம் காரணமாக நமது மக்கள் தமது உயிர்களையும் உடமைகளையும் இழந்து தத்தளித்த நேரத்தில் நம் தொகுதி மக்களுக்கு எவ்வித உதவியும் செய்யாது கொழும்பு மாநகரில் உல்லாசமாக நின்று நம்மைக் கைவிட்டார்.
5. பண்டாரநாயக்கா அரசாங்கத்தைத் தமிழ் பேசும் பிரதிநிதிகள் பூமு மூச்சோடு எதிர்த்து வரும் இந்த வேளையில் தமிழ்த் துரோகியாகிய எதிர்மன்னசிங்கம், “அரசாங்கப் பாராளுமன்ற கட்சியின் கொள்கைகளையும் திட்டங்களையும் ஏற்கத் தயாராக இருக்கின்றேன். என்னையும் கட்சியில் சேர்த்துக் கொண்டால் மகிழ்ச்சியடைவேன்” என்று மீண்டும் மனுப் பண்ணி அவர் கட்சியி சேர்த்துகொண்டார்.
6. ஒரு சில ஆசிரியர்களுக்கு இடமாற்றங்களை ஏற்படுத்துவது போன்ற சில அற்ப சலுகைகளை இரந்து பெற்றுக் கொடுப்பதே தமது கடமை என நினைத்து நடந்து வருகிருர்.

இவருடைய இந்த வெட்கக்கேடான செய்கைகளைத் தமிழாபிமானமுள்ள எந்தச் சமுதாயமும் சகித்துக்கொண்டிருக்கமாட்டாது தன்மானமும் துரோகமும் நிறைந்த இவரது குட்டிக்கரணங்களை தமிழ்பேசும் சகல மக்களும் உணர்ந்து மனம் கொதிக்கிருர்கள். எஃகு நெஞ்சம் படைத்த இளைஞர் கூட்டம் ஏமாந்துவிட்டோமே என்று துடிக்கிருர்கள். உரிமைகளை இழந்து அற்ப சலுகைகட்காக மண்டியிட்டு வாழும் அடிமை வாழ்வு வேண்டாம் என்று எதிர்ப்புக் குரல் எழுப்புகிருர்கள் எனவே நமது சமுதாயத்தின் பேரில் உள்ள அன்பால் தமிழ்மீது ஆணையாக கேட்கின்றேன் திரு. எதிர்மன்னசிங்கம் அவர்கள் உடனே தமது பாராளுமன்ற பிரதிநிதி பதவியை ராஜினமா செய்யவேண்டும். கொடுத்த வாக்குறுதிகளை மீறி தமிழ் பேசும் சமுதாயத்தின் கொடும்பாவியாக மாருது பட்டிருப்புத் தொகுதி வாழ வழிவிட வேண்டும்.

ராஜினமா செய்வாரா?

—(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பராமரிப்பு தாதிமார் பயிற்சிப் பாடசாலை:

# தமிழ் போதனாசிரியர் ஆகும் உரிமை

# ஆங்கிலம் படித்தவர்களுக்கு மட்டும் என்று இருப்பது ஏன்?

## தமிழைப் படித்து தமிழில் பயிற்சி பெற்றவர்கள் தகுதி இல்லையா? புறக்கணிக்கப்படுவது ஏன்?

(சுதந்திரன் நிருபர்)

"பராமரிப்புத் தாதிமார் பயிற்சிப் பாடசாலையில் தமிழ் போதனாசிரியர், சிரேஷ்ட போதனாசிரியர் ஆகப் பணியாற்ற ஆங்கிலத்தில் பட்டமும் பயிற்சியும் பெற்றவர்கள் ஏன்? தமிழையே கற்று தமிழிலேயே பராமரிப்புத் தொழில் செய்பவர்களைத் தேர்ந்தெடுத்தால் என்ன?" என்ற கேள்வி பல வட்டாரங்களிலும் எழுப்பப்படுகிறது.

பராமரிப்புத் தாதிமார் பயிற்சிப் பாடசாலைகளில் தமிழ் போதனாசிரியர், சிரேஷ்ட போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமான விளம்பரம் 28-8-59 அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கிறது.

விளம்பரம் தெளிவாக இல்லாததால் பலரும் குழப்பமடைந்திருக்கிறார்கள். இன்னும், விளம்பரம் ஆங்கிலத்தில் மட்டும் பிரசுரிக்கப்பட்டிருப்பதால் அவர்களின் கவலை அதிகமாகிறது.

### தகுதிகள்

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு பின்வரும் தகுதிகள் இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு இருக்கிறது:

1 அங்கீகரிக்கப்பட்ட ஒரு பராமரிப்புத் தாதிமார் பயிற்சி நிலையம் அளித்த "சிஸ்டர் ரியூடர்மாரின் டிப்ளோமா" தராதரப் பத்திர முடையோர்; அல்லது

2 பராமரிப்புத் தாதிமார் தொழிலில் ஒரு பராமரிப்புத் தாதிமார் சகோதரியாக ஒரு ஆண்டு செயல்முறை அனுபவத்தோடு கூடிய பராமரிப்புத் தாதிமாருக்குரிய பி. எஸ்சி. பட்டதாரி.

3 தமிழில் போதிக்கக் கூடிய திறமை.

"இந்த விளம்பரம் ஆங்கிலப் பிரிவிலேயே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றமையால் ஆங்கிலத்திலே மேற்படி தராதரங்களையுடையோரைத்தான் தகுதியுள்ளோராக்குகின்றது.

"தமிழையே கற்று, தமிழிலேயே பராமரிப்புத் தாதிமார் தொழிலைப் பயின்று தமிழ் நோயாளரோடேயே பழகி அனுபவப்பட்ட பராமரிப்புத் தாதிமார் இணுவில், மானிப்பாய் 'மிஷனறி' மருத்துவ நிலையங்கள் போன்றவற்றில் பணியாற்றி வருகிறார்கள்.

"இவர்களுள் அனுபவம் நிறைந்தோர் மேற்படி பதவிகளுக்குத் தகுதியற்றவர்களா? ஆங்கிலத்தில் மேற்படி தராதரங்களையுடையோர் தமிழில் அந்தப் போதனையைப் பெற்றவரை விட தமிழில் போதிக்கும் திறனை அவ்வளவு சுலபமாகப் பெற்று விடுவார்களா? ஏன் தமிழில் பயின்று தமிழில் தொழில் செய்பவர் போதிய அனுபவஸ்தராயிருந்தால் அவருக்கு போதனாசிரியராகும் சந்தர்ப்பம் ஏன் அளிக்கக்கூடாது?"—இப்படி ஒரு வாசகர் எழுதிக்கேட்டிருக்கிறார். அரசினர் இதற்கு ஆவன செய்யவேண்டும் என்றும் தமிழரசுத் தலைவர்கள் தலையிட்டு அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டிருக்கிறார்.

## பால்சபை தருவது ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பால் இன்ன பால்தான் என்று பால் சபை விவரித்துக் கூறுவதில்லை. ஆனால் பலர் பால் சபை தரும் பால் பசும் பால் என்ற எண்ணத்திலேயே வாங்கிப் பாவிக்கின்றனர்.

மன்னம்பிட்டி யென்ற இடத்தைச் சேர்ந்த பால் வியாபாரி ஒருவர் கூறிய தகவலின்படி மன்னம்பிட்டிலிருந்து பால் சபைக்கு அனுப்பப்படும் பால் பெரும்பாலும் எருமை மாட்டுப் பால் என்றே தெரிய வருகிறது. பால் வியாபாரிகள் பலர் எருமை மாட்டுப் பாலில் தண்ணீர் கலந்து பசும் பால் என்று பால் சபையின் கொள்வனவு நிலையத்தில் கொடுத்து வருகிறார்களாம்.

கொழும்பில் உள்ள பால் வியாபாரிகள் பவுடர் பாலையே பசும் பாலாக பால் சபைக்குக் கொடுத்து வருகிறார்கள் என்ற செய்தியை ஏற்கனவே சுதந்திரன் வெளியிட்டிருக்கிறது.

## தமிழுக்கு மதிப்பளிக்கும் இன்ஷூரன்ஸ் ஸ்தாபனம்

தமிழியக்கம் தழைக்கும் இவ்வேளையில் தமிழர் சம்பந்தப்பட்ட மட்டில் அவர்களுக்கு தமிழில் பாலிஸிகளை வழங்கி அதன் மூலம் தமிழுக்கு முக்கியத்துவம் அளிக்க முன்வந்திருக்கிறது கொழும்பு ஆயுள் அஷ்யூரன்ஸ் லிமிட்டெட் என்ற இன்ஷூரன்ஸ் ஸ்தாபனம்.

சீரிய ஒழுக்கத்துக்கும், சிறந்த பணிக்கும், நேரிய நடைமுறைக்கும், நிலைதரமான நிதி அமைப்புக்கும் பெயர் பெற்ற இக் கம்பனி திரு எச். வி. பெரேரா கியூ. ஸியை டைரக்டர் சபைத் தலைவராகக் கொண்டு இயங்கிவருகிறது.

பாலிஸிதாரர்களுக்கு நல்ல சலுகைகள் அளிப்பதோடு கடன் வசதிகளும் வழங்கும் இக் கம்பனி, எல்லாவற்றிற்கும் மேலாக பாலிஸித் தொகைகளை உடனுக்குடன் கொடுத்துத் தீர்த்து விடுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


இன்ஷூரன்ஸ் சரித்திரத்திலேயே ஓர் புரட்சி!!

"கொழும்பு ஆயுள் அஷ்யூரன்ஸ் கம்பெனி" யாரால் ஆயுள் இன்ஷூரன்ஸ் பாலிஸிப் பத்திரங்கள் இப்பொழுது தமிழ் மொழியில் வழங்கப்படுகின்றது.

"கொழும்பு ஆயுள் அஷ்யூரன்ஸ் கம்பெனி" யானது அதன் பாலிஸிதாரர்கள் ஒவ்வொருவருடனும் அவரவர் தாய் மொழியிலேயே தொடர்பு கொள்தல் வேண்டும் என்னும் சீரிய கொள்கைக்கிணங்க தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும், பாலிஸிப் பத்திரங்கள் வழங்கும் அரிய பெருமையைத் தேடிக் கொண்டுள்ளது.

ஒரு தமிழ்ப் பாலிஸிப் பத்திரத்தின் முகப்பு



சேவையே கொழும்பு ஆயுள் அஷ்யூரன்ஸாரின் மகத்தான லட்சியம் என்பதற்கு இதோ மற்றுமோர் சான்று!

கொழும்பு ஆயுள் அஷ்யூரன்ஸ் லிமிட்.

COLOMBO LIFE ASSURANCE LTD.

தலைமைக் காரியாலயம்:
இலங்கை வங்கிக் கட்டடம், யோர்க் வீதி, கொழும்பு-1
யாழ்ப்பாணக் கிளைக் காரியாலயம்:
'ராஜா கட்டடம்', ஆஸ்பத்திரி தெரு, யாழ்ப்பாணம்.


## இந்தியா மீது சீனா ....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யறை இல்லாததே இந்தச் சம்பவங்களில் கொண்டு போய்விட்டிருக்கிறது" என்றுதான் கொம்யூனிஸ்டுகள் தமது அறிக்கையில் கூறியிருக்கிறார்கள்.

எங்கேனும் ஒரு மூலையில் அமெரிக்காவோ அல்லது வேறு இவர்களின் வைரி நாடு எதுவோ கொக்குக்கு குறிவைத்து ஒரு வேட்டு தீர்த்தாலே போதும்; "ஆக்கிரமிப்பு" என்று கொக்கரிக்கும் கொம்யூனிஸ்டுகள் சொந்த நாட்டில் சீனர்கள் செய்வதுபற்றி உருப்படியான அபிப்பிராயம் தெரிவிக்க தயங்குகிறார்கள். இந்தியாவின்மீது உண்மையான அன்பும் விசுவாசமும் இவர்களுக்கு இல்லை என்பது முன்னர் பலதடவைகளில் வெளியாயிற்று. இப்போது அது ஊர்ஜிதமாகிறது.

### பாத பூசை

தமக்கு தலைவர்களும் வழிகாட்டிகளுமாக இருப்பவர்கள் ருஷ்யர்களும், சீனர்களுமே என்று நம்பி வாழும் இந்திய கொம்யூனிஸ்டுகள் (இலங்கை கொம்யூனிஸ்டுகளையும் சேர்த்துக்கொள்ளலாம்) தாம் வாழும் நாட்டில் தலைவர்களும் வழிகாட்டிகளும் காலடி வைத்தால் அதைக் கண்டிக்கவா செய்வார்கள்? பாதபூசை செய்து வரவேற்கவல்லவா செய்வார்கள். அதுதான் நடக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் டில்லியில் நேருவுடன் பேசிய பின் வெளியிட்ட கருத்து ஒன்றை நினைவுகூர வேண்டும்: "ஆசியப் பிராந்தியத்தில் உள்ள ஒரு நாட்டில் இன்னொரு நாடு புகுந்து கொண்டது என்றால் அப்படி அந்த நாட்டை வரவேற்க அங்கு ஆட்கள் இருந்தார்கள் என்பதுதான் உண்மை இது சரித்திரம் தரும் பாடம்"—இப்படி அயூப் சொன்னார்! பழைய இந்தப் பாடத்தை இந்திய கொம்யூனிஸ்டுகள் இப்போது புதுப்பிக்கிறார்கள் போலும்! பேஷ்.........பேஷ்!!

## வானொலி ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை எங்கிலுமிருந்து செய்தி சேகரிக்க ஒரு வழி செய்யப்போகிறார்கள். அதாவது எல்லா மாகாண தலைநகரங்களிலும் மற்றும் பெரிய பட்டினங்களிலும் நிருபர்களை நியமிக்கப்போகிறார்கள். இவர்கள் பத்திரிகை நிருபர்களைப்போல உடனுக்குடன் ஆங்காங்கே நடக்கும் சம்பவங்கள் பற்றி வானொலி நிலையத்துக்கு செய்தி அனுப்புவர். அதற்கான வசதிகள் நிருபர்களுக்கு செய்து கொடுக்கப்படும்.

## தமிழியக்கம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திகளுக்கும் இலங்கைக்கும் அனுப்பும் கடிதங்கள் முதலியவற்றுக்குத் தமிழிலே முகவரி இடுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

### தமிழியக்க வாரம்

ஏறக்குறையப் பதினாயிரம் தொண்டர்கள் சேர்ந்தவுடன் தமிழியக்க வாரம் நடத்துவோம். எனவே ஆர்வமுள்ள அன்பர்களை உடனே தொண்டர்களாகச் சேருமாறு அழைக்கிறோம். தொண்டர்களாகச் சேர விரும்புவோர் தமிழியக்கம் மே/பா. சுதந்திரன், த. பெ எண். 1183 கொழும்பு எனும் முகவரிக்குத் தங்கள் முகவரி, வயது, தொழில் முதலிய விபரங்களை உடனே அறிவிக்குக.

"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்."
—தமிழ் மறை 668.

## பாராளுமன்றத் தேர்தல்

இலங்கையின் நலனையும், தமிழரின் ஷேம நலன்களையும் முன்னிட்டு, தவிர்க்கமுடியாத அவசியமேற்படின், பாராளுமன்றத் தொகுதிகளில் ஒன்றிற்கு எனது சேவையைத் தாழ்மையுடன் அர்ப்பணிக்க நான் தயாராக இருப்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சு. சிவசுப்பிரமணியம்
103/2, ஹல்ஸ்டார்ப்
(கோட்டடி)
கொழும்பு-12.


சி. சி. சி.

தெங்குப் பசளைக் கலவைகள்



அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு நயவுசெய்து எழுதுக:-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரை கூறுக்கப்பட்டுள்ளது.

தபாற் பெட்டி 33, கொழும்பு. CCC625


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவு

சிறுகதை — எழுதியவர்: மு. தளையசிங்கம்

"நீலவண்ணக் கண்ணனே
உன் எண்ணமெல்லாம்
நான் அறிவேன்
கண்ணா என் கையைத்
தொடாதே!"

அதே பாட்டு! அதே நேரம்! அதே சூழல்! நேற்றும் அவள் அப்படித்தான் பாடினாள்!

சிவராமனின் இதயத்திலே முதல்நாள் நடந்த நிகழ்ச்சியின் நினைவு நிழலாக ஓடியது—

நேற்றும் அவன் அதே இடத்தில்தான் இருந்து கொண்டிருந்தான்.

அவள் பாடினாள்.

அடுக்களைப் பக்கமிருந்து கிண்ணங்களின் கலகலப்போடு ஒட்டி இணைந்து எழுந்த அந்தக் கீதத்தில் மிதந்து வந்த குரலின் இனிமையை நயந்த சிவராமனின் உள்ளத்திலே கூடவே ஒரு கேள்வியும் எழுந்துகொண்டது.

"அமராவுக்கு இத்துணை துணிவு எப்போது வந்தது?"

"பாடு அமரா! ஒரு பாட்டு" என்று முன்பெல்லாம் அவன் கேட்டுக்கொள்ளும்போது 'மாட்டேன்' என்று சிணுங்கும் அவள் இப்போது கேட்பார் ஒருவருமில்லாமலே கீதம் இசைக்கத் தொடங்கியது அவனுக்கு ஆச்சரியத்தைத்தான் ஊட்டியது. என்றாலும் அதைப்பற்றி அவன் அவ்வளவாகக் கவலைப்பட்டுக்கொள்ளவில்லை. கால் விரல்கள் தாம் பாட்டுக்குத் தாளம் போட்டுக்கொண்டாலும் கையிலிருந்த நாவலில் பதித்திருந்த கண்களுடன் தன் இதயத்தையும் இணைத்துக் கொண்டான்.

இரண்டொரு நிமிடங்களுக்குப் பின் அந்தப் பாட்டுக் கேட்கவில்லை. கிட்ட நெருங்கி வரும் பாதங்களின் மெல்லிய ஓசைதான் கேட்டது.

"இந்தாருங்கோ கோப்பி!"

தலையை நிமிர்த்திப் பார்த்துக்கொண்டான் சிவராம். எதிரே அஜந்தாவிலிருந்து பெயர்ந்து அன்னநடை போட்டு வந்த அழியா ஓவியமாய் நின்றுகொண்டிருந்தாள் அமரா! கோப்பிக் கிண்ணத்தைக் கொடுக்கும் போது அவளின் விழிகளில் மிதந்த மயக்கத்திலும் இதழ்களில் நெளிந்தோடிய இளஞ்சிரிப்பிலும் அர்த்தம் பொதிந்திருந்தது.

சிவராம் அவளை ஆசையோடு மட்டும் பார்க்கவில்லை. ஆச்சரியத்தோடுந்தான் பார்த்துக் கொண்டான்.

அமரா அவனுக்கு மருமகள். ஆனால் சொந்த அக்காவின் மகளல்ல. தூரத்து உறவுதான் என்றாலும் பக்கத்து வீட்டுப் பெண் அவள். சின்னஞ் சிறு வயதில் அவள் அவனுடன் செல்வமாகப் பழகியவள். ஆங்கில அரிச்சுவடிகூட அவனிடந்தான் அவள் கற்றுக்கொண்டாள். அப்போதெல்லாம் அவள் அவனுடன் ஒரு மாணவியைப்போல்தான் பழகாவிட்டாலும் சகோதரியைப் போல் பழகத் தவறவில்லை. அவன் அவளின் பிஞ்சுத் தலையில் குட்டியிருக்கிறான். அவளின் பட்டுக் கன்னங்களில் அறைந்திருக்கிறான். அதையெல்லாம் அவள் சீக்கிரம் மறந்துவிடுவாள், "மாமா! மாமா!" என்று சதா அவனையே சுற்றிச் சுற்றி வருவாள்.

அது அப்போது; ஐந்து ஆண்டுகளுக்கு முன்—பட்டணத்தில் அவள் படிக்கச் செல்லமுன்.

ஆனால் இப்போது?

அதுதான் சிவராமனுக்கு இன்னும் தெரியவில்லை.

ஐந்து ஆண்டுகள் அவளுக்கு அழகை அள்ளிக் கொடுத்திருக்கலாம், பருவத்தின் துடிப்பை ஊட்டியிருக்கலாம். ஆனால் பழக்கத்தையுமா மாற்றிவிட்டிருக்க வேண்டும்?

அமரா ஓடி ஒளிந்து கொள்ள வேண்டாம். கண்களைப் பொத்திக்கொண்டு கண்ணராவியாகச் சிணுங்க வேண்டாம். அதெல்லாம் பட்டிக்காட்டுப் பெண்களுக்குத்தான். படித்த அமராவுக்கு அவை தேவையில்லை.

சிவராமனுக்கு அது தெரியாமலில்லை.

ஆனால் பட்டணத்துக்குப் போய் படித்து விட்டால் அந்த நெளிவும் குழைவும் சேர்ந்தா வந்து விட வேண்டும்? விழிகளில் ஏன் அந்தப் போதை? பார்வையில் ஏன் அந்த மயக்கம்? சிரிப்பில் ஏன் அத்தனை அர்த்தம்? பட்டணப் படிப்பு ஒட்டி விட்ட சின்னங்களா?

சிவராமனுக்கு அது தான் தெரியவில்லை.

ஆனால் அதைப்பற்றி அவனால் சிந்திக்கவும் முடியவில்லை. இல்லை; சிந்திக்க அவனை அவள் விட்டு வைக்கவில்லை.

"தன்னந் தனியான என்
னைத் துன்புறுத்தலாகுமோ?
நான் உனக்குச் சொந்தமோ?
ராதை என்ற எண்ணமோ?"

கோப்பிக் கிண்ணத்தைச் சிவராமனின் கையில் கொடுத்து விட்டுத் திரும்பிய அமரா திரும்பவும் பாடினாள். இடையை ஒடித்து காலை ஆட்டி அபிநயம் பிடித்த வண்ணம் தோளில் தன் முகத்தை வைத்து உடம்பை நெளித்த போது அவளின் கடை விழிகள் சிவராமனை வேலாய்க் குத்தின. சினிமா நடிகை ஒருத்திக்குத் தெரியாதவை அமராவுக்குத் தெரிந்திருந்தன!

சிவராமனின் சிந்தனை தடம் புரண்டது. அப்பேற்பட்ட விஸ்வாமித்திரரான விஸ்வாமித்திரரே தோற்றுப் போனபோது கேவலம் அற்ப இளம் வாலிபனான சிவராம் என்ன செய்வான்?

"அமரா! யார் அந்தக் கண்ணன் உன்னைத் தொந்தரவு செய்தவன்?"

வாழ்க்கையிலே முதன் முறையாக அமராவிடம் அவன் அப்படி ஒரு அந்தரங்கமான கேள்வி கேட்டான். ஆனால் அமராவோ தனக்கு வாழ்நாள் முழுதுமே அந்தக் கேள்வி பழக்கப்பட்டது போல் பதிலிறுத்தாள்!

"யாரோ ஒருவன் யாழ்ப்பாணத்தில் இருக்கிறான்"

என்றாலும் அவளுக்கு வெட்கம் இருக்கத்தான் செய்தது. ஒருவேளை இல்லாததைத்தான் இருக்கிறதென்று காட்டிக்கொண்டாளோ? முகத்தை மூடிப் பொத்திக்கொண்ட கை விரல்களினூடே கண்சிமிட்டினாள் அமரா!

விளையாட்டா? வினையா?

சிவராமன் சிந்திக்கவில்லை. அவளின் மயக்கம் அவனையும் தீண்டிக்கொண்டது. அவளின் இதயத்தின் அந்தரங்க இடத்தை கிண்டிக் குடைவது அவனுக்கு இனித்தது.

"உன்னுடன்தான் அவன் படிக்கிறானா, அமரா?"

முற்றத்துப் பக்கம் முகத்தைத் திருப்பிய வண்ணம் அருகில் நின்ற தூணை அணைத்துக்கொண்டு நின்ற அமரா கடைவிழியால் அவனை நோக்கிச் சிரித்தாள். சிவராமனின் ஆசை நரம்பை மீட்டிற்று அது.

"ஆமா, அமரா, உன்னுடன்தானா படிக்கிறான்?"

"இல்லை. இப்போ அவர் மெடிகல் காலேஜில் சேர்ந்து விட்டார். டாக்டராக வருவதற்கு ஏழு வருடம் படிக்கப் போகிறாரும்."

நிலத்தில் கோலமிட்ட காலின் கட்டை விரலை நோக்கி நின்ற அவளின் நயனங்கள் மெல்ல நிமிர்ந்து சிவராமனின் கண்களைச் சந்தித்துக் கொண்டன. என்ன செய்திதான் அவை சொல்லினவோ தெரியாது. ஆனால் சிவராமன் மட்டும் "நீ பெரிய கெட்டிக்காரி!" என்று அவளைப் புகழ்ந்து கொண்டான்.

"சும்மா போங்க" என்று தன் தலையை ஒடித்தவண்ணம் சொல்லிவிட்டு அறைக்குள் ஓடினாள் அவள். அதற்குப்பின் மெல்லிய பாட்டின் முணு முணுப்புடன் ஏதோ பெட்டி புத்தகம் தட்டுப்படும் ஓசைதான் கேட்டது. வேறு சலனம் இல்லை.

சிவராமன் அவள் ஊட்டி விட்டுப் போன இன்ப நினைவில் மெல்லவும் முடியாமல் சொல்லவும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

இரண்டொரு நிமிடங்களுக்குப் பின் வெளியே வந்தாள் அமரா. கையில் ஒரு புகைப்படமும் கட்டுக் கடிதங்களும் இருந்தன.

"இதோ அவரின் போட்டோ" என்று அவள் நீட்டிய புகைப்படத்தைப் பார்த்து விட்டு "ஆள் அழகாகத்தான் இருக்கிறான். நீ கொடுத்து வைத்தவள், அமரா!" என்று சொல்லிக் கொண்டான் சிவராமன்.

ஆனால் அவள் அத்துடன் திருப்திப் படவில்லை. "இதோ இவற்றையுந்தான் பாருங்களேன்" என்றவாறு கையில் இருந்த கட்டுக் கடிதத்தை நீட்டினாள். "அதை எல்லாம் நான் ஏன் படிப்பான்?" என்று சிவராமன் சொல்லியும் அவள் கேட்கவில்லை, கையில் ஒரு கடிதத்தைத் தானே எடுத்துப் பிரித்து சிவராமனின் கண்களுக் கெதிரே நீட்டினாள்.

"அன்பே, அமரா!"—

கடிதத்தில் கண்ட சொற்களுக்கு ஒலி கூட்டிய சிவராமனின் உதடுகள் தொடர்ந்து எதுவும் சொல்லாமல் ஓய்ந்துவிட்டன. காரணம், மெல்ல நிமிர்ந்து அமராவைப் பார்த்துக் கொண்ட அவனின் கண்கள்

(11-ம் பக்கம் பார்க்க)

## மூங்கில் திரைக்குப் பின்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளார்கள். இரக்கமற்ற நாட்டுத் துரோகிகளினது உள்ளம் இரும்பாலானது எனக் காட்டுதற்குப் போலும் அவர்களது உருவங்களை இரும்பினாற் செய்தார்கள்!

இன்றைய ஆட்சி இக் கோவிலைப் பழுது பார்த்து அழகுபடுத்துவதில் அக்கறை செலுத்துகிறது. போர் மோசா மீதுபடையெடுக்கப் போர் முரசு அறைந்து கொண்டிருப்பவர் பொதுவுடமையாளர். மானம்வரின் உயிர் நீக்கும் ஆண்மையையும், நாட்டை மீட்கச் செம்படையில் [Red Army] சேரும் ஆர்வத்தையும் தூண்டுவதற்கு இக் கோவில் பெரிதும் பயன்படுகின்றதோ, என்னவோ!

### கட்டுரையாளர் மானங்காத்த கதை

மறைந்த மாவீரனுக்குக் கோவில் எழுப்பியதைப் பற்றிக் கூறுகையில் மானம் காத்த மாவீரனாக நான் திகழ்ந்ததைக் கூறாமலிருக்க முடியாது. பீக்கிங்கிலிருந்து கன்செளவிற்கு வரும் வழியில் ஒரு நாள் ஷாங்கையில் தங்கினோம். அப்பொழுது எமது குழுவினருள் ஒருவரான அருமை நண்பர் செபஸ்தியான் நோயென்று படுத்துவிட்டார். அவரை ஷாங்கை மருத்துவ நிலையத்தில் விட்டே கன்செள வந்தோம்.

இங்கிருக்கும் பொழுது ஒரு நாள் எமது குழுவின் தலைவர் இலனரோல் காய்ச்சலெனப் படுத்துவிட்டார். முன்னாள் மருத்துவ, உடல் நலத்துறை இயக்குநர் (சுகாதார டைரக்டர்) டாக்டர் விக்கிரமசிங்கா எமது குழுவின் மருத்துவ ஆலோசகராக வந்தவர், இலங்கையின் மருத்துவச் சேவையைச் செவ்வனே இயங்க வைப்பதில் அதிக கவனம் செலுத்தியதினாற் போலும் தமது உடல் நலத்தில் போதிய கவனம் செலுத்தவில்லை. எனவே அன்று அவரும் நோயென்று சுற்றுலாவில் கலந்து கொள்ளாததில் வியப்பில்லை.

ஆசிரியர் குழுவில் எஞ்சியிருந்த ஆண் சிங்கம்(!) நான் ஒருவனேதான். அன்றைய தினம் செய்த சுற்றுலாவில் என்னைத் தவிர்ந்த ஏனையோர் (வழி காட்டிகள் உட்பட) பெண்கள். ஆசிரியர் குழுவில் ஆண்களும் இருக்கிறாரகளெனக் காட்ட, பெண்கள் மத்தியிலே துணிந்து தனித்துச் சென்று மானம் காத்த மா வீரனாகத் திகழ்ந்தேன் அன்று மாலை மட்டும்!

—(தொடரும்)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11



## சிக்கனமானது! பிரகாசமுள்ளது!

உங்கள் றேடியோவில் திறமையான முறையில் கேட்பதற்கு



நாஷனல் றேடியோ பாட்றியைப் பாவியுங்கள்.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:-

எஸ். யூ. மொகமெட் ஹாஜியார்,

70, டாம் வீதி, கொழும்பு-12. 143, மெயின் வீதி, காலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவு

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கடிதத்தைத் திருப்பிப் பார்க்கு மறுத்துவிட்டனவே.

எதிரே அவனேயே விழுங்கி விடுவன போல் பார்த்துக் கொண்டு நின்றவை வெறும் விழிகளா?

குவளை மலர்கள்! கரிய வண்டுகள்! ஆழந் தெரியாத ஆழியின் நீலக் குமிழிகள்! இருளைப் பிழிந்து அதன் சாற்றை எடுத்துக் காய வைத்துக் கட்டியாக்கி வெட்டி எடுத்த இரு துண்டங்கள்!

இல்லை! இல்லை!

சிவராமன் ஓர் உணர்ச்சியில்லாத கவிஞனோ கதாசிரியனோ அல்ல, எதிரே தெரிந்த இரு விழிகளுக்கு அப்படி அர்த்தம் காண்பதுடன் திருப்தி அடைந்து விடுவதற்கு. சிவராமன் ஒரு மனிதன். உள்ளத்தில் இளமை பொங்கும் ஓர் இளைஞன்.

அவன் ஆசையோடு அவற்றை உற்றுப் பார்த்துக் கொண்டான்.

எதிரே துடிதுடிக்கும் இளமங்கைகளுக்கிடையே நின்று நர்த்தனம் ஆடியவை குவளை மலர்களுமல்ல, கரிய வண்டுகளுமல்ல. இன்பத்தின் சுடர்கள்! 'ஓடி வா! உனக்காகக் காத்திருக்கிறேன்' என்று செய்தி சொன்ன மின் விளக்குகள்!

சிவராம் உறவை மறந்தான், அறிவை மறந்தான், உலகத்தையே மறந்தான். கையில். கடிதத்துடன் எதிரே நின்று கொண்டிருந்தவள் யார், எவள், என்பதை அவனால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. ஏதோ மந்திரத்தால் உந்தப்பட்டவன் போல் தாவிப்பாய்ந்து அவளின் தளிர்க் கரங்களைப் பற்றினான்.

"படீர்" என்று அவள் அவனின் கன்னத்தில் அறையவில்லை. "என்ன நினைத்தீர்கள் என்னை?" என்று சினந்து சீறவில்லை. மாறாக "களுக்" என்று சிரித்த வண்ணம் கையைப் பறித்துக் கொண்டு அறைக்குள் ஓடினாள்.

சிவராமன் ஒரு கணம் உலகத்துக்கு வந்தான்.

ஆனால் அது அதிக நேரமில்லை. அடுத்தகணம் அறையிலிருந்து மிதந்து வந்த இன்ப கீதம் அவனின் இதயத்தைப் பற்றி எங்கெல்லாமோ இழுத்துச் சென்றது.

"நீல வண்ணக் கண்ணனே
உன் எண்ணமெல்லாம்
நான் அறிவேன்
கண்ணா என் கையைத்
தொடாதே!
கண்ணைக் கண்ணைக் காட்டி
யிங்கு வம்பு செய்யலாகுமோ?"

இதயத்தில் எழுந்த வெறி அவனின் தலையைப் பிடித்துத் தள்ளியது. ஆவலோடு ஓடினான் அறைக்குள்.

அங்கே அமரா ஒரு கட்டிலில் நளினமாகச் சாய்ந்து கிடந்தாள். உள்ளேஓடிவந்த சிவராமனைக் கண்டவுடன் பாட்டை நிறுத்திக்கொண்டு தன் முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டாள். 'களுக்' என்ற சிரிப்பொலி விரல்களினூடே வெளி வந்தது.

சிவராமன் திரும்பிப்போய் விடவில்லை. மாறாக மெல்லச் சென்று அவளின் கையைப் பற்றித் தூக்கினான்.

தட்டாமல் ஒதுக்காமல் துவண்டெழுந்தாள் அமரா! ஒன்று இரண்டென விநாடிகள் தான் ஓடின. அதற்குள் கட்டிலின் கீழிருந்து கிரீச்சிட்டது ஒரு எலி.

அந்தச் சத்தம் சிவராமனுக்கு எதைத் தான் நினைவூட்டியதோ தெரியாது. ஆனால் அடுத்த கணம் அமராவைப் பற்றியிருந்த அவனது பிடி தளர்ந்து கொண்டது.

"வருகிறேன் அமரா!"—அவன் விடை பெற்றுக் கொண்டான்.

"நாளைக்கு வாருங்கள்"—அமராதான் அழைப்பு விட்டாள்.

"ஆம்" என்று தலையாட்டிய சிவராமனின் நாக்கு அவனின் உதடுகளைத் தடவி விட்டன. அங்கே பவுடர் இனித்தது.

ஆனால் அந்த நிகழ்ச்சியைப்பற்றி பின்பு அவன் இதயத்தில் எழுந்த நினைவுகள்?.........

"என்ன சிந்தனை பிரமாதமாய் இருக்கிறதே!" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தான் சிவராமன்.

கையில் கோப்பிக் கிண்ணத்துடன் நின்று கொண்டிருந்தாள் அமரா! அவளின் விழிகளிலும் இதழ்களிலும் இனந் தெரியாத இன்பத்தின் தெளிவு நிரம்பி நின்றது. நேற்றைய நாடகத்தின் ஒத்திகையின் ஆரம்பம் அது.

சிவராம் கோப்பியை மட்டும் வாங்கிக் கொண்டான். வேறு எதையும் பார்க்கவில்லை.

"இன்று கூட ஒரு கடிதம் அவர் அனுப்பியிருந்தார்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே ஓடிப் போய் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து நீட்டினாள் அமரா.

சிவராம் கடிதத்தை வாங்கவில்லை, மாறாகக்கடிதத்தை நீட்டிய அவளின் கரத்தையே இறுகப் பற்றிக் கொண்டான்.

அவள் அர்த்தம் புரிந்தவள்போல் சிரித்தாள்.

"அமரா! அவனுக்காகத் நீ காத்திருப்பாயா?"

"இல்லாமல்?"

"உண்மையாக அவனைத் தான் நீ காதலிக்கிறாயா?"

"ஓ யேஸ் ஐ லவ் ஹிம்"

"அமரா!"—கைப் பிடியின் இறுக்கம் கூடிக் கொண்டது போல் சிவராமனின் குரலின் தொனியும் கடு கடுத்தது. அமரா திடுக்கிட்டு விழித்தாள்.

ஏன் இந்த அவதாரம்?


"அமரா! உனக்குக் காதலின் அர்த்தம் என்னவென்று தெரியுமாடி? அந்த வார்த்தை உன் வாயிலிருந்து வந்தாலே பாவமடி! மகா பாவமடீ!" என்று சொல்லிக் கொண்டே ஓங்கி அவளின் கன்னத்தில் ஓர் அறை வைத்த சிவராம் தொடர்ந்து கத்தினான் "போ நாயே அப்படி! போய் நாளைக்கே உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளக் கூடிய யாராவது ஒருத்தனைத் தேடிக் கொள். உனக்கு வேண்டியது காதலல்ல. கல்யாணம்! ஆமாம் கல்யாணம்!"

இழுத்து அவளை எறிந்து விட்டு வெளியே நடந்தான் சிவராம். நினைத்து வந்ததை முடித்துவிட்ட திருப்தி அவனது நடையில் கலந்திருந்தது.

ஒன்றும் புரியாமல் சல்லாய் நின்றாள் அமரா. ஒன்றரை மணி நேரமாக சிவராமனுக்காகச் சிங்காரித்துக் கொண்ட அவளின் [illegible] ஓடிக் காய்ந்து வாடி[illegible]கியது.

# சைக்கிள் வீரர் வலம்புரியின் மகத்தான சாதனை

## 4 இரவும் பகலும் தொடர்ந்து சவாரி-யாழ் மக்கள் அளித்த பேராதரவு



செயற்கரியது செய்து பெறற்கரிய புகழ் பெறும் பாரம்பரியம் தமிழருக்கு உரியது. சமீப காலத்தில் நீச்சல் வீரர் நவரத்தினசாமி இதை மெய்ப்பித்தார். அவரைத் தொடர்ந்து இப்போது சைக்கிள் வீரர் வலம்புரி—

தாய்த் தமிழகத்து இராமநாதபுரம் தந்த 23 இள வயது வாலிபர். 9வது வகுப்பு வரைபடித்தவர். பட்டாளத்தில் பணி புரிந்தவர். பஞ்சாபி ஒருவர் தமிழைப் பழித்த காரணத்தால் அவர் கன்னத்தில் அறைந்து அதனால் பட்டாளத்து வேலையும் இழந்து ஒரு வருடம் கம்பி எண்ணும் கதிக்கும் ஆளானவர். ஆக, தமிழுக்காக சிறை சென்ற செம்மல் அவர் என்று சொல்லலாம்.

புதுடில்லியிலே 6 மாதங்களுக்கு முன்னர் நடந்த சைக்கிள் ஓட்டப் போட்டியிலே உலகின் 14 நாடுகளிலிருந்து கலந்துகொண்ட வீரர்களோடு தமிழ்நாட்டின் சார்பில் தாமும் கலந்துகொண்டு வெற்றி பெற்ற வீரர் வலம்புரி. எல்லோரும் சைக்கிள் சீட்டிலிருந்து (ஆசனம்)முன்னால் பார்த்து ஓட இவர் மட்டும் ஹான்டிலில் (கைபிடி) இருந்து பின்னால் பார்த்தபடி முன்னுக்கு ஓடித்தான் வெற்றிபெற்றார். இந்திய ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத்தும் கூடியிருந்தவர்களும் பெரிதும் பாராட்டினார்கள்.

எப்படி இந்தத் திறமை ஏற்பட்டது என்பதற்கு வலம்புரி தரும் விளக்கம் இதுதான்: "இளமையிலிருந்தே முயல வேண்டும். சிறுகச் சிறுக நீண்டதூரம் ஒரேயடியாக ஓடிப் பழக வேண்டும். இதைப் பழிக்கப் பலர் இருப்பார்கள். ஆனால் பழகுபவர் சளைக்கவே கூடாது. இது என் அனுபவம்."

சிங்கப்பூர், மலேயா, பர்மா முதலிய நாடுகளுக்கும் சென்று தம்முடைய திறமையைக் காட்ட வலம்புரி நாட்டங்கொண்டுள்ளார். வலம்புரியே, ஈட்டுக வெற்றி எட்டுத் திக்கும் சென்று! நாட்டுக புகழ்க் கொடி!! என்று வாழ்த்தாத தமிழ் நெஞ்சம் இருக்கவே இருக்காது.

சென்ற மாதம் 19ந் தேதி காலை தொடர்ந்து 96 மணித்தியாலம் சைக்கிள் சவாரி செய்யும் சாதனையை நிலைநாட்ட முன்வந்தார் திரு மூ. வலம்புரி. முற்றவெளியில் யாழ்-மேயர் சைக்கிள் சவாரியை நல்லாசி கூறி ஆரம்பித்து வைத்தார்.

நான்கு இரவும் நான்கு பகலும் தொடர்ந்து ஓடி தனது 96 மணித்தியால சாதனையை நிலைநாட்டினார் திரு வலம்புரி. அவர் மேலும் 5 மணித்தியாலம் சவாரி செய்து 101 மணித்தியால சாதனையைக் காட்டி யாழ் மக்களை மகிழ்விக்க விரும்பினார். ஆனால் திரு வலம்புரியின் சைக்கிள் சவாரியைப் பார்க்கத் திரண்டிருந்த மக்களின் சௌகரியத்தை உத்தேசித்து திரு வலம்புரியைச் சைக்கிளிலிருந்து இறங்குமாறு யாழ் மேயர் கேட்டுக் கொண்டார்.

அதற்கு முதலில் விரும்பாத வலம்புரி முடிவில் மேயரின் வேண்டுகோளை ஏற்று ஞாயிறு பகல் 10 30 மணிக்கு தனது சவாரியை முடித்துக் கொண்டார். அவர் சைக்கிளைவிட்டு இறங்கியபோது மக்கள் வெள்ளம் எழுப்பிய கரகோஷம் விண்ணை முட்டி மோதியது.

பாக்குநீரிணையை நீந்திக் கடந்த நீச்சல் வீரர் திரு மு. நவரத்தினசாமிக்கு தமிழ் மக்கள் காட்டிய ஈடிணையற்ற வரவேற்பின் பின், நடந்த இரண்டாவது மாபெரும் வரவேற்பு வலம்புரிக்கு யாழ்ப்பாணத்தில் கிடைத்தது.

சைக்கிள் சாம்பியன் சைக்கிளிலிருந்தபடி வட்டமாக ஓடியிருந்தால் அதை ஒரு அதிசய சாதனையாகக் கருதியிருக்க முடியாது. ஆனால் அவர் சைக்கிளிலிருந்தபடி மக்கள் முன் செய்து காட்டிய சாகஸச் செயல்கள் அப்பப்பா, மக்களை ஆச்சரியத்தில் திக்குமுக்காடச் செய்துவிட்டன. "சீற்" இல்லாத சைக்கிளில் "ஹான்டிலில்" இருந்தபடி பின்பக்கமாகவே 96 மணித்தியாலமும சவாரி செய்தார். சைக்கிள் ஓடிக்கொண்டே பானம் பருகினார்; சிகரெட் புகைத்தார், நர்த்தனமாடினார்; ஆடை மாற்றினார் [illegible] ஆடினார்.

ஐந்து நாட்களும் அவர் பானவகைகளையே அருந்தினார். நான்கு இரவுகளும் நித்திரை இல்லை. நான்கு பதலும் வெயிலின் வெப்பத்தையும் பொருட்படுத்தவில்லை. மக்களும் இவற்றைப் பொருட்படுத்தாது வலம்புரிக்கு உற்சாகமளித்தனர். ஐந்தாவது நாள் அவர் 96 மணித்தியால சாதனையை வெற்றிகரமாக முடித்த பின்னரும் அவர் முகம் சோபை இழக்கவில்லை. அவர் களைத்ததாகவும் காணப்படவில்லை. மேயர் குறுக்கிடாவிடில் வலம்புரி 101 மணித்தியால சாதனையை வெற்றிகரமாக முடித்திருப்பார். நான்கு இரவுகளும் பலதரப்பட்ட கலாநிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவற்றைப் பார்த்தபடி வலம்புரி தமது களைப்பையும் கண்ணயாவையும் மறக்கலானார். இரவிரவாகக் காத்திருந்த மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வலம்புரிக்கு உற்சாகமூட்டினர்.

பார்க்க வந்திருந்த மக்கள் வலம்புரிக்கு பண உதவி செய்தனர். பல பரிசில்கள் வழங்கினர். நகரப் பிரமுகர்களும், பல்வேறு சங்கங்களும், வர்த்தகர்களும் பெரும் பொருள் கொடுத்தனர். ஞாயிறு காலை 9-30 மணியளவில் கோப்பாய் எம். பி. திரு கு. வன்னியசிங்கம் மைதானத்திற்கு வந்து வலம்புரிக்கு மலர்மாலை அணிவித்து காசோலை ஒன்றும் அன்பளிப்புச் செய்து வலம்புரியைப் பாராட்டினார்.

ஞாயிறு மாலை 5 மணிக்கு மீண்டும் மக்கள் முற்றவெளியில் கூடினர். மாலை 5 மணிக்கு வலம்புரி இன்னும் சில சாகஸச் செயல்களைக் காட்டுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. வலம்புரியைச் சுற்றி நின்ற மக்களால்தான் அவரின் அரிய செயல்களைப் பார்க்க முடிந்தது. 'செயின்' இல்லாத சைக்கிளில் படுத்திருந்துகொண்டே முன் சில்லை கைகளால் உருட்டியபடி சவாரி செய்தார். ஆறு சிறுவர்களை சைக்கிளிலும் தலை

(13ம் பக்கம் பார்க்க)

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே




● ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி

● மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

● இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.

● உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்முசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீத விமர்சனம்:

# எம்.எல்.வசந்தகுமாரி இன்னிசைக் கச்சேரி

திருமதி எம். எல் வசந்த குமாரியின் கச்சேரியை முதல் முறையாகநேரில் இருந்து கேட்பவர்களுக்கு வியப்பு ஏற்படும். "இந்த அம்மாளுக்கு இத்தனை மெல்லிய, இனிய குரலா!" என்று ஐயுறவு கொள்ள வேண்டி வரும்.

ராக ஆலாபனையின் போது, குறிப்பாகஉச்சஸ்தாயியில் நின்று நுணுக்கமான நாவசைவால் கர கர வென்ற நாதலயத் தொனியை குபு குபு என்று கொட்டும் போது யாரும் மெய் மறந்துதான் ஆக வேண்டும்.

## தனிச் சிறப்பு

இன்னுமொரு தனிச் சிறப்பு. இசை நயத்தை மிகுவிக்க பாடலிலுள்ள சில வார்த்தைகளின் இறுதி அட்சரங்களைக் கூட்டிக் குறைத்து நெளிவு சுழிவுகளோடு 'பிளெண்ட்' செய்து நாருக்காக வழங்குவது. இதைப் பார்க்கக் கூடாது; கேட்க வேண்டும். அப்போதுதான் இன்பம்.

மேலே சொன்ன சிறப்புகளெல்லாம் கடந்த மாதம்25-ந் தேதிகொழும்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் இலங்கை சங்கீத நாட்டிய சங்கத்தின் ஆதரவில் திருமதிவசந்தகுமாரி நிகழ்த்திய கச்சேரியிலும் இருந்தன. ஆயினும் கூடியிருந்த மக்கள் கூட்டம் அவருடைய சினிமாப் பாடல்களையே வெகுவாக ரஸித்தது. அவர் அறிமுகமானதே சினிமா பின்னணிப் பாடகிஎன்றுதானே, அதனால்தான் போலும் இந்த நிலைமை!

## வாத்திய இசைக் கலைஞர்கள்

அன்றைய கச்சேரியின் போது பாடகியை விட பக்க வாத்தியம் வாசித்தவர்கள் பொது மக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தனர். சுப்பிரமணியம் வயலின், கிருஷ்ணமூர்த்தி ராவ் மிருதங்கம். இருவரும் ஜமாய்த்துவிட்டார்கள். வசந்த குமாரிக்கு அடிக்கடி வாசித்துப் பழக்கப்பட்டவர்கள் இவர்கள்.

ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்னர் பம்பலப்பிட்டி புதியகதிரேசன்கோயிலில் திருமதி டி.வி. ரத்தினம், நிகழ்த்திய கச்சேரியின் போதும் இவர்கள்தான் வாசித்தார்கள் என்றாலும் அங்கு பிறிதோர் அனுபவம் கிடைத்தது. "ஏன் இந்தப் பாவிகள் அம்மாளின் கச்சேரியை அநியாயமாகக் கெடுக்கிறார்கள்?" என்று தான் அன்று கேட்கத்தோன்றியது.

## பழி

இந்தச் சம்பவம் நம்மவர்களுக்கு ஓர் உண்மையை உணர்த்தப் பயன்படுகிறது. தமிழகத்திலிருந்து வாத்தியக் கோஷ்டி இல்லாமல் தனியாக வரும் பாடகர் பாடகிகளுக்கு பக்க வாத்தியம் வாசிக்க கடைசி நேரத்தில் தற்காலிகமாக இங்குள்ள (வானொலி) கலைஞர்களை ஒழுங்கு செய்கிறார்கள். பாவம், அவர்கள் என்ன செய்வார்கள்? தமக்கு முற்றும் புதியவர்களுக்கு முடிந்த வரை வாசிக்கிறார்கள்; பெரும்பாலும் பழிக்குஆளாகிறார்கள்.

## ஈழத்து கலைஞர்களே உஷார்

திருமதி எம். எல். வசந்த குமாரிக்கு அருமையாக வாசித்தவர்களால் திருமதி. ரத்தினத்துக்கு சிறிதளவேனும் உதவ முடியாது போகுமானால், அந்த நாட்டிலிருந்து இங்கு வருபவர்களுக்கு எல்லாம் "வாசியுங்கள்" என்று நம்மவர்களை நம்மில சிலர் பணிப்பதால் லாபமுண்டா? நம்மவர்களை வேண்டுமென்றே சந்திக்கு இழுப்பதாக அல்லவோ அதைக் கொள்ள வேண்டும்! இப்படிச் செய்வது அறவே கூடாது. பக்க வாத்தியக்காரர் இனிமேலாவது உஷாராக இருக்க வேண்டும் என்பதற்காகவே இதை இங்கு சொல்லி வைக்க விரும்பினோம்.

## தமிழ் அன்பர்கள் புகார்

இலங்கை சங்கீத நாட்டிய சங்கம் அருமையான சேவை செய்துவருவதை எல்லோருமே பாராட்டுகிறார்கள். அதே வேளையில் அதன்மீது ஒரு புகாரும் கூறுகிறார்கள். தமிழ் இசை நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தும் போது பேச்சுக்களை ஆங்கிலத்தில் நிகழ்த்தி விடுகிறார்களே என்று வருத்தம் தெரிவிக்கிறார்கள் தமிழ் அன்பர்கள். திருமதி.எம்.எல். வசந்த குமாரியின் கச்சேரியின் போது திரு கணேசராஜா ஆங்கிலத்தில்தான் பேசினார். "இது நீதியா? தமிழ் நிகழ்ச்சிக்கு செல்லும் தமிழ் பேசும் மக்களையும் அவர் தம் மொழியையும் இப்படி இழிவு படுத்தலாமா?" இந்த மாதிரியாகக் கேட்கிறார்கள். இதை நாம் கண்டித்து எழுத வேண்டுமென்று பலரும் வேண்டிக் கொண்டுமிருக்கிறார்கள்.

## திலகவதி கனக சபை நாட்டியக் கச்சேரி

திருமதி திலகவதியும் அவரது மாணவிகளும் 5-ந் தேதி சனிக்கிழமையும் 6-ந் தேதி ஞாயிறுக்கிழமையும் கொழும்பு லயனல் வென்ட் ஞாபகார்த்த மண்டபத்தில் நடன விருந்து (நிருத்திய விருந்தம்) அளிக்க இருக்கிறார்கள்.

திருமதி திலகவதி கனகசபை முறையாக நாட்டியம் பயின்றவர் என்பதும் பிறநாடுகளுக்கும் சென்று நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்திப் புகழ் பெற்றவர் என்பதும் குறிப்பிடத் தக்கனவாகும்.


## கண்டனம் இல்லை-வாழ்த்து

கண்டனத்துக்கு இடமில்லை. சங்கச் செயலாளர் திரு. மகாலிங்கமும் பேச்சுக்களை ஆங்கிலத்தில் நிகழ்த்தி வந்த திரு. கணேசராஜாவும் நடந்ததுக்கு வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். இனிமேல் தமிழ் நிகழ்ச்சிகளின் போது பேச்சுகள் தமிழிலேயே வரும் என்றும் நமக்கு உறுதி அளித்திருக்கிறார்கள். சங்கத்தின் மீது படிந்திருந்த ஒரு கறை இப்போது அகற்றப்படுவதோடு தமிழன்பர்கள் கூறிய குறையும் மறைகிறது. இனி செந்தமிழ்ப் பணியும் கலைப் பணியும் ஒருங்கே தொடரட்டும்.

—கே. கே ஆர்.

பட விமர்சனம்:

# மனமுள்ள மறுதாரம்



நகைச்சுவைக்கு முக்கியத்துவம் அளித்து எடுக்கப்பட்டுள்ள இப்படத்தில், "ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதியா?" என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

இந்தக் கேள்வியை சரோஜா தேவி பாலாஜியிடம் கேட்கிறார். சிரித்துச் சிங்காரமாக இருக்கவேண்டிய சரோஜா இந்த நிலைமைக்கு ஆளாக்கப்பட்டது பரிதாபம் தான். கைபடாத ரோஜா கண்படாத கணவனைத்தான் தாம் அடைகிறோம் என்று எண்ணிக் கல்யாணத்தை முடித்துக் கொண்ட பின்னர் தான் தம்முடைய கணவர் ஒரு குழந்தையின் தந்தை- அதாவது தாம் அவருக்கு மறுதாரம் என்ற விவரம் அவருக்கு தெரிய வருகிறது. ஆனாலும் மனமுள்ள மறுதாரமாக அவர் வாழத் துணிந்து விடுகிறார்.

சோகக் கட்டங்கள் தவிர்ந்த ஏனைய எல்லாக் கட்டங்களிலும் பாலாஜியும் சரோஜாதேவியும் ரஞ்சகமாக நடிக்கிறார்கள்.

தங்கவேலுவும் முத்துலட்சுமியும் தோன்றி நன்றாகச் சிரிக்க வைக்கிறார்கள். செவிடனும் அதே சமயத்தில் கஞ்சனும் கூட தங்கவேலு. அவருககு வாய்த்த தர்மபத்தினி முத்துலட்சுமி. அருமையான கோடையிடிப் பேச்சும் அற்புதமான நடிப்பும் [illegible] கட்டங்களில் மித மிஞ்சிய சிரிப்பால் முகிழ்க்கும் கண்ணீரைத் துடைக்க கைக்குட்டை தேவைப்படலாம். முத்துக் கிருஷ்ணனும் மற்றவர்களும் வந்து போகிறார்கள். தங்கவேலுவின் 'லூஸ்' தங்கை ஓவராகி விடுகிறார்.

முரசொலி மாறன் கதை வசனம் எழுதியிருக்கிறார். டைரக்ஷன் சுப்பராவும் ராமனாத்தும். மூவரும் முனைந்திருந்தால் சில கட்டடங்களைக் குறைத்து படத்தின் விறுவிறுப்பை இன்னும் அதிகரித்திருக்கலாம்.

மருதகாசியின் பாடல்கள் ரஞ்சகமாக இருக்கின்றன. படத்தின் ஆரம்பமே பாட்டோடுதான் என்றால் இந்தப் படத்தில் நகைச்சுவையோடு பாடல்களுக்கும் முதலிடம் அளித்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? இந்த இரண்டுக்கு [illegible] வேண்டியதுதான் கொழும்பு கிங்ஸ்லியில் காட்டுகிறார்கள்.



இடுப்பிலே பதித்த குடம் பெண்ணைக் கிராமத்தகள் என்று சுட்டிக் காட்டுகிறது கழுத்து வெட்டும் கண் பார்வையும் பக்கத்தில் நிற்கும் இளைஞனின் ஆவலும் கட்டத்தைக் காதல் கட்டம் தான் என்பதைத் திட்டவட்டமாகத் தெரியப்படுத்துகின்றதல்லவா. "தோட்டக்காரன் மகள்" என்ற நாடகத்தில் ஐமுனா-சுந்தர்.

நாடக விமர்சனம்:

# தோட்டக்காரன் மகள்

"தோட்டக்காரன் மகள்" என்ற நாடகம் சிறீ சரவணபவா நாடக மன்றத்தாரின் இரண்டாவது தயாரிப்பு. முதலாவது தயாரிப்பான "உயிர் காத்த உத்தம"னை விட இது ஒரு படி மேலாக இருந்தது. அண்மையில் கரணவாய் வடக்கு மூர்த்த நாயனார் கோவிலுக்கருகாமையில் அரங்கேற்றினார்கள்.

## பெண்கள்

யாழ்ப்பாணத்தில் நாடகத்தில நடிக்கப் பெண்கள் அதிகமாக முன்வருவதில்லை என்று நாடக அபிமானிகள் குறைபட்டுக் கொண்டிருக்கையில் "தோட்டக்காரன் மகள்" என்ற நாடகத்திலே ஐமுனா, சுப்புலக்ஷ்மி, யோகாம்பாள் முதலானோர் தோன்றித் தொழில் முறை நடிகைகள் கூடப் பிரமிக்கத் தக்கவகையில் சிறப்பாக நடித்தார்கள்.

## ஆண்கள்

பெண்களுக்கு தாங்கள் சளைத்தவர்கள் அல்லர் என்பதை ஆண்களும் நிரூபிக்கவே செய்தார்கள். கதாநாயகன் சுந்தர், அவர் தந்தையாகப் பாத்திரமேற்ற சண்முகம், கணேஷ், இராசலிங்கம், கோபால், தியாகராஜா ஆகியோர் தத்தம் பாகங்களைச் செவ்வனே செய்து முடித்தனர் கதாநாயகனுக்கு இந்த நாடகத்தில் வேலை அதிகம். அதைப்பயன்படுத்தி தாம் எந்தப் பாகத்தையும் சிறப்பாகச் செய்யக் கூடியவர் என்பதை அவர் நிலைநாட்டினார்.

## 'புதுமையும் சவுக்கடியும்'

எம். ஓ. கபூரின் மூலக் கதையை நாடகத்துக்குரிய கதையாக்கி, வசனம் அமைத்து டைரக்ட் செய்து நாடகத்தை உருவாக்கியவர் திரு மணி ஆவா. தவறு செய்துவிட்டு பின்னர் அதற்காக வருந்தித் திருந்திய ஒருவனுக்கு அவனுடைய நண்பன் ஒருவனால் சிலை எழுப்பப்படுவது கதையில் புதுமையாக வருகிறது. மற்றும் தமக்குத் தாமே தொழிலாளர் தலைவர் பட்டம் சூட்டிக்கொண்டு "சமதர்மம், புரட்சி" பேசுவோருக்கெல்லாம் சவுக்கடி கொடுக்கப்படுகிறது. வசனங்கள் நன்றாக இருந்தன.

## நடனம்

எல்லாவற்றிற்கும் மேலாக சுப்புலக்ஷ்மியின் நடனத்தைக் குறிப்பிட வேண்டும். அவருடைய பாம்பு நடனம் பலேஜோர். மொத்தத்தில் நாடகம் பார்க்கச் சென்றவர்களுக்கு ஏமாற்றம் இல்லை.

—மணியம்

# கடவுளுக்கு . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

திரிசங்குவும் நல்லதென்று ஒரு "ஹெலிக்கொப்டரில் ஏறி ஒரு துறவியின் பங்களாவுக்குச் சென்று இதற்கு மார்க்கம் என்னவென்று வினவ, அந்தத் துறவியானவர், "(அ) நாகரிகத்தின் (அலங்)கோலங்களைக் காண வேண்டுமாயின் ஹொலிவுட்டுக்குப் போ என்பார்கள். அப்படியல்லாமல் சமீபத்திலேயே (அ) நாகரிகத்தின் (அலங்)கோலங்களுக்கு தலை வணங்கும் ஆத்மாக்களை எங்கே காணலாம்?" என்று கேட்டார். அதற்கு விடை அளித்தால் திரிசங்குவின் கேள்விக்கு தாம் பதிலளிப்பதாகவும் வாக்களித்தார். திரிசங்குவும் தமது தபோ வலிமையால் கண்டுபிடித்து "கறுவாக்காடு அல்லது திருவிழாக் காலங்களில்............ கோயிலில்" என்று சொல்லி அப்படியே எல்லா வினாக்களுக்கும் விடைகளை அறிந்து அந்த எம். பி. யின் திருவருளால் ஆகாய விமானத்தில் ஏறிச் செல்ல, வழியில் விமானம் நொருங்கி விழ, மோட்ச உலகை இலகுவாக அடைந்தனர் என்க.

—நாரதர்

2—9—59

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உத்தியோகத்தர் போதாமை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரியிலுள்ள பல்வேறு பயிற்சிகளுக்கு மாணவரைச் சேர்க்கும்போது சிங்கள அறிவு ஒரு முக்கிய அம்சமாக கொள்ளப்பட வேண்டும்; ஆயினும் அதுவே முக்கிய அம்சமாக இருக்க வேண்டியதில்லை. அரசகரும மொழி அறிவு நுண் தொழில் உத்தியோகத்தர் அநேகர் தேவைப்படுவதுடன் மேலும் பல வருடங்களுக்கு இத்தகையோர் தேவைப்படுவர் என்பதே இதற்குக் காரணமாகும்"

உங்கள் அதிகாரச் சட்டத்தின்படி தமிழ் மூலம் கல்வி கற்ற ஒருவர், அரசாங்க சேவையிற் சேர வேண்டுமாயின் அவர் சேர்ந்தபின் ஒரு குறிப்பிட்ட காலத்துள் சிங்கள அறிவை ஈட்டிக் கொள்ள வேண்டும் எனும் நிபந்தனைக்கமைய, அச் சேவையிற் சேர்க்கப்படும் பொருட்டுத் தமிழ் மூலம் சோதிக்கப்படும் உரிமை அவருக்கு உண்டு. 1958-ம் ஆண்டின் 28-ம் இலக்க அதிகாரச் சட்டத்தில் இது விளக்கமாகவும் சுருக்கமாகவும் இருக்கிறது. சிங்கள அறிவைப் பெறுவதற்கு இச் சட்டம மூன்று வருட காலத்தை, சிலவேளை இன்னும் கூடிய காலத்தை, கொடுக்கிறது. அரசாங்க சேவையிற் சேர்வதற்கு சிங்கள வார்த்தை ஒன்றுவது தெரிந்திருக்க வேண்டுவதில்லை இப்படியிருந்தபோதிலும், கல்வி மந்திரியார் என்ன சொல்லியிருக்கிறார்? "சிங்களம் அறிவு ஒரு முக்கிய அம்சமாகும், ஆயினும் அதுவே முக்கிய அம்சமாக இருக்க வேண்டியதில்லை" என்கிறார்.

நுண் தொழிற் கல்லூரி சம்பந்தமான மான்யம் பற்றி விவாதிக்கும் போது மேலும் பல விடயங்களைக் கூற விருக்கிறேன். அரசாங்கக் கொள்கை, தமிழ் மொழி பற்றியும், அரசகரும மொழித் திணைக்களம் பற்றியும் அரசாங்கத்தின் மனப்பான்மை ஆகியவை சம்பந்தப்பட்டமையினாலேயே இப்பொழுது அக் கல்லூரி பற்றிப் பேச வேண்டி வந்தது.

நுண் தொழிற் கல்லூரியிற் சேருவதற்குச் சிங்கள அறிவு ஒரு முக்கிய அம்சமாக்கப்பட்டதன் விளைவாக ஆயிரக் கணக்கான தமிழ் மாணவருக்கு நுண் தொழிற் கல்வி மறுக்கப்படுகிறது என்பதை அறிவீர்களா? 1958-ம் ஆண்டின் 28-ம் இலக்க அதிகாரச் சட்டத்தைத் துச்சமாக கருதுவது மாத்திரமின்றி அதற்கு எதிராகவே நடக்கிறார் தன் மந்திரி ஒருவர் என்பதைப் பிரதம மந்திரி உணர்கிறாரா? இச் சபையினால் நிறைவேற்றப்பட்ட அதிகாரச் சட்டங்களையாயினும் இம் மந்திரி மதித்து நடக்கும்படி பிரதம மந்திரி பார்த்துக் கொள்வாரா?

"சிறுபான்மையினருடன் நாம் நீதியாகவும் நியாயமாகவும் நடக்க விரும்புகிறோம்" என்று உரக்கக் கூறுவதிற் பிரயோசனமில்லை இதுதானா சிறுபான்மையினர் மேல் காட்டப்படும் நீதியும் நியாயமும்? இல்லை.

யாழ்ப்பாணத்தில் நுண் தொழிற் கல்லூரி ஒன்றைத் தாபிப்பதற்கு வேண்டிய நிதியை ஏற்பாடு செய்வதற்குத் தாம் தயாராக விருப்பதாக நிதி மந்திரியார் பெருந்தன்மையோடு கூறினார். ஆனால் இன்று காலையிற்கூட கல்வி மந்திரி எனக்கு என்ன சொன்னார் தெரியுமா? "நிதி மந்திரி உங்களுக்கு அப்படிச் சொல்லலாம். ஆனால் உண்மை அப்படியில்லை" என்றார். திறைசேரி தேவையான நிதியைத் தர மறுக்கிறதே என்பதுதான் கல்வி மந்திரி கூறுவது. இவ் விடயம் பற்றிக் கல்வி மந்திரியாரும் நிதி மந்திரியாரும் கலந்து பேச வேண்டுமென்பதற்காகவே இச் சபையில் இதைக் கூறுகிறேன்.

(தொடரும்)

# சுவிகாரம்—விளைவுகள்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை விட்ட ஆதனம் அசைவற்ற ஆதனமாயிருந்து அவ்வாதனம் அப் பிள்ளைக்கு சுவிகாரத் தன்மையால் கிடைத்ததாயிருந்தாலும் சரி அல்லது அவ்வாதனம் சுவிகாரப் பெற்றோரிடமிருந்தாவது அல்லது அவர்களின் முறையான பிள்ளைகளிடமிருந்தாவது அல்லது அப் பெற்றோரின் முன் சந்ததியார் அல்லது பிற் சந்ததியாரிடமிருந்தாவது நன்கொடையாகப் பெற்ற ஆதனமாயின் அவ்வசைவற்ற ஆதனத்துக்கு அச் சுவிகாரப் பெற்றோர் அல்லது அவர்களிறந்த காலத்தில் அவர்களின் வாரிசுகள் உரித்துக் கொண்டாடலாம்.

## சட்டம் யாருக்கு

அச் சமயத்தில் அச் சுவிகாரப் பிள்ளை முறையான பிள்ளையென்னும் இடத்தில் வைத்து உரிமை கோரப்படும். வேறெந்தச் சட்டமும் இதற்கு முரணாயிருந்தபோதிலும் இக் கொள்கையே சட்ட ரீதியானது. அசைவுள்ள ஆதனங்களிலும் மற்றைய விதமான அசைவற்ற ஆதனங்களிலும் சுவிகாரப் பிள்ளையின் முன்னைய வாரிசுகளே உரிமை கொள்வர் என்பது கவனிக்க வேண்டியது. ஆகையால் இச் சட்டம் சுவிகாரப் பிள்ளையின் நன்மைக்காக ஏற்படுத்தப் பட்டதேயொழிய அச் சுவிகாரம் செய்பவரின் நன்மைக்காகவல்ல என்பதையறிய வேண்டும்.

## சுவிகாரப் பிள்ளையின் இரு நலன்கள்

சுவிகாரப் பிள்ளை யார் யாருக்கு சுவிகாரத்துக்குமுன் வாரிசாயிருந்ததோ அவர்களுக்குச் சுவிகாரத்துக்குப் பின்னும் வாரிசாயிருக்கிறது என்பதும் இச் சட்டத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் சுவிகாரத்தால் தம் இனத்தவர்களின் மற்றைய தொடர்பு நீக்கப்பட்ட போதிலும் ஆதன உரிமைத் தொடர்பு நீங்கவில்லை யென்பது தெளிவாகிறது. சுவிகாரப் பிள்ளை பிறந்தகத்திலும் புக்கத்திலும் (புகு+அகம்) உரிமை கொண்டாடக்கூடிய இரு நலன்களையும் பெறுகின்றது என்பதே இதன் விளக்கம்.

# சைக்கிள் வீரர்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலும் வைத்துக்கொண்டு சவாரி செய்தார். இன்னும் எத்தனை எத்தனையோ வித்தைகளைப் புரிந்து ஒரு விந்தை மனிதராக விளங்கினார் வலம்புரி. மாலை நிகழ்ச்சிக்கு உதவி அரசாங்க அதிபர் திரு கே. ரி. மூர்த்தி தலைமைதாங்கினார். மககளிடமிருந்து சேர்த்த ரூ 3568-76 சதத்தை கொண்ட பண முடிப்பை உதவி அரசாங்க அதிபர் வலம்புரிக்கு வழங்கினார்.

திரு வலம்புரியை ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். மேயர் திரு அல்பிரெட் துரையப்பா தலைமையில் வலம்புரிக்கு பாராட்டு தெரிவிக்குமுகமாக யாழ்-நகர மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு அமிர்தலிங்கமும் இதில் கலந்து கொண்டார்.

—புத்தொளி

குறிப்பு:

திரு எம் வலம்புரியுடன் இலங்கைச் சைக்கிள் வீரர் திரு ஏ.செல்வராஜா நவம்பர் மாதம் 22-ம் திகதி மட்டக்களப்பு மைதானத்தில் போட்டியிடுவார். திரு ஏ. செல்வராஜா எடுத்துக் கொண்ட முயற்சி 120 மணித்தியாலங்கள் சைக்கிளை விட்டு இறங்காமல் சைக்கிளில் இருந்தபடி பல வித்தைகளும், சைக்கிளில் இருந்த வண்ணம் ஸ்நானம் செய்தல், உடை மாற்றல், சைக்கிள் சிற்றில் தலைகீழாக நிற்பது போன்ற அதிசய விநோதங்களை செய்து காட்டுவதாகும்.

மட்டக்களப்பு நகர சபைத் தலைவர் திரு ஏ. எஸ். டி. கனகசபை போட்டியை ஆரம்பித்து வைப்பார். இப் போட்டிக்காக மட்டக்களப்பு நகரசபை, மட்டக்களப்பு விளையாட்டுச் சங்கம், சுத்தானந்த விளையாட்டுச் சங்கம், மற்றும் கிராமச் சங்கங்களும் போதிய உதவி செய்ய முன்வந்துள்ளன.


2-வது வாரமாக
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!



சென்ட்ரல் (மருதானை)
தினசரி ப. ப. 2, 6, 9-30
ஜோதி (திருகோணமலை)
6-00, இரவு 9-30
லிபர்ட்டி (பதுளை)
தினசரி மாலை 6-30, 9-30
ராணி (யாழ்ப்பாணம்) (3-வது வாரம்)
இன்று மாலை 6, இரவு 9-30
ராஜசுலோசனா, எம். என். ராஜம், டி. எஸ். பாலையா, மனோஹர், வி. கே. ராமசாமி, இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், எஸ். ஆர். ஜானகி நடிக்கும்
புதுமைப் பெண் (தமிழ்)
வஞ்சகரும் சூழ்ச்சியும் மலிந்த சமுதாயத்திலே வாழ வழியறியாது தவிக்கும் வெள்ளை மனம் படைத்த குபேரன் ஒருவனின் வாழ்வைப் பின்னிப் படர்ந்து வரும் சிக்கல்கள் பல மலிந்த விறு விறுப்பான படம்.

முரசு கொட்டும் 3-வது மகத்தான வாரம்!
இதுவரை வெளிவராத மாபெரும் திரைப்படம்!
இப்பொழுது சிலோன் தியேட்டர்ஸ் சர்க்கியூட்டில் திரையிடப்படுகிறது!
பத்தாயிரம் மக்கள் கண்டு களித்த படம்!
வீரபாண்டிய கட்டபொம்மன்
(முழு நீள டெக்னிக் கலர் படம்)
எல்பின்ஸ்டன் ரெக்ஸி
நியூ இம்பீரியல் (மட்டக்களப்பு)
வின்ஸர் (யாழ்ப்பாணம்) ரீகல் (யாழ்ப்பாணம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## செஞ்சிலுவைக் கழகம்

உலகத்தில் பல கழகங்கள் தோன்றி மறைகின்றன. இன்னும் சில இளைஞர்களின் செல்வாக்கும் அபிமானமும் பெற்று நீடூழி காலம் நிலைத்து இருக்கின்றது. அவைகளுள் சாரணர் இயக்கமும், செஞ்சிலுவை கழகமும் ஒன்ருகும். மத விஷயங்களை குறித்தும், பொது நல சேவையைக் குறித்தும், விளையாட்டுக் கழகங்களைக் குறித்தும் நாட்டு மக்களுக்கு நற்பணி புரிந்து வருவதோடல்லாமல் தேசத்தையும் முன்னேறச் செய்கிறது.

நாம் எல்லோரும் திடகாத்திரமாகவும், உறுதியாகவும், நோயற்று வாழ் நாள் முழுவதும் இன்பமாக கழிக்க வேண்டியிருப்பதிலுைம், மற்றவர்களுக்கு காயமோ அன்றி விபத்தோ நேர்ந்தால் உடனடியாக சிகிச்சை செய்விப்பது போன்ற நற்தொண்டுகளை இந்த செஞ்சிலுவைச் சங்கம் தொண்டு புரிய முன்னணியில் நிற்கின்றது. திடகாத்திரமாக இருக்க வேண்டும் என்பதற்காக இளம் வாலிபர்களை முளையிலே பழக்கிவிடுகிருர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தார். இதனுல் அவர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

இக் கழகத்தை முதன் முதல் ஆரம்பித்து வைத்தவர் கனம் வெண்டிரி யூணன்ட் என்னும் வாலிபர். இவர் சுவிட்சர்லாந்துக்காரர். இவ் இளைஞர் இக் கழகத்தை 1864-ஆம் ஆண்டு அரும்பாடுபட்டு ஆரம்பித்து வைத்தார். இக் கழகத்தின் முக்கிய நோக்கத்தையும், தொண்டையும், பிற தேச மக்கள் விரும்பியதால் சுமார் பதினுங்கு (14) தேசங்கள் இக் கழகத்துடன் உடன்படிக்கை செய்துகொண்டன. இக்கழகத்தின் தீர்மானங்கள் ஹேக்கு நகரத்தில் 1865-ம் வருடத்தில் அங்கீகரிக்கப்பட்டன.

செஞ்சிலுவைக் கழகத்திலிருந்து உபகழகங்கள் உண்டாயின. துருக்கியர், எகிப்தியர்களால் செந் நிலவுக் கழகமும், பெர்ஷியர்களால் செம் பருத்திக் கழகமும், கனடா தேசத்துக் கியூபெக்கு நகரத்து வாசிகளால் செஞ்சிலுவைக் கழகமுமாக மூன்று கழகங்கள் தோன்றின.

காலம், செல்லச், செல்ல இக் கழகத்தின் பெயரும், கீர்த்தியும் உலகெங்கும் பரவியது. இதன் பயனுக ஐரோப்பா முதலிய தேசங்களில் இதன் சார்பில் மேலதிகமான செஞ்சிலுவைச் சங்கங்கள் தோன்றி நாட்டு மக்களுக்கு அரிய தொண்டு புரிந்து வருகின்றன. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது போல் செஞ்சிலுவைச் சங்கத்தாரும வறிய ஏழைமக்களுக்கு பணி செய்து வருகின்ருர்கள்.

—கா. நடனசபாபதி

## கண் புதைக்கும் களிறுகள்

பாண்டிய மன்னவன் ஒருவன் பெரும் போரொன்றில் ஈடுபட்டான். வாட்கள் மோதின! அவல ஓசை விண்ணை எட்டியது. குருதி கரைபுரண்டு ஓடியது, பாண்டியன் தன் எதிரிகளைக் கொன்று குவித்து வெற்றி மாலை சூடி தன் நாடு திரும்பும் வழியில், நிகழ்ந்த ஓர் மறக்க முடியாத இந்தக் காட்சியை வெகு அழகாகக் காட்டியுள்ளார் முத்தொள்ளாயிரம் பாடிய புலவர்.

போர்க்களம் அமைதியில் ஆழ்ந்திருந்தது. சிறிது தூரத்தில் கொளுந்து விட்டெரியும் பெரு நெருப்பையும், அதை சுற்றி நிற்கும் இள மங்கையர் கூட்டத்தையும் மன்னவன் காண்கின்ருன். அயல் நின்ருெருவனை வினவியதில், அந்தப் பெண்கள் இறந்த எதிரிகள் மனைவியரென்றும், தீக்குளிக்கத் தயாராக இருக்கிருர்கள் என்பதையும் அறிகிருன் துக்கம் தொண்டையை அடைக்கிறது. மேலங்கியின் முந்தானையால் தன் கண்ணைப் பொத்திக்கொண்டு அப்பால்சென்றவன், தன் யானைகளும் தங்கள் தும்பிக்கைகளால் கண்களைப் பொத்தி நிற்பதைக் கண்டு அதிசய அவாவுறுகிருன். எதிரிகளின் ஆண் யானைகள் வருத்தம் பொறுக்காது கண்களை மூடி நிற்கின்றன என்பதையும் அறிகிருன்.

மனிதனுக்கு இருக்கும் சோக உணர்ச்சி, பிறர் துக்கத்தில் பங்கு கொள்ளும் பாங்கு, எதிரிகளோ உறவினர்களோ பரிதபிக்கும் நெஞ்சம் மிருகமாகிய யானைகளுக்கும் உண்டு என்பதை விளக்குகிருர் புலவர். இனிப் பாடலைச் சுவைப்போமாக?

ஏனைய பெண்டிர் எறிமூழ்கக் கண்டு, தன்
தானையால் கண் புதைத்தான்
தார் வழுதி யானையெலாம்
புல்லார் பிடி புலம்பத் தாம்
கண் புதைத்தலே
பல் வாயால் பட்ட களத்து!

—சண்முகம் சுந்தரலிங்கம்
யாழ்ப்பாணம்

## மாமணி விளையும் மணிப்புரி!

—மு. பொன்னம்பலம்—

மன்றுலா வரைகள் சூழ,
மாகளு கங்கை நதியாள்
கன்று போல் துள்ளியுங், கரு
நாகம் போல் நெளிந்தும் ஓட,

சிவ ஒளி பாதமலையின்
திரு முடி காட்சி நல்க,
கவின் மலர் சிந்து இன்ற
கந்தம் வந்தின்பஞ் சேர்க்க,

கார் முகில் வானின் றிழிந்த
காட்சிபோல் வேழக் கூட்டம்
போர்நடை புரிய, மணிகள்
புலம்பிட, உழைப்பின் உயர்வால்

தேன் சுவைத் தேயிலையும்
திரு நிறை றபர் இவையும்
'வான'களில் வந்திறங்க,
வியாபாரம் செழித்து ஓங்க,

சிங்களர், தமிழர், முஸ்லிம்,
பறங்கியர் என்போர் எல்லாம்
சங்கம மாக, அன்புச்
சகதியில் நீந்துகின்ற,

மணிப்புரி எங்கள் ஊரே!
மாமணி ஒன்பதையும்
அளிப்பதால் எங்கள் ஊரை
அகிலங் கொண்டாடுமம்மா!

## நல்லொழுக்கம்

உலகமுவப்ப ஒழுகுதல் ஒழுக்கமெனப்படும். இவ்வொழுக்கமானது விருப்பந் தருதலால் உயிரினும்ஓம்பப்படும். எனவே மனுஷீகத்துக்கு ஒழுக்கமவசியம்.

இவ்வொழுக்கம் நல்லொழுக்கம், தீயொழுக்கம் என இருவகைப் படும். நல்லொழுக்கத்தை மனிதராய்ப் பிறந்த யாவரும் அனுசரிக்க வேண்டும். ஆனதினுல் நாமெல்லாரும் நல்லொழுக்கத்தை அனுட்டிக்க வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் நல்லொழுக்கத்தைக் கற்பது நமது தாய் தந்தையினுலேயே. ஆனதினுல் தாய் தந்தையர்கள் நல்லொழுக்கமுள்ளவர்களாயிருக்க வேண்டும். அன்றேல் தாய் தந்தையைப் போலவே பிள்ளையும் கெட்டுப் போய்விடும். எனவே பெற்ருேர் நல்லொழுக்க முடையவராய், நற்குண முடையவராய் இருத்தலவசியம். நல்லொழுக்கமுடையோரைப் பூமியில் பிறந்தவரெவரும் புகழுவார்கள். நாம் நல்லொழுக்கமுடையோராய் இருக்க வேண்டுமாகுல் பெரியோருக்கு அடிபணிதல் என்னும் ஆன்ருேர் மொழியைச் சிரமேற்கொண்டொழுகுதல் வேண்டும்.

தீயொழுக்கத்தை அனுட்டிக்கிறவர்களோ வெனில் கெட்டவர்களோடு கூடி அவர்கள் சொல்லும் கெட்ட புத்திமதிகளைக் கேட்டு தீயவொழுக்கமுள்ளவர்களாகிருர்கள் ஆனதினுல் அவர்கள் அகங்காரம் கொண்டு பெரியோரெவரையும் மதியாது, ஒருவருக்கும் பணியாது தாமிட்டதே சட்டமென நடந்து கொள்ளுகிருர்கள். இதனுல் தீயவொழுக்கமுள்ளவர்கள் உலகத்தாராலும் படிக்கும் மாணவர்களாலும், ஆசிரியராலும் வெறுக்கப்பட்டு கடவுளின் நீதிக் கோபாக்கினைக்கு உள்ளாகிருர்கள். இன்னும் தீயவொழுக்கமுள்ளவர்கள் மனதில் வஞ்சனை, கபடம் வைத்துக்கொண்டு மனிதரோடு புளங்கிக் கொள்ளுகிருர்கள். அப்படி மனதில் கபடம் வஞ்சனை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இவ்வுலகத்திலே சம்பாவனை கிடைக்கின்றது. எனவே நாம் ஒழுக்கங்களில் மேலானதும், சிறந்ததும் பெருமை படைத்தது மாகிய நல்லொழுக்கத்தைக் கடைப் பிடித்து அமலனின் ஆசிபெற்று வாழ்வோமாக.

—அன்றன் புரொஸ்பர்
இராசநாயகம்
கொத்தாந்தீவு

## தியாகத்துக்கு மதிப்பு



பிரிட்டிஷ் பொது நலக் குடியரசு விமானப்படையைச் சேர்ந்தவர்கள் ஆண்களும் பெண்களுமாக மொத்தம் 798 பேர் இரண்டாவது உலகப் போரில் கனடா, அமெரிக்கா மற்றும் அயல் நாடுகளில் [illegible] போது உயிர் நீத்தார்கள். சமீபத்தில் கனடா சென்ற அரசி எலிசபெத் இந்த தியாகிகளின் [illegible] படத்தில் காணும் பூகோளத்தைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 6.

பெயர்.................................................................

பாடசாலை.............................................................

விலாசம்...............................................................

.......................................................

....................................... ........................................
பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

## வளர்மதி புதிய மருமக்கள்

2543 எஸ். நாகராசா, வந்தாறுமூலை.
2544 சி. பொ. சிறீதரன், கல்லடி.
2545 செ. பாக்கியநாதன், முல்லைத் தீவு.
2546 சு. மணிசேகரன், வேலணை.
2547 ஆர். வி. சிவ சண்முகம், அவிசாவெல்ல.
2548 பொ. [illegible]லலிதா, கல்லடி.
2549 சி. செல்வாராணி, கரவெட்டி.
2550 க. சி. கந்தசாமி, கல்லடி உப்போடை.
2551 இ. பரராசசேகரம், கொக்குவில்.
2552 ஐ. செல்வத்துரை, கொட்டியாகொலை.
2553 செல்வி இரத்தினம் இராஜாம்பாள், பரந்தன்.
2554 மா. பரமேஸ்வரி, கொழும்பு-12.
2555 எம். எச். எம். ஸாதுகீன், மாத்தறை.
2556 மாணிக்கம் யோகராசா, இடைக்காடு.
2557 த. சீனிவாசன், தஞ்சை மாவட்டம், தமிழ் நாடு.
2558 இ. பரராசசிங்கம் சண்முகநாதன், சித்தங்கேணி.
2559 எம். ஏ. எஸ். சண்முகம், கெற்றகெத்தை.
2560 கு. தங்கவடிவேல், கோப்பாய்.
2561 பொ. சிவானந்தன், உரும்பிராய் தெற்கு.
2562 செல்வி. நிர்மலா முருகேசு, சண்டுக்குளி.
2563 இ. நடராஜ சர்மா, சித்தன்கேணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## கட்டைபறிச்சான் கிராமக் கமிட்டிக் கூட்டம்

சேனையூரிலுள்ள மெதடிஸ்த மிசன் பாடசாலையை அரசாங்கம் ஏற்று அங்கு படிக்கும் பெரும்பான்மையான இந்து மாணவர்களுக்கு இந்து சமயபோதனை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று அணிமையில் கட்டைபறிச்சான் கிராமக் கமிட்டிக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

கிராமக் கமிட்டித் தலைவர் திரு எஸ். குணநாயகம் தீர்மானத்தைப் பிரேரித்தார்.

மாணவர்களுக்கு அவரவர்களுடைய சொந்த மதப் போதனை அளிக்கப்பட வேண்டுமென்றும் சேனையூரிலுள்ள மெதடிஸ்த மிசன் பாடசாலை நிர்வாகிகள் இந்தக் கொள்கையை உதாசீனம் செய்து வருகின்றனரென்றும் திரு குணநாயகம் குற்றம் சாட்டினார்.

—

## சைவப் பிரகாச வித்தியாசாலை பரிசளிப்பு விழா

இணுவில் சைவப் பிரகாச வித்தியாசாலை வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 22-8-59-ல் விளையாட்டுப் போட்டியுடன் ஆரம்பமானது.

விளையாட்டுப் போட்டியை வட்டார வித்தியாதரிசி திரு இ. திருநாவுக்கரசு ஆரம்பித்து வைத்தார். விளையாட்டுப் போட்டி முடிந்ததும் வட மாகாண வித்தியாதிகாரி திரு சி. உ. சோமசேகரம் பரிசளிப்பு விழாவுக்கு தலைமைவகித்தார். தலைவர் தமது தலைமையுரையில் விளையாட்டுப் போட்டிகளின் அவசியத்தை எடுத்துரைத்தார்-சில காலங்களுக்கு முன்பு ஆங்கிலப் பாடசாலைகள் தான் விளையாட்டுப்போட்டிகளைநடாத்தின. ஆனால் இப்போது தமிழ்ப் பாடசாலைகளும் போட்டிகளை ஆரம்பித்து இருக்கின்றன என்பதைக் காண தாம் சந்தோஷமடைவதாயும், மாணவர்களை உற்சாகப்படுத்துவதற்கு புத்தகக் கல்வி மாத்திரம் போதாது விளையாட்டுக் கல்வியும் அவசியம் என்றும், விளையாட்டில் மாத்திரம் மாணவர் ஊக்கம் காட்டுவதுபோல் கமத் தொழிலிலும் ஈடுபட வேண்டும் என்றும் கூறினார்.

தலைவர் அவர்களுக்கு பாடசாலை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் வந்தனோபசார வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. இந்தத் தவணையில் பாடசாலையில் நடைபெற்ற கட்டுரை, பேச்சு, சங்கீதம், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வட்டார வித்தியாதரிசியினால் தராதரப்பத்திரங்களும், வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

—

## திருவள்ளுவர் மாணவர் தேர்ச்சிச் சங்கம்

"திருக்குறள் தந்த திருவள்ளுவப் பெரியாரின் பெயரால் தொடங்கப்பட்டுள்ள இப் பாடசாலை மாணவர் தேர்ச்சி சங்க விழாவில்பங்கு பெறுவதில் பெருமையுறுகின்றேன். திருவள்ளுவரைக் கடவுள் நிலையிலும், அவரது நூலைப் படிப்பவர்களைப் பக்தர்கள் நிலையிலும் சிலர் வைத்துப் பார்க்கின்றபடியால்தான் திருக்குறள் பொது மக்கள் முன் பரவ முடியாதுள்ளது" இவ்வாறு 17-8-59-ல் மருதானை திருவள்ளுவர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி பாடசாலை மாணவர் தேர்ச்சிச் சங்க கூட்டத்தில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்கம் கொழும்புகிளைச் செயலாளர் திரு க. ந. இராசரத்தினம் குறிப்பிட்டார்.

தொடர்ந்து திரு இராசரத்தினம் பேசுகையில், "சைவமும் தமிழும் பிரிக்க முடியாதவை என்றும், இரண்டும் உயிரும் உடலும் போன்றவை என்றும் சில அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் உண்மையில், சைவம் என்பது ஒரு நெறி; ஒரு சாரார் கடைப்பிடிப்பது. தமிழோ பல்வேறு பட்ட நெறியினராலும் பேசப்படும் ஒரு மொழி இப்படியான தன்மையில் எப்படிச் சைவ நெறியும், தமிழ் மொழியும் பிரிக்க முடியாதவையாகவோ, உயிரும் உடலுமாகவோ இருக்க முடியும்" என்று கேட்டார்.

அடுத்து திரு. தெ. க. பா விவேகானந்தா "குறள் காட்டும் வழியில்..." என்ற தலைப்பில் பேசுகையில், பழமையென்னும், பழம் பெருமைகளைப் பேசிக் காலங் கழிப்பதில் பிரயோசனமில்லையென்றும், குறள் கூறுகிறபடி பழமையிலுள்ளவற்றைக் கேட்டு கேட்டவற்றையும், கற்றவற்றையும் கொண்டு கற்றபடி ஒழுகி வாழ்தலே சிறப்பு எனக்குறிப்பிட்டார். மேலும் பேசுகையில், சிறிய செயல்களில் ஈடுபட்டு வெற்றியீட்டுவதிலும்பார்க்கப் பெரிய செயல்களில் ஈடுபட்டுத் தோல்வியுறுதல் சாலச் சிறப்புடையது; பாராட்டுக்குரியது எனக் குறள் கூறுகின்றதெனவும் கூறி குறள் காட்டும் வழியில் மாணவர்கள் ஒழுகி வாழ வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். விழாவில் திரு எஸ். டி. கே. தென்னரசு "வள்ளுவர் வகுத்த நெறி" என்ற தலைப்பில் பேசினார்.

விழாவின் முடிவில் மாணவர்கள் 'சாக்கிரட்டீஸ்' என்ற நாடகத்தை நடித்தனர். நாடகத்தில் 'சாக்கிரட்டீஸா'க நடித்த செல்வன் இராமகிருஷ்ணனுக்கு திரு இராசரத்தினம் பரிசு வழங்கினார்.

பாடசாலை அதிபர் திரு எஸ். சங்கர் விழா ஆரம்பத்தில் வரவேற்புரை நிகழ்த்தினார். விழா முடிவில் செல்வன் சந்தனம் நன்றியுரை கூற விழா இனிது முடிவுற்றது.

—

## இலவச கலவன் இராப் பாடசாலை

ஐக்கிய சகாய சேவா இலவச கலவன் இராப்பாடசாலை மாணவர் கலை நிகழ்ச்சிக்கு ஓயாது உழைத்தவர்களான டைரக்டர் பி. எஸ். கிருஷ்ணகுமார், இசையமைப்பாளர் திரு சவாயிர், ஒப்பனையாளர் கே. குமாரவேலு, காட்சி அமைப்பாளர் திரு டி. சவரியாப்பிச்சை ஆகியோருக்கு நன்றி தெரிவிக்குமுகமாக, கடந்த 23-8-59-ல் தலைமை ஆசிரியர் திரு அ. ஆ. சுமனதாஸா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் துணை ஆசிரியரும் காரியதரிசியுமான ஜே. அகுஸ்தீன்பர்னந்து, பொக்கிஷதார் எஸ். தியாகராசா, மாணவர்களான, சு. வடுகநாதன், சு. மாணிக்கம், ச. கந்தநாதன், வ. சூசை அந்தோனி ஆகியோர் பேசினார்கள். இறுதியில் டைரக்டர் பி. எஸ். கிருஷ்ணகுமாரைக் கொண்டே மாணவர் கலை மன்றத்தைத் திறந்து வைப்பதென முடிவு செய்யப்பட்டது.

—

## தமிழ் மொழி இயக்கம்

"தமிழ் பேசும் மக்கள் அரசியல் சுதந்திரம் பெறவேண்டுமானால் ஒரே இலக்குடன் ஒன்று சேர்ந்து போராட வேண்டியது மிக அவசியமாகும்" இவ்வாறு சென்ற 23-8-59-ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ் மொழி இயக்க விசேட கூட்டமொன்றிற்குத் தலைமைவகித்த திரு க. தம்பிராசா பேசுகையில் கூறினார்.

திரு தம்பிராசா தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது:-கடந்த காலங்களில் தவறிழைத்ததுபோல விடாது சிந்தித்துச் செயலாற்ற தமிழ் மக்கள் முன்வர வேண்டும். தமிழ் மக்கள் அரசியலிலிருந்து புறக்கணிக்கப் பட்டிருந்த போதும் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள அரசாங்க அதிகாரிகள் தங்கள் உத்தியோக பிருங்குகளைத் தனிச் சிங்களத்தில் உபயோகித்து வருவதை வன்மையாகக் கண்டித்தார்.

இயக்கச் செயலாளர் திரு சி. சீவரத்தினம் கூறுகையில் இழந்த நமது அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள உறுதியுடன் நின்றுபோராட வேண்டியது அவசியம் எனக் கூறினார்.

பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன:

1. தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள அரசாங்க காரியாலயங்களில் தனிச் சிங்களத்தைப் புகுத்துவதற்கு இவ்வியக்கத்தின் முழு எதிர்ப்பையும் தெரிவிப்பது.

2. வட கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்க அதிகாரிகள் சிங்கள பிருங் பாவிப்பதை வன்மையாகக் கண்டித்தல்.

3. தமிழ் மக்களைக் காட்டிக் கொடுக்கும் எதிர்மான சிங்கம் பிரதிநிதிப் பதவியிலிருந்து ராஜினுமாச் செய்து மறு தேர்தலுக்கு நிற்க வேண்டும்.

4. இவ் வியக்கத்தின் சார்பில் "கலா மன்றம்" ஸ்தாபித்து கலை நிகழ்ச்சிகள் நடத்தல்.

5. மோட்டார் வண்டிகளுக்கு ஸ்ரீ இலக்கமிடுவதைப் பிரதேச வாரியாக விடல்.

6. பாரதி பேச்சுப் போட்டியை செம்ரெம்பரில் கீழ், மத்திய, மேல் பிரிவுகளாக நடாத்தல்.

—

## சாம்பற்றீவு கிராமச் சங்கம்

சாம்பற்றீவு கிராமச் சங்கக் கூட்டம் தலைவர் திரு வ. நா. தம்பிராசா தலைமையில் அணிமையில் கூடியது. மேற்படி கூட்டத்தில் கிராம முன்னேற்றச் சம்பந்தமான விஷயங்கள் காரசாரமாக விவாதிக்கப்பட்டது. அதுபோது திரு க. சி. சுப்பிரமணியம் பேசியதாவது: பஸ் நிற்பாட்டும் இடங்கள் அவசியம் தேவை. பஸ் நிற்பாட்டும் இடங்களில் உள்ள கைகாட்டிக் கம்பங்களில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று பாஷைகளிலும் எழுதப்படவேண்டும். திருகோணமலையில் இருந்து நிலாவெளிக்குப் போகும் பாதையில், சாம்பற்றீவுக்குப் போகும் பாதையில் உள்ள முச்சந்தியில் ஓர் கைகாட்டிக் கம்பம் மூன்று பாஷைகளிலும் எழுதப்பட வேண்டும். வாகனங்களுக்கு விநியோகம் செய்யப்படும் தமிழ் எழுத்துப் பொறித்த இலக்கத் தகடுகள் வேண்டும் என்று கூறினார்.

—

## மூன்றும் முறையாக வெற்றிக் கேடயம் பெற்ற கழகம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கமத் தொழிற் பாடசாலை மைதானத்தில் 22-8-59-ல் நடைபெற்ற யாழ் மாவட்ட இளைஞர் விவசாயச் சங்கங்களின் சம்மேளன வருடாந்த மகாநாட்டில் அளவெட்டி சதானந்த இளைஞர் விவசாயக் கழகமே மூன்றும் முறையாக முதலிடத்தையும் பெற்று அதன் அங்கத்தவருக்கும், பாடசாலைக்கும் கிராமத்திற்கும் பெரும் பேரையும் புகழையும் ஈட்டிக் கொண்டமை எல்லேருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கும் மாபெரும் வெற்றியாகும்.

போட்டியில் நாறு கழகங்கள்வரை பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

# இலஞ்ச லாவண்யம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

## சந்தோஷம் வேணுமென்றால்

கொழும்பு மாநகரத்திலே வீடுதேடும் படலத்தில் அனுபவப்பட்டவர்களுக்கு 'சந்தோஷம்' என்ற பதம் சர்வ சாதாரணமாகத்தென்படும். இதுவும் ஒருவகை இலஞ்சம் தான். வாடகைக்கு வீடு எடுப்பதனால் வாடகைப் பணம் மாதம் இவ்வளவு, முற்பணமாக இத்தனை மாத வாடகை என்ற பேச்சு எழுவதோடு நில்லாமல் 'சந்தோஷம்' இத்தனை ஆயிரம் கொடு என்ற பல்லவியையும் கேட்டேயாக வேண்டும். 'சந்தோஷம்' இவ்வளவு தா என்று கேட்டவுடன் 'அடேயப்பா! இது ஒரு பிள்ளை சீதனமாச்சே!' என்று ஏங்கி 'ஷொக்' (Shock) அடித்துச் சிலரின் இருதயம் நின்று விடவும் கூடும். இதைப் பார்த்தால் 'சந்தோஷம்' கிட்டுமா? வீடு இல்லாக் குறையால் கஷ்டப்படுபவன் இந்தச் 'சந்தோஷத்தை'க் கொடுத்து மனச்சந்தோஷம் அடைகிறான். வீட்டுச் சொந்தக்காரனும் பணம் வந்ததே என்று சந்தோசம் அடைகிறான். இரு சாராரைவும் சந்தோஷப்படுத்தும் இந்தச் சந்தோஷம் வாழ்க! என்று வாயார வாழ்த்த என் பேதை மனம் துடியாய்த் துடிக்கிறது.

## மனமது செம்மையானல் மந்திரம் செபிப்பதேனோ!

இலஞ்சம் இவ்விதமாகச் சில பெயர்களிலே நடமாடி வருகிறது என்று காட்டுவதோடு கடமை முடிவதாயில்லை. நிலைமையைப் பற்றியும் உதாரணத்தோடு விளக்கம் தரவேண்டியிருக்கிறது. ஒரு சிறு சம்பவம்:

முன்னொரு காலத்திலே அவிவேகத்தில் 'எக்ஸ்பேர்ட்' (Expert) என்று கௌரவிக்கப் பட்ட பரமார்த்தரின் வாரிசு என்று பலராலும் மதிக்கப்பட்ட கனம் மரையனார் இலஞ்சம் பெற்றதாக அவர்மீது குற்றம் சுமத்தப்பட்டது. இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்று எண்ணத்தக்க முறையில் மூடு மந்திரமாக இருந்தது அவர் நடத்தை. விஷயம் அம்பலத்திற்கு வந்ததும் அவர் உடலே ஆட்டம் கண்டது. முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றிலே மறைக்கமுற்படும் பாவனையில் தம் மீது சுமத்தப்பட்ட குற்றத்தை மறுத்தார். என்றாலும் மனச்சாட்சி சும்மா இருக்குமா? தன்மானம் வானத்திலே போய்விடுவதற்கு முன் தற்கொலை புரிவோமா என்று கூட யோசித்தார். 'ஜெக்' மீதிருந்து 'ரேல்' பண்ணிப் பார்த்தார். சிறு காயத்துடன் தப்பிவிட்டார். ஒரு முழக் கயிற்றிலே ஊஞ்சலாடிச் சாக எண்ணினார். என்ன (அ)நியாயம்! கயிறு அவர் பாரத்தைத் தாங்க முடியாது இடையில் அறுந்து போய் விட்டது. மயக்கமான நிலையிலிருந்து அவர் சுய உணர்வு பெற்றார். யானையால் சாக வேண்டி வந்த கண்டத்திலிருந்தும் தப்பிவிட்டார். இவ்விதமாகச் சாவும் அவருக்குப் பாதகமாகவே இருந்தது.

## பதவி கொடுக்கும் பணநாயகம்

இத்றிகிடையில் 'இலஞ்ச ஊழல்' பற்றிய பேச்சு காட்டுத் தீ போல் பரவத் தொடங்கியது. ஒரு சில பெரிய மனிதர்கள் நீதி கேட்க முன் வந்தனர். தங்கள் நேர்மையைப் பற்றிச் (சுய) விளம்பரம் செய்யும் பொருட்டு ஒரு 'இலஞ்ச விசாரணைச் சபை' அமைக்க முடிவு செய்யப்பட்டது. விசாரணைச்சபைக்கு உத்தியோகத்தர்கள் தெரிவும் நடைபெற வேண்டியிருந்தது. 'விசாரணைத் தலைவர்' தெரிவுக்குப் பலத்த போட்டி. அதிகார பீடத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கு வெள்ளையப்பரைத் தள்ளினால் விஷயம் சுருக்கமாகி விடும் என்று 'ஐடியா'க் கொடுத்தார் ஒருவர். அவ்வளவுதான். பணநாயகம் அருளால் பதவி கிடைத்தது. இந்த ரீதியிலே 'விசாரணைச் சபை' உருவாகியது. சபையின் மகாத்மியத்தைஅறிந்து தன் அஸ்திரத்தைப் பிரயோகித்தார் திரு மரையனார். அவர்மீது சுமத்தப்பட்ட குற்றம் 'புஸ்' வாணமாகி விட்டது. மறுநாள் மரையனார் வீட்டில் ஒரு கொண்டாட்டம்தான்.

"ஆடுவோமே ஜெக்கன்ரேல் ஆடுவோமே
ஆனந்தமாய் இலஞ்சம்
அடைந்துவிட்டோமென்று (ஆடு)
ஜெக் ஜெக் ஜெக்...ரேல்
அன்ட் ஜெக்
ஐ காண்ட் சேக் பட் கான்
ரேல் (ஆடு)"

இந்த முறையிலே பாடி ஆடிக் கொண்டிருந்தார் அவர். இலஞ்ச ஊழலைப்பற்றி விசாரிக்க நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களே இலஞ்சம் கொடுத்துத்தான் பதவி பெற முடிந்ததென்றால், விசாரணையின் முடிவு எத்தகைய பலனைக் கொடுக்கும் என்று கூறவும் வேண்டுமா?

## முடிவு

இறுதியிலே நான் கண்டறிந்து கொண்ட உண்மையையும் கூறிவிடுகிறேன். சட்டத்தின் மூலம் இலஞ்சத்தை ஒழித்துக்கட்டி விடலாம் என்பது பகற் கனவு. இலஞ்சம் பெறும் நெஞ்சம் தன் செய்கை சரியா, தப்பா என்று சிந்திக்க வேண்டும். தாம் செய்வது பாவம், அநியாயம் என்று ஒவ்வொருவரும் உணர்வார்களானால், இலஞ்சம் நாட்டிலே நடமாடும் ஒரு நச்சரவு என்றுஒதுக்கித் தள்ளப்படும். அதற்கேற்ற அறிவை மக்களிடையே பரவச் செய்ய வேண்டும். 'நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால் கல்வி யழகே அழகு' என்ற அறிவுரைக்கிணங்க எல்லோரையும் நல்லவர்களாக்க வல்ல படிப்பினை பரவ வேண்டும். 'இலஞ்சம் கொடுப்பார் இல்லாமையால் கொள்வார் இல்லை; கொள்வார் இல்லாமையால் கொடுப்பார் இல்லை' என்ற சூழ்நிலையை உண்டாக்கி விட்டால் அப்புறம் இலஞ்சம் என்றவார்த்தைக்கு இவ்வுலகில் இடமில்லாது போய்விடும் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை) — நவா (கும்பனித்தெரு)

விஜயா (மட்டக்களப்பு) — ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)

ஆகிய தியேட்டர்களில்



# மணமுள்ள மறு தாரம்



பாலாஜி, சரோஜாதேவி,
காமினி, தங்கவேலு,
முத்துலட்சுமி, முத்துக்கிருஷ்ணன், குமுதினி
ஆகியோர் நடித்தது

பின்னணி: ஜிக்கி-சீர்காழி கோவிந்தராஜன்
ஜமுனாராணி-ஏ. எம். ராஜா-ராஜேஸ்வரி
எஸ். சி. கிருஷ்ணன்

டைரக்ஷன்:
**சுப்புராவ்-ராமனுத்**

திரைக் கதை வசனம்:
**முரசொலி மாறன்**

---

6-வது வாரம்!

மைலன் (கொழும்பு) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

## சம்பூர்ண ராமாயணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 196-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 செப்டம்பர் மாதம் 6-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.